# உள்ளூராட்சி மலர்

## உள்ளூராட்சி வாரம் - 2003



உள்ளூராட்சித் திணைக்களம்

மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மலர்
# 2003

## உள்ளூராட்சி வார சிறப்பு வெளியீடு

பிராந்திய உள்ளூராட்சி
உதவி ஆணையாளர் அலுவலகம்
மட்டக்களப்பு
06 AUG 2003

வெளியீடு
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே......

K.தம்பையா
ஞானசவுந்தரி
T.திருச்செல்வம்
நிர்மலா ஜெயராஜா
ஐ.ஜீ.இராசநாதன்
அருள்நந்தி தவமணிதேவி
திருமதி.R.ஸ்ரீனிவாசன்
சு.சிவரத்தினம்

கட்டுரைகள்

கவிதைகள்

T.சிவலிங்கம்
அன்பழகன் குரூஸ்

சிறுகதை

கவிநயன்

**உள்ளூராட்சி வார சிறப்பு மலர் - 2003**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மலர்

## உள்ளூராட்சி வாரம் 2003

### மலர்க் குழு

T.தேவராஜா
A.R.A.குரூஸ்
T.சிவலிங்கம்

### கணனிப் பதிவு

M.M.A.தாஹீர
செல்வி.கி.சுதர்சினி
திருமதி.பா.பத்மநாதன்
திருமதி.தி.நிலக்ஷி

உள்ளூராட்சித் திணைக்களம்
மட்டக்களப்பு.

## மலர்க் குழுவிடமிருந்து .....

உள்ளூராட்சி நிறுவனங்கள் ஜனநாயகத்தின் விழுமியங்களான 'மக்களால் மக்களுக்காக' என்ற பாரம்பரியத்தினை அடித்தளமாகக் கொண்டமைந்த மக்கள் அமைப்புக்களாகும். இதன் ஒரு அங்கமாகவே நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை உள்ளூராட்சி வாரம் கொண்டாடப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் உள்ளூராட்சி நிறுவன ஆளுகையின் சிறப்பான செயற்பாட்டின் வெளிப்பாடாகவே இவ்வருட உள்ளூராட்சி வாரம் பிரதேசங்கள் தோறும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் ஒட்டுமொத்த விழாவாக மாவட்ட ரீதியாக நடைபெறும் நிகழ்வுக்காக இந்நூல் வெளிவருகின்றது. மிக மிகக் குறுகியகால இடைவெளியில் அதீத முயற்சியுடன் இந்த நூல் வெளியீட்டிற்காக எம்முடன் துணை நின்ற கட்டுரை ஆசிரியர்கள், விளம்பர நிதியுதவி நல்கியோர், கணணிப் பதிவு செய்தோர், மற்றும் ஏனைய வழிகளில் துணை நின்ற எமது அலுவலக உத்தியோகத்தர்களுடன் விசேடமாக இம் மலர் வெளிவர ஊக்கமும், உத்வேகமும் அளித்த எமது பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், திரு.மா.தயாபரன் அவர்களுக்கும், மட்டக்களப்பு மாநகர விசேட ஆணையாளர், திரு.ச.நவநீதன் அவர்களுக்கும், அட்டைப்படத்தை அழகுற வடிவமைத்துத் தந்த கிக்கோ அவர்களுக்கும், குறுகிய கால இடைவெளியில் இம் மலரை மிகச் சிறப்புற அச்சிட்டு வழங்கிய மட்டுநகர் தமிழ்ச்சுப் பதிப்பகத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலர்க் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை



உள்ளூராட்சி வாரம் 2003 மிகவும் சிறப்பான முறையில் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு இன்று அதன் இறுதி நிகழ்வு இடம்பெறு கின்றது. உள்ளூராட்சி மன்றங்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையில் ஆக்கபூர்வ மான உறவை வலுப்படுத்தி, மக்கள் பங்களிப்போடு நிர்வாகம், மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் மேம்பாட்டை விருத்திசெய்யும் ஒரு நிகழ்வாக இவ் உள்ளூராட்சி வாரம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

உள்ளூர் மட்டத்தில் மிகவும் சக்தி வாய்ந்த நிர்வாக அமைப்பான உள்ளூராட்சியின் வளர்ச்சிப் பாதையில் கடந்த சகாப்தம் இருள் சூழ்ந்ததாக இருப்பினும், எதிர்காலம் பிரகாசத்துடன் மிளிர வேண்டும் என்ற உத்வேகத்தை இவ் உள்ளூராட்சி வாரம் ஏற்படுத்துகின்றது. கடந்த கால இடர்பாடுகளுக்கு மத்தியிலும், மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி நிர்வாகம் சிறப்பானதாக இருந்தது என்றே கூற வேண்டும். எமது மாநகர சபை வடக்கு கிழக்கு மாணத்தில் சிறந்த மாநகர சபையாகவும், ஏறாவூர் பற்று (செங்கலடி) பிரதேச சபை வடக்கு கிழக்கு மாகாண மட்டத்தில் நான்காவதாக தெரிவு செய்யப்பட்டிருப்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

உள்ளூராட்சி மன்றங்களின் வழமையான கடமைகளுக்கு அப்பால் சீரழிந்து போயுள்ள சமூக கட்டமைப்புக்களைப் புனரமைக்கும் பணியும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரித்தாகின்றது. இப் பணியில் உள்ளூராட்சி மன்றங்கள் உத்வேகத்துடன் ஈடுபட உள்ளூராட்சி வார நிகழ்வுகளும் ஒரு உந்து சக்தியாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

இவ் எதிர்பார்ப்புக்களுடன் மாவட்ட ரீதியான உள்ளூராட்சி வாரம் மிகச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டு ஒரு நினைவு மலரும் வெளியிடப்படுகிறது. பார்த்துவிட்டுத் தூக்கிப் போடுவதாக இல்லாமல், போற்றிக் காக்கக் கூடியதான பல ஆக்கங்களை இம் மலர் கொண்டுள்ளது. மிகக் குறுகிய கால இடைவெளியில் மனம் கோணாது ஒத்துழைத்த கட்டுரையாளர்கள் எமது நன்றிக்குரியவர்கள்.

தேனீக்களாக சுறு சுறுப்புடன் செயற்பட்ட மலர்க்குழுவின் அறுவடை இனிப்பானதாக இருக் கின்றது என்பதிலும் சந்தேகமில்லை. இவ் விழா சிறப்புற உழைத்த அனைவருக்கும் மட்டக்கப்பு மாவட்ட மாநகர சபை, நகர சபை, பிரதேச சபைகள் சார்பில் உளமார்ந்த நன்றிகள்.

இவ் விழா சிறப்புற நடைபெற வேண்டும் என வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றி !

**மா. தயாபரன்.**
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி
# வடக்குக் கிழக்கு மாகாண பிரதம செயலாளர்.

சனநாயகத்தின் அடிநாதமாக விளங்கும் உள்ளூராட்சி மன்றங்கள் கடந்த காலங்களில் இடம்பெற்ற அசாதாரண நிலைமைகளின் காரணமாக அவற்றின் செயற்றிறனில் பெரும் பின்னடைவுகள் ஏற்பட்டன. ஆனால் விழிப்படைந்து செயலாற்ற வேண்டிய காலகட்டத்தை இன்று இவை எதிர்நோக்கியிருக்கின்றன.

உலகமயமாதல் என்ற சூழலுக்கு ஈடுகொடுக்கும் வகையில் பல்வேறு நாடுகளும் தம்மைத் தயார்படுத்தி முன்னேறி வருகின்றன. நாம் விரும்பியோ விரும்பாமலோ இந்தச் சூழலை நோக்கி இழுக்கப்பட்டு வருகின்றோம். எனவே நவீன தொழில்நுட்பத்தின் நன்மைகளைத் தமது பிரதேசத்திற்கும், மக்களிற்கும் கிடைக்கச் செய்ய வேண்டிய பாரிய பொறுப்பினை உள்ளூராட்சி மன்றங்கள் கொண்டுள்ளன. உள்ளூராட்சி மன்றங்கள் இம் மாற்றத்தினைக் கருத்திற் கொண்டு தமது தொழிற்படும் திறனை பன்மடங்கு பலத்துடன் கூட்டிச் செயலாற்ற வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

மக்களின் தேவைகளும், அபிலாசைகளும் மற்றும் பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் மக்கள் பங்களிப்புடன் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்தப்படும் முறையை உள்ளூராட்சி மன்றங்கள் கைக்கொள்வதன் மூலமே சிறந்த, நீடித்து நிற்கக் கூடிய பிரதேச அபிவிருத்தியினை அடைய முடியும்.

இதனைக் கருத்திற் கொண்டு சிறந்த உள்ளூர் ஆளுகையினைத் தம் பிரதேசங்களில் நடை முறைப் படுத்துவதற்கு ஏற்ற வகையில் தமது மனோபாங்கினை வளர்த்தெடுத்து, வலுப்படுத்தல் முக்கியமான அம்சமாகும்.

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி வார செயற்திட்ட நோக்கங்கள் சிறந்த முறையில் வெற்றியடைய எனது நல் வாழ்த்துக்கள்.

எஸ். ரங்கராஜா
பிரதம செயலாளர்.,
வடக்குக் கிழக்கு மாகாணம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி
## மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்.

வருடாந்தம் நடைபெற்று வருகின்றதான இந்த உள்ளூராட்சி வாரமானது உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளைக் குறித்ததான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கான களமாக அமைகின்றது

நாட்டின் அதிகார பரவலாக்கத்தின் அடிமட்ட ஜனநாயக அமைப்பாக இந்த உள்ளூராட்சி மன்றங்களே விளங்குகின்றன. எனவே அவை உருவாக்கம் பெற்றதன் உண்மையான நோக்கம் நிறைவேற சேவையாற்றுவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் கடமையாகும். அத்தோடு நிர்வாக இயந்திரத்தை இயக்குகின்ற அரச உத்தியோகத்தர்களும், பல்வேறு விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒத்துழைப்பை வழங்குவது மிகவும் இன்றிய மையாததாகும்.

இவ்வருட உள்ளூராட்சி வாரத்தைக் கொண்டாடும் வேளையில், மட்டக்களப்பு மாநகர சபையானது வடக்கு கிழக்கு மாகாணத்தில் முதன்மையான மாநகர சபையாகத் தெரிவு செய்யப்பட்டமையையிட்டு எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு எனது மகிழ்ச்சியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2003 ம் ஆண்டிற்கான உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நூல் வெளியீட்டை மேற்கொள்ளும் உள்ளூராட்சித் திணைக்களத்தின் முயற்சி வெற்றி சிறக்கவும், உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்ந் தும் மக்களிற்குச் சிறந்த சேவையாற்றவும் வேண்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**இ. மோனகுருசாமி,**
**மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்,**
**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்குக் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி.

மிக நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியத்தினைக் கொண்ட உள்ளூராட்சி மன்றங்கள் ஆண்டாண்டு கால மாக அளப்பரிய பணிகளை மேற்கொண்டு வந்திருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 பிரதேச சபைகளும் ஒரு நகர சபையும் ஒரு மாநகர சபையும் இயங்கி வருகின்றன.

இவ் உள்ளூராட்சி மன்றங்கள் மாறிவரும் சூழலுக்கு ஏற்ப மாற்றத்தினையும் முன்னேற்றத்தினையும் நோக்கிச் செல்ல வேண்டிய காலகட்டத்தினுள் இருக்கின்றன.

கடந்த காலங்களில் காணப்பட்ட விருப்பத்தகாத சூழ்நிலைகளின் காரணமாக உள்ளூராட்சி மன்றங் களின் செயற்பாட்டில் முன்னேற்றம் பெரியளவில் பாதிப்படைந்து காணப்பட்டது. எனினும் தற்போது நிலவும் சமாதான சூழல் காரணமாக உள்ளூராட்சி மன்றங்கள் தமது முன்னைய நிலமைக்கு மிக வேகமாக செல்ல வேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

உள்ளூராட்சி வார காலப்பகுதியில் ஏற்படும் விழிப்புணர்வானது உள்ளூராட்சி செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஏற்படவேண்டும் என்பதுடன் மக்களையும் இணைத்துச் செயற்படக்கூடிய வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்கள் தமது புனர்வாழ்வு, அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு எமது திணைக்களத்தின் சார்பில் நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தெ. து. விஜயலட்சுமி,**
உள்ளூராட்சி ஆணையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி
# மட்டக்களப்பு மாநகர ஆணையாளர்

எமது இலங்கைத் தீவிலுள்ள பல்வேறு நிர்வாக முறைமைகளில் உள்ளூராட்சி அமைப்பு முறைமை மக்களுடன் நேரடியாகப் பங்கு கொண்டு மக்களுக்கான அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றதென்ற பெருமையைக் கொண்டுள்ளது என்பதே யதார்த்தமாகும்.

உள்ளூராட்சி என்ற கட்டமைப்பு பிரித்தானிய ஆட்சியாளர் காலத்திலேயே எமது தீவிலுள்ள கொழும்பு, கண்டி, என்ற நகரங்களில் 1865ல் தாபிக்கப்பட்டு பின்னர் அவைகள் படிப்படியாக கிராமங்கள் தோறும் கிராமச் சங்கங்கள் என்றும் பின்னர் கிராம சபைகள் என்றும் மற்றும் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களில் பட்டின சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகள் என்ற உள்ளூராட்சி அமைப்புக்களும் ஏற்படுத்தப்பட்டு இன்றைய கால கட்டத்தில் அவைகள் பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள் என்ற அமைப்புக்களாகத் தோற்றம் பெற்றுள்ளன.

நிலம், நீர், காற்று, தாவரங்கள், மிருகங்கள் என்பவைகள் சூழப்பெற்ற சுற்றாடலிலேயே மனிதன் வாழ்கின்றான். அவன் வாழும் நிலம், அவன் குடிக்கும் நீர் அவன் சுவாசிக்கும் காற்று, சுத்தமாக இருத்தல் வேண்டும். அவனைச் சூழ்ந்துள்ள தாவரங்கள், மிருகங்கள் என்பனவும் அவனது சுற்றாடலுக்கு மாசு தராததாக இருத்தல் வேண்டும்.

மனிதனின் வாழ்க்கையில் அவன் நல்ல சுற்றாடலில் வாழவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் அவனது சுற்றாடல் துப்பரவாக இருத்தல் வேண்டும், அவனுக்கு சுத்தமான நீர் கிடைத்தல் வேண்டும், சீரான பாதைகள் போக்குவரத்துக்காக வேண்டும், நூலக வசதிகள் வேண்டும், சந்தை வசதிகள் இருத்தல் வேண்டும் தொல்லைகள் தகர்க்கப்படல் வேண்டும், சேய், தாய் நலன் கவனிக்கப்படல் வேண்டும், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள் அமைக்கப்படல் வேண்டும். இடுகாடுகள், சுடுகாடுகள் இருத்தல் வேண்டும். இம்முக்கியமான பணிகளை இன்று எமது தீவில் மேற்கொள்ளும் நிறுவனங்களாக உள்ளூராட்சி மன்றங்களே விளங்குகின்றன.

மக்களின் வாக்குகளைப் பெற்று உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்படும் மன்ற உறுப்பினர்கள் தமது பிரதேசங்களில் தம் மக்களின் விருப்புக்களுக்கு மாறாகச் செயற்படாது மக்களுக்கு பணிபுரிவதே அவர்களது தலையாய கடமைகளாக நினைத்தல் வேண்டும். எமது வடக்கு கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தும் இங்கு நிலவிய அசாதாரண நிலைமை காரணமாக மக்கள் பிரதி நிதிகளால் நிர்வாகிக்கப்படவில்லையென்ற குறையிருப்பினும் நிர்வாக முன்னெடுப்புகள் யாவும் எப்படியோ மக்களை நோக்கியே செல்கின்றது என்றே கூறலாம்.

உள்ளூராட்சி நிர்வாக கட்டமைப்புடன் தம்பங்களிப்பு என்னவென்று இது வரை தெரியாத பல மக்கள் எம் மத்தியில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அவர்கள் உள்ளூராட்சி மன்ற செயற்பாடுகளுடன் இணைந்து கொள்ளவுமே உள்ளூராட்சி வார நிகழ்வுகள் மிக முக்கியமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன என்ற எனது இச் செய்தியை சுருக்கமாக கூறி நிறைவு செய்கின்றேன்.

**திரு.ச. நவநீதன்**
**மாநகர ஆணையாளர்,**
**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடி நிலையில் இருந்து மக்களை மீட்டெடுத்தலில் உள்ளூராட்சி நிறுவனங்களின் பங்கும் பணியும்

## மட்டக்களப்பு மாவட்டம் பற்றிய ஒரு சிறப்புப் பார்வை

குமாரவேல் தம்பையா.
தலைவர்,
பொருளியல் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்:

ஒரு நாட்டின் சமுகக் கட்டுமானங்களில் அல்லது அதன் முழு சமுக பொருளாதார நடவடிக்கைகள் மீது காலத்திற்கு காலம் பல்வேறு நிலை மாற்றங்கள் (Transsion) ஏற்படுவது இன்றைய பொருளாதார நடவடிக்கைகளில் சாதாரண நிகழ்வாகிவிட்டது. இத்தகைய நிலைமாற்றங்கள் பல சந்தர்ப்பங்களில் சமுகத்தையும் அதன் பொருளாதாரத்தையும் தொடர்ந்து கொண்டு இயக்குவதற்கும் அவற்றை விருத்தி செய்வதற்கும் உரிய சாதகமான செயற்பாடுகளாக இருக்கலாம் அல்லது சமுக பொருளாதார நடவடிக்கைகட்கு சவால் விடும் நடவடிக்கைகளாக இருக்கலாம். அத்தகைய நடவடிக்கைகளில் பல சமுகக்கட்டமைப்பில் இருந்து எழுந்த பிரச்சினைகளாகவும் வேறு சில திடீரெனவோ அன்றேல் எதிர்பாராத விதமாகவோ ஏற்படும் கால வர்த்தமானங்களின் பிரச்சினைகளாகவும் இருந்து விடுகின்றன. இந்த இரண்டாவது வகையான பிரச்சனை சமுகத்தின் பல்வேறுபட்ட நிலைகளில் வாழ்கின்ற மக்கள் குழுக்களை நெருக்கடி நிலைக்கு உள்ளாக்கும் பிரச்சனைகளாக மாறிவிடுகின்றன. இந்த அடிப்படையில் இன்று இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் காணப்படும் நெருக்கடி நிலைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- போரும் போர்அழிவுகளும் அவற்றின் விளைவுகளும்
- வறுமையும் அதன் கொடுமையும்.
- பெண்கள் தொடர்பான பிரச்சனைகள்.
- சிறுவர் துஸ்பிரயோகம், சிறுவர் ஊழியம் தொடர்பானவை.
- மதுப்பாவனை, போதைவஸ்த்து தொடர்பான பிரச்சனைகள்.
- சமுகத்தின் புறநிலைகளில் வாழ்ந்து வருகின்ற விதவைகள், ஊனமுற்றோர் தொடர்பான பிரச்சனைகள்.
- சாதி, மத போராட்டங்கள்.
- தற்கொலைகளும் அதற்கான முயற்சிகளும்.
- முதியோர், முதியோர் பராமரிப்பு தொடர்பான பிரச்சனைகள்.
- இடைத்தரகர்கள், முதலாளிகள் ஆகியோரால் சுரண்டப்படும் உழைப்பாளர்கள், பொதுமக்கள் தொடர்பான பிரச்சனைகள்.
- வேலையற்ற இளைஞர் யுவதிகள் தொடர்பான பிரச்சனைகள்.
- சிறுவர் கல்வி புறக்கணிக்கப்படலும் பாடசாலை இடைவிலகலும்.
- வீடற்றோரும் சேரிவாழ் குடும்பங்களும்.
- சூழல் தொடர்பான பிரச்சனைகள்.

மேற்கூறப்பட்ட பிரச்சனைகளின் நெருக்கடி நிலைகளை உற்று நோக்கும் போது பல மக்கள் தொகுதியினர் அல்லது சமுகக்குழுக்கள் அத்தகைய நெருக்கடிகளில் இருந்து விடுபடமுடியாதவாறு நெருக்கடிகளால் வரிக்கப்பட்டவர்களாக அல்லது சமுக பொருளாதார விழுமியங்களால் பிணைக்கப்பட்டவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றனர். இத்தகைய நிலைமைகட்குரிய நெருக்கடிக்குள்ளான மக்களை வழிநடத்துவதற்கோ அன்றேல், அவர்களது பிரச்சனைகளை முன்னெடுத்துச் சென்று வெற்றிகாண்பதற்கோ அம்மக்கள் மத்தியில் காணப்படுகின்ற நிறுவன அமைப்புக்கள், அதிகாரசபைகள், அரசுசார அமைப்புக்கள், சமுகமட்ட நிறுவனங்கள் பலமிழந்து காணப்படுகின்றன அல்லது செயலற்ற நிலையில் காணப்படுகின்றன. இக்கட்டுரையானது மட்டக் களப்பு மாவட்டத்தில் மக்கள் இன்று எதிர் கொள்ளும் பிரதான நெருக்கடிநிலைகளை இனம்காண்பதாகவும் அத்தகைய நெருக்கடிகளில் இருந்து மக்களை விடுவிப்பதற்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆற்றவேண்டிய பணிபற்றியும் எடுத்துக் கூறுவதாய் உள்ளது.

## மட்டக்களப்பு மாவட்டமும் நெருக்கடி நிலைகளும்:

மட்டக்களப்பு மாவட்டத்தில் 129,588 குடும்பங்களைச் சேர்ந்த 525,000 மக்கள் தொகையினர் 14 பிரதேச செயலாளர் பிரிவைக்கொண்ட 348 கிராம சேவையாளர் பிரிவுகளில் பரந்து வாழ்கின்றனர். இம் மாவட்டம் பல்லின மக்கள் தொகுதியினர் வாழ்ந்து வருகின்ற ஒரு முக்கிய பிரதேசமாக இருந்து வருகின்றது. மட்டக்களப்பின் புவியியல் பௌதீக அமைப்பானது கடலும் கடல் சார்ந்தும், ஆறும் ஆறு சார்ந்தும், வயலும் வயல் சார்ந்தும் வாழ்ந்து வருகின்ற குடித்தொகுதியனரைக் கொண்டதாய் உள்ளது. இதனால் இப்பிரதேசத்தில் உள்ள வளங்களும் தொழில் முறைகளும், வாழ்வின் இயல்புகளும் இத்தகைய இயற்கை அமைப்போடு இணைந்ததாய்க் காணப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் கடந்த கால வரலாற்றை பின்நோக்கி பார்க் கின்ற போது கடந்த இரு தசாப்த காலமாக இம்மாவட்டம் என்றும் சந்தித்திராத மிக மோசமான நெருக்கடி நிலைகட்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. அவற்றுள் பிரதானமானவையாக:

- போரும் போர்அழிவுகளும் அவற்றின் விளைவுகளும்
- வறுமையும் அதன் கொடுமையும்.
- பெண்கள். சிறுவர் துஸ்பிரயோகம், சிறுவர் ஊழியம் தொடர்பானவை.
- மதுப்பாவனை தொடர்பான பிரச்சனைகள்.
- சமுகத்தின் புறநிலைகளில் வாழ்ந்து வருகின்ற விதவைகள், ஊனமுற்றோர் தொடர்பான பிரச்சனைகள்,
- இடைத்தரகர்கள், முதலாளிகள் ஆகியோரால் சுரண்டப்படும் உழைப்பாளர்கள், பொதுமக்கள் தொடர்பான பிரச்சனைகள் என அடையாளம் காட்டமுடியும்.

இவ்வாறான பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் மட்டக்களப்பு மாவட்டம் தொடர்பாக உடனடியாகவும் அவசரமாகவும் கவனம் செலுத்த வேண்டிய நெருக்கடிகளாக

- போரும் போர்அழிவுகளும் அவற்றின் விளைவுகளும்
- வறுமையும் அதன் கொடுமையும் ஆகியன காணப்படுகின்றன.

## போரும் போர் அழிவுகளும் :

கடந்த இருபது வருடங்களாக இலங்கையில் இடம் பெற்றுவரும் இனப் போர் காரணமாக ஏற் பட்ட அழிவுகளும் இன்னல்களும் இலங்கையின் தேசிய பொருளாதாரத்தில் இருந்தும் சர்வதேச மாற்றங்களில் இருந்தும் மட்டக்களப்பை பல ஆண்டுகள் பின்தள்ளியுள்ளது. இப்போரினால் எண்ணிப்பார்க்க முடியாத அனர்த்தங்கள் காரணமாக இம்மாவட்ட மக்கள்மத்தியில் மோசமான சமுக, பொருளாதார, அரசியல் கலாசார உளம் சார்ந்த தாக்கங்கள் மட்டுமன்றி சிந்தனை வளர்ச்சியிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மோசமான இப்போரின் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 8000ற்கு மேற்பட்டோர் இறந்தும் 5000 பேருக்கு மேல் காயமடைந்தும் உள்ளதுடன் 1566 பேர் காணாமலும் போயுள்ளனர். முக்கியமாக இப்போர் உருவாக்கிய 6500க்கு மேற்பட்ட விதவைகளும் தாய் தந்தையரை இழந்துள்ள 4500 க்கு மேற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களும் முக்கியமானவர்கள். அத்துடன் 1740க்கு மேற்பட்டோரை ஊனமாக்கி வாழ்வு பூராவும் அவர்களை இயலாமைக்கும் உளரீதியான தாக்கத்திற்கும் உள்ளாக்கியுள்ளது. பாரதூரமான உயிரிழப்புகட்கு மேலாக அதிக ளவான சொத்திழப்பையும் இப்போர் ஏற்படுத்தியுள்ளது. முக்கியமாக 37997 வீடுகளை முற்றாக அழித்தும் 27682 வீடுகளை சேதமாக்கியும் இருப்பதுடன் 12614 பேரை முற்றாக அனாதைகளாக்கி இடம்பெயரச் செய்து தொழில் இழந்து வருமானம் இழந்து நடு வீதிக்கு கொண்டு வந்துள்ளது. மேலே காட்டப்பட்ட தரவுகளுடன் கூடியவை வெறும் புள்ளிவிபரங்கள் மட்டுமல்ல அதற்கு மேலாக மனுக்குலத்தின் அழிவிற்கும் அவர்களது வாழ்வு சிதைவதற்கும் காரணமாக இருந்த அரக்கத்தனமான போராகும்.

இப்போரின் காரணமாக பின்னடைந்துள்ள இம்மாவட்டத்தின் விவசாயப் பொருளாதாரம் 10,960 ஏக்கர் நெல் நிலங்களை கைவிடப்பட்ட நிலைக்குள்ளாக்கி பலநூறு கோடி ரூபாக்களை இழக்கச் செய்துள்ளது. இப்போரினால் பெரும்பாலான விவசாயிகள் தமது வருமான மார்க்கங்கள் முழுவதையும் தொலைத்து விட்டனர். இராணுவ மயமாக்கத்தாலும் மிகக் கடுமையான பாதுகாப்புக் கட்டுப்படுகள் காரணமாகவும் உற்பத்தி, சந்தைப் படுத்தல் என்பவற்றில் நெருக்கடியையும் இழப்பையும் சந்தித்துள்ளனர். இதனால் பாரம்பரிய பல விவசாயக் கிராமங்கள் அழிந்து ஆட்களற்ற வனாந்தரங்களாக மாறியுள்ளன. இந்நிலைமைகள் யாவும் இணைந்து இம்மாவட்டத்தில்காணப்படும் *இயற்கை வறுமைக்கு* மேலாக ஒரு *போர் வறுமையையும்* உருவாக்கியுள்ளது. அத்துடன் பல குடும்பங்களது பாரம்பரிய அல்லது நிரந்தரத் தொழிலை மாற்றி குறைந்த வருமானம் தரும் வேறு தொழில் முறைக்கு அவர்களைப் பழக்கப்படுத்தியுள்ளது. இப்போரானது பல இளைஞர்களது வேலை வாய்ப்பிற்கான சந்தர்ப்பங்களையும் கல்விக்கான சந்தர்ப்பத்தையும் இழக்கச் செய்துள்ளதுடன் அவர்களது திறன், மனப்பாங்கு, நடத்தைமாற்றம் என்பவற்றிலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

**பணி:**

2002ம் ஆண்டில் இருந்து போர் ஓய்ந்து சமாதான சகவாழ்விற்குரிய அத்திவாரங்கள் இடப்பட்டு கட்டிடம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் உள்ள இக்காலகட்டத்தில் உள்ளூர் அதிகாரசபைகள் (Local Authorities) அரசுசாரா நிறுவனங்கள், (NGOs) சமுகமட்ட நிறுவனங்கள் (CBOs) அரச நிறுவனங்கள் (புமுள) ஆகியவற்றிற்கு பாரிய பொறுப்பும் கடமையும் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவன அமைப்புக்கள் தனியாகவும் மற்றைய அமைப்புக்களோடு சேர்ந்து கூட்டாகவும் செயற்படவேண்டிய காலம் இதுவாகும். மக்கள் பங்குபற்றுதல் (People participation) மக்களை ஆற்றுப்படுத்தல் ( Social Mobilization) மக்களை வலுவூட்டல் (People Empowerment) ஆகிய புதிய சித்தாந்தங்களும் அபிவிருத்திக்கான முன்னெடுப்புக்களும் முன்வைக்கபட்டுள்ள இக்காலப்பகுதியில், மக்களை வழிநடத்துவதற்கும் அவர்களது செயல், சிந்தனை ஆற்றல் என்பவற்றை வளப்படுத்தி நெருக்கடி நிலைகளில் இருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கும் இந்நிறுவனக் கட்டமைப்புக்கள் பாரிய பணியை செய்யவேண்டியுள்ளது.

இந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 உள்ளூர் அதிகாரசபைகள், 131 சனசமுக நிலையங்கள், 282 கிராமிய அபிருத்திச் சங்கங்கள், 96 பெண்களை மையப்படுத்திய கிராம அபிவிருத்திச் சங்கங்கள், 180 இளைஞர் கழகங்கள், 128 மீனவ கூட்டுறவுச்சங்கங்கள், 66 உள்ளூர், தேசிய, சர்வதேசிய அரசுசாரா நிறுவனங்கள் நூற்றுக்கணக்கான அரச நிறுவனங்கள் எனத் தொழிற்பட்டும் செயற்பட்டும் வருகின்றன. பெரும்பாலான நிறுவன அமைப்புக்களின் எண்ணமும் சிந்தனையும் மக்களை வழிநடத்துதல், நெருக்கடியில் இருந்து மீட்டெடுத்தல் எல்லாமே அரசு சாரா நிறுவனங்களின் பணி மட்டும் என்பதேயாகும். இவ்வாறான எண்ணம் கொண்ட இந்நிறுவன அமைப்புக்கள் தாம் வெறுமனே பாரம்பரிய அரச பணிகளோடு அரசாங்கம் தருகின்ற நிதியினை குறிப்பிட்ட நிதியாண்டில் செலவழித்தல் மட்டும் தம் பணி என எண்ணி விடுகின்றன. பெரும்பாலன நிறுவனக் கட்டமைப்புக்கள் மக்களோடு ஒன்றிக்காத அல்லது மக்களில் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட அமைப்புக்களாகக் காணப்படுகின்றன. வேறொரு வகையில் கூறினால் பல சமுகமட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்கள் ஆட்சேர்ப்பதற்கும் அவசர தேவைக்கு மட்டுமே கூட்டம் கூடுவனவாக உள்ளன. சான்றாக சில கிராம அபிவிருத்தி சங்கங்கள், சனசமுக நிலையங்கள், மீனவ கூட்டுறவுச்சங்கங்கள் போன்றவற்றைக் கூறலாம். இன்றைய தேவை அதுவல்ல. மாறிவரும் உலக நடவடிக்கைகளோடு பல நிறுவன அமைப்புக்கள் தமது செயற்பாட்டையும் மாற்றாது இருக்கின்றன. முக்கியமாக இன்று உள்ளூர் அதிகாரசபைகளைப் பொறுத்த வரையில் அவை தனியார் துறையோடு போட்டிபோடவேண்டிய அமைப்புக்களாக இருக்க வேண்டியதுடன் தனியார் துறையுடனும் அரசுசாரா அமைப்புக்களுடனும் இணைந்து செயற்பட வேண்டிய தார்மீகப் பொறுப்பை யும் அவை கொண்டுள்ளன. இந்த வகையில் இவ் உள்ளூர் அதிகாரசபைகள் போர நெருக்கடியில் இருந்து மக்களை மீட்டெடுப்பதற்கு கைக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை உற்றுநோக்குவோம்.

## மீட்பு:

- **சமாதானம் பற்றிய விழிப்புணர்வு:** இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற 75 வீதத்திற்கு மேற்பட்ட கிராமப்புற மக்களுக்கு சமாதானத்திற்கான முன்னெடுப்புக்கள் அதன் முன்னேற்றங்கள் அவற்றில் ஏற்படும் தடங்கல்கள் சமாதான முயற்சிகட்கு தாம் எந்தவகையில் பங்களிப்புச் செய்யலாம் என்பன பற்றி எதுவுமே தெரியாதோராய் வாழ்ந்து வருகின்றனர். எனவே சனசமுக நிலையங்கள், உள்ளூர் அதிகார சபைகள் (முக்கியமாக சனசமுக நிலையங்கள்) சமாதானத்திற்கான மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கையில் ஈடுபடவேண்டியது மிக அவசரமான ஒன்றாகும்.

- **போர் பாதிப்பிற்குள்ளான மக்களுக்கு வழிகாட்டல்:** போர் பாதிப்பிற்குள்ளான மக்களுக்கு, மக்கள் பங்குபற்றுதல் (People participation) மக்களை ஆற்றுப்படுத்தல் ( Social Mobilization) மக்களை வலுவூட்டல் (People Empowerment) ஆகிய செயற்பாடுகளை அரசுசாரா நிறுவனங்கள் மேற்கொள் கின்ற போது உள்ளூர் அதிகாரசபைகள் அவர்களோடு இணைந்து அவற்றை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் கடும் அர்ப்பண சிந்தனையோடு கடமையாற்ற வேண்டியது இன்றைய மிகமுக்கியமான தேவையாகவுள்ளது.

- **பெண்தலைமைத்துவ குடும்பங்களை வலுவூட்டலும் பொருளாதார ரீதியான அவர்களது தகமையை அதிகரித்தலும்:**
போர் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட பிரதான நெருக்கடிகளில் முதன்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான பிரச்சனை கணவனை இழந்த பெண்கள் பலர் பெண்தலைமைத்துவ குடும்பங்களாக மாறியமையாகும். இந்நிலைமையானது மேற்படி குடும்பங்களை வருமானமற்ற நிலைமைக்கு மாற்றியது அல்லது வருமானம் குறைந்த நிலைக்குக் கொண்டு வந்தது. இது இக்குடும்பங்களில் வறுமையை அதிகரிப்பதற்கு வழிவகுத்ததோடு அல்லாமல் இக்குடும்பங்களில் இருந்த சிறுவர்களின் கல்வி பறிபோவதற்குகோ அன்றேல் சிறுவர்களை ஊழியமாக மாற்றுவதற்கோ காரணமாக இருந்தது. இன்று இந்நிலையை மாற்றுகின்ற பொறுப்பில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பெரும் பங்குண்டு. இதன் பொருட்டு அவை பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களை இனம்கண்டு அவர்கட்கு ஆற்றுப்படுத்தல், வலுவூட்டல், உளநெறிப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் அவர்களை நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்க முடியும் அல்லது அவ்வாறான செயற் பாடுகளைச் செய்யும் அரசுசாரா நிறுவனங்களோடு இச்செயற்பாடுகளை வெற்றிகரமாகச் செய்வதற்கு கைகொடுக்க முடியும். அதேசமயம் அக்குடும்பங்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்கும் அவர்களது குடும்ப வருமானம், வேலைவாய்ப்பு என்பவற்றை அதிகரிப்பதற்கும் தேவையான ஆலோசனைகள், நிதிஉதவி பெறுவதற்கான வழிவகைகளை வழங்குவதற்கும் முன்வர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **போர்ச் சிறுவர்களும் சிறுவர் இல்லங்களும்:** போர் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட மற்றொரு பிரதான நெருக்கடி அனாதைகளாக கைவிடப்பட்ட போர் உருவாக்கிய சிறுவர்கள். இவர்கள் சத்துள்ள உணவிழந்து, கல்வி உரிமையிழந்து, ஏன் தமது வாழ்வதற்கான முழு சந்தர்ப்பங்களையும் இழந்து தவிக்கின்றனர் அல்லது நடு வீதியில் விடப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தின் எதிர்கால சந்ததி ஒன்றின் மீது கொண்டுவரப்பட்டுள்ள இக் கொடுமையை எத்தனை உள்ளூர் அதிகாரசபைகள் அல்லது சனசமுக நிலையங்கள் சிந்தித்து பார்த்துள்ளன. அல்லது என்ன கைங்கரியங்களைச் செய்துள்ளன? இது தவிர இம் மாவட்டத்தில் 25- 30 வரையன சிறுவர் இல்லங்கள் விசேடமாக போரின் பின்னர் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 90 வீதமானவை எந்த விதமான அடிப்படை வசதிகளும் இன்றி செயற்பட்டு வருகின்றன. உதாரணம் வாகரை, கொக்கட்டிச்சோலை போன்ற இடங்களில் ஒரு சில தனியாராலும் சில நிறுவனங்களாலும் நடாத்தப்பட்டு வரும் சிறுவர் இல்லங்கள் போதுமான நிதியின்றி உடுப்பதற்கு தேவையான உடையின்றி, இருப்பதற்கு வசதியான இருப்பிடமின்றி காணப்படுகின்றன. இதனை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அப்பிரதேசம் சார்ந்த சமுகமட்ட நிறுவனங்களதும் தலையாய பணியாகும்.

- **கைவிடப்பட்ட வளங்களும் பயன்படுத்தா வளங்களும்:** போர் காரணமாக இம் மாவட்டத்தில் மனிதவளம் மட்டுமன்றி பெருமளவு பௌதீக வளங்களும் அழிக்கப்பட்டுள்ளன அல்லது பயன்பாட்டில் இருந்து கைவிடப்பட்டுள்ளன. இவற்றில் பெருமளவு வயல் நிலங்கள், பண்ணை நிலங்கள், வர்த்தக நிலையங்கள், சிறிய தொழிற்சாலைகள், குளங்கள், வீதிகள், பாடசாலைகள், இதுபோன்ற சமுக பொருளாதார அடிக்கட்டுமானங்கள் முக்கியமானவையாகும். இன்று புனர்அமைப்பு, புனர்நிர்மாணம், மீளமைப்பு என பலவாறான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டும் முன்னெடுத்தும் செல்லப்படுகின்ற இச்சந்தர்ப்பத்தில் இவற்றை சரியாக அடையாளம் காண்பதற்கும் பாரபட்சமின்றி அவற்றை பங்கீடு செய்வதற்கும் வெற்றிகரமாக அச் செயற்றிட்டங்களை நிறைவேற்றுதற்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பெரும்பங்கும் பணியும் உண்டு.

## வறுமையும் அதன் கொடுமையும்:

மட்டக்களப்பு மாவட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த மற்றொரு நெருக்கடி மிக மோசமான வறுமையாகும். இம்மாவட்டத்தில் காணப்படும் வறுமையை இரு வகையாக பிரித்தறிய முடியும்.

1. இயற்கையாகவே உணவு, வருமானம், இருப்பதற்கு சரியான வசதியற்ற நிலையில் உள்ள குடும்பங்களில் காணப்படும் வறுமை நிலை.

2. கொடுமையான போரின் காரணமாக தமக்குரிய பலவற்றையும் இழந்த (மனித, பௌதீக இழப்புக்கள்) நிலையில் வறுமைக்குள்ளாக்கப்பட்ட குடும்பங்கள்.

எவ்வாறாயினும் இம்மாவட்டத்தில் காணப்படும் பெரும்பாலான குடும்பங்களில் ஏதோ ஒருவகையிலான வளம் அவர்களிடம் காணப்படுவதால் எனது நோக்கில் இம்மக்களில் பெரும்பாலானோரை *வளமுள்ள வறியவர்களாகவே* இனம்காண முடிகின்றது.

இம்மாவட்டத்தில் உள்ள 129,588 குடும்பங்களில் 84,736 குடும்பங்கள் (65.4%) வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்துவருவதாக புள்ளிவிபரங்கள் சான்று பகருகின்றன. ஆயினும் பிரதேச செயலக அடிப்படையில் நோக்கும் போது 83 வீதம் தொடக்கம் 50 வீதம் வரையான வேறுபாடு காணப்படுகின்றது. (வவுணதீவு- 83%, வாகரை-77%, களுவாஞ்சிக்குடி 50%) இம்மாவட்டத்தில் பிரதேச ரீதியன வறுமை வேறுபாட்டிற்கு மேலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைசார்ந்த வறுமையிலும் வேறுபாடு காணப்படுகின்றது. பொதுவாக இந்நிலைமைக்கு காரணமான அம்சங்களை பின்வருமாறு காட்டமுடியும்.

- இம்மாவட்டத்தின் மொத்த ஊழியத்தில் 60% மானோர் நாளாந்தம் கூலி வேலைசெய்யும் பிழைப் பூதியமாக உள்ளனர். இவர்களில் பெரும்பாலோரது வருமானம் அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை.
- பெரும்பாலான குடும்பங்களின் வருமான நிலைமையானது அவர்கள் பெற்றுக் கொள்ளும் உணவுப் பொருட்களின் உயர் விலை காரணமாக பூரணமாக பெறமுடியாத நிலையை உருவாக்கியுள்ளது.
- பெரும்பாலன குடும்பங்களைப் பொறுத்தவரை வருமானத்தில் பெரும்பகுதி அல்லது முழுவதும் அவர்களது தேவைக்கு மட்டுமே போதுமானதாக இருப்பதனால் அவர்கள் எதிர்கால தேவைக்கு சேமிக்கமுடியாத நிலையிலுள்ளனர்.
- இம்மாவட்டத்தில் கிராமப்புறத்தில் மட்டுமன்றி பொதுவாகவே காணப்படும் மோசமான மதுப் பழக்கம், வெற்றிலை அருந்துதல், புகைத்தல் என்பன காரணமாக வருமானத்தில் கணிசமான பகுதியை இழந்து வறுமைக்கு உள்ளாகியுள்ளனர்.
- பராம்பரியமுறைக்குட்பட்ட அல்லது இலாபம் தராத விவசாயம், மீன்பிடி சார்ந்த வேலைவாய்ப்பு சார்ந்த முறைகளில் இருந்து விடுபடமுடியாத அல்லது உடைக்க முடியாத நிலை.
- நவீன முறையான அல்லது புதிய தொழில்நுட்பம் சார்ந்த வேலைவாய்ப்புகட்கு அல்லது பெறுமதி சேர்க்கை முறைகட்கு (Value Addition Metods) பொருந்தமுடியாத தன்மை அல்லது அவற்றிற்கான திறன்களை பெறுவதற்கு முன்வராத்தன்மை.
- வர்த்தம் சார்ந்த அல்லது இலாபம் தரும் தொழில்முயற்சிகளில் முதலிட முன்வராமை அல்லது அதற்கான ஆபத்தினை எதிர்கொள்ளும் தன்மை (Risk taking ability) இல்லாமை.
- உற்பத்திகள் யாவும் சுயநிறைவோடு மட்டுப்படுத்தப்படும் தன்மை அல்லது மேலதிக உற்பத்திகளை சந்தைப்படுத்தி வருமானம் பெறுவதற்கான இயலுமை (Capacity) இல்லாமை அல்லது சோம்பேறித்தனம்.
- முறையான வகையில் உற்பத்திகளை மேற்கொள்வதற்குத் தேவையான அடிக்கட்டுமான வசதிகள் அல்லது அவற்றை சந்தைப்படுத்தி வருமானம் பெறுவதற்குத் தேவையான அடிப்படை வசதிகளோ அது பற்றிய அறிவோ இல்லாமை.

இவை போன்ற அமைப்பு சார்ந்த காரணிகளோடு கடந்த இருபது வருடங்களாக மட்டக்களப்பு சமூகத்தை உலுப்பிய போர் வறுமைக்கோட்டுகுள் புதிய மக்கள் தொகையொன்றைக் கொண்டு வந்துள்ளது. அத்தையை குழு ஒன்று பின்வரும் காரணங்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

- தொடர்ந்த போரினாலும் இனவன்முறைகளாலும் 15,000 மேற்பட்ட மக்கள் இல்லிடம், தொழில் முயற்சிகள், சொத்துக்கள் யாவற்றையும் இழந்து இன்றுவரை அகதி முகாம்களிலும், தற்காலிகக் கொட்டில்களிலும் வசித்து வருவதோடு உண்பதற்கு கூட போதாத உணவைப்பெற்று எந்த தொழில் முறைகளும் இல்லாது வாழ்ந்து வருதல்.
- பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது நிரந்தர தொழில்முறைகளை இழந்துள்ளனர் அல்லது முன்னைய வருமானத்தை விட வருமானம் குறைந்த தொழில்கட்கு மாறியுள்ளனர். உதாரணமாக எல்லைப்புற கிராமங்களில் வாழ்ந்து வந்த விவசாய குடும்பங்கள் தமது விவசாய நிலங்களை இழந்துள்ளனர் அல்லது வேறு இனக்குழுக்களால் அந் நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன: சான்றாக பக்கியல்ல, 18ம் 19ம் கொலனிகள், புல்லுமலை, மயிலங்கரைச்சி, புனானை இது போன்ற பல.
- போர் காரணமாக பல குடும்பங்கள் தமது தலைவனை இழந்த நிலையில் பிரதான வருமானம் எதுவுமற்ற திக்கற்ற நிலையில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக மாறி மோசமான வறுமைக் குள்ளாக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிறுகைத்தொழில், குடிசைக்கைத்தொழில், சிறுவியாபாரமுயற்சிகள், மீன்பிடி நடவடிக்கைகள் போன்றவற்றில் ஈடுபட்டு வந்த பலர் போர் அனர்த்தம் காரணமாக தமது உற்பத்திகளை, உற்பத்திக்கான சாதனங்களை இழந்த நிலையில் வருமானம் முழுவதையும் அல்லது அதைப்பெறுவதற்கான சொத்துக்களை இழந்த நிலையில் நாளாந்த கூலிகளாக மாற்றப்பட்டுள்ளனர்.
- பல கிராமங்களில் போர் பாதிப்பிற்குள்ளான மக்கள் தமது ஏனைய உறவுக் குடும்பங்களோடு தங்கிவாழ்வோராக மாற்றப்பட்டுள்ளனர். இதனால் வருமானப்கிர்வு பாதிக்கப்பட்டு வறுமைக்கு உள்ளாகியுள்ளனர்.

**பணி:**

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தை முழுமையாக ஆக்கிரமித்து இருக்கும் இவ் வறுமை நெருக்கடியில் இருந்து முழுமக்களையும் மீட்டெடுக்க வேண்டிய பாரிய பணியும் பொறுப்பும் எம் யாவருக்கும் உரியதாகும். அத்தயை பணியை சரிவரச் செய்ய வேண்டிய கடப்பாடு உள்ளூராட்சி நிறுவனங்கட்கு மிக அவசியமானதாகும். கடந்த பல தசாப்தங்களாக வறுமையை ஒழிக்கும் தீவிர முயற்சியில் அரசாங்கள் பலவும் பல அரசு சாரா நிறுவனங்களும் ஈடுபட்டு வந்துள்ள போதிலும் இம்மாவட்டத்தில் வறுமை அதிகரித்துள்ளதே தவிர அது குறைக்கப்பட்டதாக இல்லை. வறுமையை ஒழிப்பதற்கென முன்வந்த பல சர்வதேச, தேசிய அரசு சாரநிறுவனங்கள் வறுமையின் பிரபுக்களாக மாறியுள்ளன. இந்நிலைமைக்கு என்ன காரணம்? ஏன் வறுமையை ஒழிக்க முடியவில்லை? என்பது கூர்ந்து கவனித்து அதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதனைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு இத்தகைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உள்ளது.

- உள்ளூராட்சி நிறுவனங்களால் நிறைவேற்றப்படும் வறுமைதொடர்பான செயற்றிட்டங்களை சரிவரக் கண்டறிந்து அதற்கான வளங்களை சரிவர ஒதுக்கீடு செய்து, முறையான கண்காணித்தல, மேற்பார்வை செய்தல் (Monitoring and Evaluation) என்பவற்றின் மூலமும் அத்தகைய செயற்றிட்டங்களில் மக்கள் பங்குபற்றுதலை அதிகரிக்கச் செய்வதன் மூலமும் அதிகாரிகள், ஊழியர்கள், செயற்றிட்டத்தோடு தொடர்புடையோர் அர்ப்பண சிந்தனையோடு கடமையாற்றுவதன் மூலமும் கணிசமானளவு வறுமையைக் குறைக்கமுடியும்.
- வறுமை ஒழிப்புத் தொடர்பான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பல அரசுசார், அரசுசாரா நிறுவனங்கள் பல கிராமிய அல்லது பிரதேச தேவை பற்றிய கணிப்பீடுகள் (Need Assessment Analysis) எதனையும் முறையாகச் செய்யாது வெறும் அடிப்படைத் தகவல்களை அல்லது பொருத்தமற்ற இரண்டாம்தர தகவல்களை மட்டும் கருத்தில் கொண்டு செயற்றிட்டங்களை வடிவமைக்கின்றன. இதனால் பல செயற்றிட்டங்கள் தோல்வியில் முடிவடைகின்றன. இது தொடர்பாக பிரதேச அபிவிருத்தி சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், சனசமுக நிலையங்கள் என்பன கிராமியமட்ட அல்லது தனி ஒவ்வொரு கிராமத்திற்குமான கிராமத் தகவல் தொகுப்பு (Village Profile or Village Data Sheet) ஒன்றை கள ஊழியர்களை முறையாக பயன்படுத்துவதன் மூலம் தயாரித்து செயற்றிட்டத்தை முன்மொழிவோர் யாவருக்கும் உதவமுடியும்.
- வறுமை ஒழிப்புத் தொடர்பான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பல அரசுசார், அரசுசாரா நிறுவனங்கள் நிறைவேற்றுகின்ற செயற்றிட்டங்களை, அதற்கு பயன்படுத்துகின்ற நிதி நடவடிக்கைகளை முறையாக கண்காணிப்பதற்கு கிராமியமட்ட சமுக நிறுவனங்களைத் தயார்படுத்துவதன் மூலம் அல்லது அது தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டுவதன்மூலம் அவற்றின் பெறுபேறுகள் வெற்றியளிக்கும் என்பது திண்ணம். இதற்கு உள்ளூராட்சி நிறுவனங்கட்கு சட்டதிட்டங்கட்கு அப்பால் கரிசனையும் ஆர்வமுள்ள ஈடுபாடும் (Commitment and Contribution) மிக அவசியமாகும்.
- போரினால் பாதிக்கப்பட்டு வறுமைக்குள்ளானோர் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களால் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். அவர்கட்கு பல்வேறு நிறுவனங்களால் வழங்கப்படும் நிதிகளை முறையாக பயன்படுத்துவதற்கான பயிற்சிகளை வழங்குதல், புதிய தொழில் முயற்சிகளை கண்டறிவதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான ஆலோசனைகளை வழங்குதல், அதன்பொருட்டு இத்துறைசார்ந்த நிபுணர்களைப் அடையாளம் காணல், பயன்படுத்துதல் என்பவற்றில் ஈடுபடலாம்.

- போரினால் பாதிக்கப்பட்டு வறுமைக்குள்ளான பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் தொடர்பாக அப்பிரதேச சனசமுக நிலையங்கள் ஆகக் கூடியமுயற்சிகளை எடுக்கவேண்டிய அவசியம் உள்ளது. அவர்களை சமுக, கலாசாரத் தடைகளை உடைத்து விழிப்புணர்வூட்டவும், பொருளாதார ரீதியாக அவர்களை வலுவூட்டி அவர்களது வறுமையை ஒழிக்கவும் அவர்களது சிறுவர்களது எதிர்கால வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படவும் தனிக்கவனம் செலுத்தப்படவேண்டும்.

## முடிவுரை:

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை எல்லா சமுகங்களும் பொதுவானதும் தமக்கென தனியான துமான பல நெருக்கடிகளைக் கொண்டிருந்த போதிலும் மேலே விரிவாகக் கூறப்பட்ட போர், வறுமை தொடர் பான நெருக்கடிகள் முன்னுரிமை கொடுத்து மிக அவசரமாக தீர்க்கப்பட வேண்டியவையாகும். அதனை இன்றைய பொறுப்புள்ள சந்ததியாகிய நாம் நிறைவேற்ற தவறும் பட்சத்தில் எதிர்கால சந்ததிகள் பலவற்றை வழிகாட்டத்தவறும் குற்றச்சாட்டுக்கு மட்டுமன்றி அவர்கட்கு பெரும் துரோகமிழைத்தவராகவும் மாறவேண்டி ஏற்படும். இதனால் இன்று பொறுப்புள்ள பதவிகளில் உள்ள இம்மண்ணைச் சார்ந்த பலம்மிக்க உள்ளூராட்சி நிறுவன உயரதிகாரிகள், அதன் ஊழியர்கள் யாவரும் கரிசையும் ஆர்வமுள்ள ஈடுபாடும் (Commitment and Contribution) கொண்டு அயராது உழைக்கவேண்டியுள்ளது. ஆயினும் இப்பணி வெறுமனே உள்ளூராட்சி நிறுவனங்கட்கு மட்டும் உரியதல்ல. மாறாக இப்பிரதேசத்தின் அபிவிருத்திமீது அக்கறையுள்ள புத்திஜீவிகள், திட்டமிடுவோர், அதில் ஈடுபடுவோர், அதனை நிறைவேற்றுவோர் அதன் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வோர் யாவருக்கும் உரிய கடப்பாடும் அர்ப்பண சிந்தையுடன் கூடிய பணியுமாகும்.

## உசாத்துணை நூல்கள்:


சந்திரசேகரன்.சோ. (1995).*சமுதாய வலுவூட்டல்.*

சச்சிதானந்தம் சாந்தி. (2003). *வறுமையின் பிரடுக்கள்,* மன்று. மட்டக்களப்பு.

Thangarajah. C.Y & Shanmugam.S . (2002), ***Poverty Intervention*** Feasibility Report, Batticaloa.

Thambiah.K. (2003***), Income and Employment Generation***, Review mission Report, NCORD.

Statistical Hand Book, (2002), Batticaloa District, District Planning Secretariat, Batticaloa.

தம்பையா.கு. (2003) *வேலைவய்ப்பு வருமான அதிகரிப்பு என்பவற்றில் சமுகமட்ட நிறுவனங்களின் பங்களிப்பு - வடக்கு கிழக்கு மாகாணம் பற்றிய ஒரு பார்வை.* உள்ளூர் ஆளுகை, உள்ளூராட்சித் திணைக்களம், வடக்கு கிழக்கு மாகாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கான காரணங்களும், தடுப்பதற்குரிய நடவடிக்கைகளும்.

செல்வி. ஞானசௌந்தரி,
சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்,
மட்டக்களப்பு.

சிறுவர்கள் ஒரு நாட்டின் அரும்பெரும் செல்வங்கள். இவர்கள் சமூகத்தில் முக்கியமானதொரு பிரஜைகளாகத் திகழுகின்றார்கள். உலர்ந்த பஞ்சு நீரை விரைவாக அகத்துறுஞ்சுவது போல சிறுவர்களும் படிப்படியாக சுற்றாடலில் இருந்து பெரும் சிந்தனைகள், அனுபவங்கள், காட்சிகள் இவற்றினூடாக ஆளுமையை உருவாக்கிக் கொள்கின்றனர். சிறுவர்களை எதிர்காலத்தில் நல்லதொரு சமுதாயப் பிரஜையாக மிளிரச் செய்வதற்குரிய பொறுப்பு மிக்கவர்கள் பெற்றார், குடும்பம், ஆசிரியர் ஆகியோரையும், சமுதாயத்தையும், அரசாங்கத்தையும் சார்ந்ததாகும்.

சிறுவர்களே எதிர்காலத்தில் எமது நாட்டில் முக்கியமான பொறுப்புக்களையும், கடமைகளையும் ஏற்று சமுதாயத்தை வழிநடத்தப் போகின்றவர்கள். எனவே இவர்களை எதிர்காலத்தில் எமது கலாசார பாரம்பரியங்களில் சீரழிவுகள் தலைதூக்காது பேணி வளர்ப்பதற்குரிய சீரிய நற்பண்புகளை ஊட்டி சிறுவர்களைப் பல வழிகளிலும் பாதுகாத்துச் சீரான பராமரிப்புக் கிடைக்கப் பெறுவதற்கு உரிய வழிமுறைகளைக் கையாளுவது எமது முக்கிய கடமையாகும்.

உலகில் 50 லட்சம் சிறுவர்கள் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதோடு, இலங்கையில் 30,000 சிறுவர்கள் பாலியல் துஸ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் அநேகமான சிறுவர்கள் 12 வயதிற்கும், 13 வயதிற்கும் இடைப்பட்ட யுவதிகள் ஆவார்கள். இவர்கள் வியாபார நோக்கத்திற்காகக் கடத்தப்பட்டுத் துஸ்பிரயோகிக்கப்பட்டிருப்பதையும், பலதரப்பட்ட செய்தி ஊடகங்கள் ஊடாக அறிந்து கொள்வதற்கு முடிகின்றது. எமது ஆய்வுகளிலுள்ள பதிவேட்டு மதிப்பீட்டிற்கிணங்க மட்டக்களப்பு மாவட்டத்திற் பதிவு செய்யப்பட்டுள்ள ஏனைய அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில் 64.28% பாலியல் துஸ்பிரயோகம் கணக்கிடப்பட்டுள்ளது.

இவ்வாறான எண்ணிக்கை அதிகரிப்பதற்கு யுத்தச் சூழலும், அடுத்தபடியாகத் தொலைத் தொடர்புச் சாதனங்கள், போதைப் பொருள் பாவனை அதிகரிக்கப்படுதல், உல்லாசப் பயணத்துறை ஆகியவையும் காரணிகளாக உள்ளன.

வளர்ந்த ஒருவர் சிறுவரை பாலியல் காரணங்களுக்காகப் பயன்படுத்தல் பாலியல் துஸ்பிரயோகம் ஆகும். வளர்ந்தவர்களினால் ஏற்படுத்தப்படும் பாலியல் துஸ்பிரயோகமானது சிறுவர்களை உடல் தொடர்பு அற்ற துஷ்பிரயோகமாகவோ, உடல் தொடர்பு கூடிய துஸ்பிரயோகமாகவோ அல்லது பலாத்காரத்துடன் கூடிய துஷ்பிரயோகமாகவோ பாதிப்படையச் செய்யலாம். இதன் காரணமாக சிறுவர்களின் மனவெழுச்சி, உளத்தாக்கம் என்பன மீது நேரடியாகவோ அல்லது மறைமுகத்தாக்கத்தையோ ஏற்படுத்துகின்றது.

இவ்வாறான பாலியல் இம்சைச் சம்பவங்கள் எமது ஆய்வுகளின்படி பாதுகாப்பும், பராமரிப்பும் வழங்கப்பட வேண்டிய தங்களது குடும்பச் சூழலிலே நெருங்கிய உறவினர்களாலும் சம்பவித்தும் உள்ளது. பிள்ளைகள் வீட்டுச் சூழலில் இருந்து விடுபட்டுத் தனித்துத் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக வீதியில் செல்லும் போதும், பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போதும், புகைப்பட நிலையங்கள் (ஒரு சில) ரியுசன் வகுப்புகளில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் தொலைக்காட்சி பார்ப்பதற்காகச் செல்லும் போது, பெற்றாரை விட்டுப் பிரிந்து சென்று உறவினர் வீடுகளில் தங்கியிருக்கும் போது, வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்படும் போதும் நிகழ்கின்றன.

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட யுத்தச் சூழ்நிலையும் சிறுவர் பாலியல் தொடர்பான இம்சைகளைப் பல வழிகளில் உருவாக்குவதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. நிலையான குடும்பங்களில் ஏற்பட்ட புலம் பெயர்வினால் குடும்பங்களின் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. குடும்பங்கள் அகதி முகாம்களிலும், குடியேற்றக் கிராமங்களிலும், பண வசதி படைத்த குடும்பங்கள் மாநகரங்களையும் நோக்கி இடம்பெயர்ந்தன. இதன் காரணமாகப் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த வாழ்க்கை முறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திச் சூழலுக்கு ஏற்ப வாழும் போது சிறுவர்கள் பல வித அசௌகரியங்களையும் எதிர் நோக்கிப் பாலியல் இம்சைகளுக்கு ஆளாகியும் உள்ளனர். யுத்தத்தின் தாக்கத்தினால் பிள்ளைகள் பெற்றாரை இழந்தனர். தாய் அல்லது தந்தையை இழந்தனர். பெற்றார் பாதுகாவலர் எல்லோரையும் இழந்தனர். அத்துடன் கைவிடப்பட்ட நிலைக்கும் ஆளானார்கள். இவ்வாறு பாதிக்கப்பட்ட பிள்ளைகள் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் அகதி முகாம்களிலும், குடியேற்றக் கிராமங்களிலும் வாழ்ந்தனர். ஒரு சில பிள்ளைகள் சிறுவர் இல்லங்களில் பராமரிக்கப்பட்டனர். இவ்வாறு மிகவும் பொருளாதார ரீதியில் பாதிப்படைந்து தங்களைத் தாங்களே பராமரிக்க வேண்டிய நிலைக்குள்ளான பிள்ளைகள் வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இவர்களுக்கு மேலும் தண்டனை வழங்குவது போல பாலியல் இம்சைகளுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள் ளன. கணவனை இழந்த பெண்கள் பொருளாதார நிலையினை வளர்த்துக் கொள்வதற்காகப் பிள்ளைகளை உறவினர்களின் பொறுப்பில் ஒப்படைத்துவிட்டு வெளிநாடுகளுக்குச் சென்ற பொழுது உறவினர்களாலும், கணவனை இழந்த பெண்கள் மறு மணம் செய்த போது சிறிய தந்தையாலும் தாயை இழந்த பிள்ளைகள் தந்தையினாலும் பாலியல் இம்சைகளுக்கு உட்படுத்தப்பட்ட நிகழ்வுகளும் உள்ளன.

யுத்தத்தின் விளைவால் பிள்ளைகளைப் பாதுகாத்துப் பராமரிப்பதற்காகச் சிறுவர் இல்லங்கள் விரைவாக உரு வாகின. இதில் ஒரு சில திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமல் இயங்கி வருகின்றன. பெண் பிள்ளைகள் பராமரிக்கப்படுகின்ற சிறுவர் இல்லங்கள் ஆண்களின் முகாமைத்துவத்தின் கீழ் இயங்குவதனால் சுலபமாகப் பிள்ளைகள் பாலியல் இம்சைகளுக்கு ஆளாகும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இது தொடர்பாக எமக்குத் தகவல்கள் கிடைத்தும் ஆதாரமான சான்றுகள் கிடைக்காதபடியினால் உண்மை நிலையைக் கண்டறிய இயலாத நிலை ஏற்படுகிறது.

யுத்தத்தில் எந்நேரமும் மரணம் சம்பவிக்கலாம் என்ற பீதியில் கிராமப்புறங்களில் வாழுகின்ற மக்கள் அநே கமான குடும்பங்களில் பெற்றோர் தமது 14 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளை வற்புறுத்திப் பலாத்கார மாகத் திருமணம் செய்து வைத்துள்ளனர். இவ்வாறான திருமணங்களை விரும்பாத பிள்ளைகள் வீட்டைவிட்டு வெளியேறும் சம்பவங்களும் உள்ளன. இதுவும் சிறுவர் பாலியல் இம்சையாகும். இவ்வாறு பல கோணங்களில் பாலியல் இம்சைகள் உருவாவதற்கு யுத்தச் சூழலும் முக்கியமானதாக அமைகின்றது.

நவீன இலத்திரனியல் வளர்ச்சியில் தொலைக்காட்சி ஊடகங்களில் காண்பிக்கப்படும் விளம்பரங்கள், நாடகங்கள், சினிமாப் படங்கள் முதலியன ஒரு சில தவறான அபிப்பிராயங்களைச் சிறுவர்களுக்குத் தூண்டிவிடுவதாக அமைவதனால் சிறுவர்கள் அதன்பால் ஈர்க்கப்பட்டு வழி தவறிச் செல்வதற்கு ஏதுவாகின்றது. அண்மையில் இன்ரநெற் ஊடாக சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் இலங்கையில் நடைபெற்ற சம்பவம் பற்றி செய்தி ஊடகங்கள் ஊடாக அறிய முடிந்தது. ஆனால் ஒரு சில நிறுவனங்கள் விசேட மென்பொருட்களை (Soft ware) வெளியிட்டுள்ளதால் இன்ரநெற்றில் தீய அம்சங்களை வடிகட்டித் தகுந்தவற்றை மட்டுமே கணணியில் பெற அனுமதிப்பது சிறப்பானதாக அமையும்.

போதைப் பொருள் கடத்தல் 1980 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கைக்கு வந்த அந்நிய நாட்டவர் மூலம் இங்கு அறிமுகமானது. இதன் பின்னர் வெளிநாடுகளுக்குக் கடத்துவதற்குரிய மையமாக இலங்கை பயன்படத் தொடங்கியது. இதன் விளைவால் வறிய குடும்பங்களில் பொருளாதார நிலையை இலகுவாகப் பெருக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்காக ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் கூட போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடத் தொடங்கி னார்கள். இதன் மூலமாகக் கடத்தலில் ஈடுபடும் சிறுவர்கள் நாளடைவில் போதைப் பொருள் பாவனைக்கு உள்ளானார்கள். நாளுக்கு நாள் போதைப் பொருள் பாவனை அதிகரிக்கப்பட்டதன் விளைவால் சிறுவர் பாலி யல் தொடர்பான இம்சைகளும் அதிகரிப்படைந்தன. அரசாங்கமும் முழுமூச்சாக போதைப்பொருள் கடத்தலைத் தடைசெய்வதற்கு கடத்தல்காரர்களைக் கண்டுபிடிப்பது தொடர்பில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றது. ஆகை யினால் போதைப்பொருள் பாவனையின் மூலம் ஏற்படும் தீயவிளைவுகளைப்பற்றி சமூதாயத்தில் விழிப்பு ணர்வை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதன்மூலம் அதன் தீயவிளைவுகளைக் குறைக்கலாம்.

அந்நிய செலாவணியை அள்ளிவழங்கும் உல்லாசப் பயணத்துறை ஒருசில நன்மைகளை இலங்கைக்குப் பெற்றுத்தந்தாலும் மறுபக்கத்தில் ஓர் கலாசார சீரழிவு நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. உல்லாசப் பயணிகள் எனும் போர்வையில் இலங்கைக்குள் ஊடுருவும் அநேகமானவர்கள் கரையோரப் பிரதேசங்களில் வாழும் ஏழைச்சிறார்களை பரிசுப் பொருள், பணம் ஆகியவற்றின் மூலம் முதலில் கவர்ந்துவிடுகின்றனர். பின்னர் கரையோரங்களில் வலம்வரும் இவர்களை பாலியல் இம்சைக்கும், போதைப் பொருள்பாவனைக்கும் உட்படுத் துகின்றனர். எமது நாட்டுக்குள் எயிட்ஸ் நோய் பரவுவதற்கும் காவிகளாகின்றனர். ஆகையினால் கடற்கரையில் வாழும் சிறுவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது சமுதாயத்தின் முக்கியமானதொரு பொறுப்பு வாய்ந்த கடமையாகும்.

எமது ஆய்வுகளின் படி பெற்றோரின் நேரடிக் கண்காணிப்பிலிருந்து பிள்ளைகள் விடுபடும் போதும், தனிமைப் படுத்தப்படும் போதும் பெற்றார் தமது உறவினர்கள் மீது நம்பிக்கை வைத்து பிள்ளைகளை உறவினர்களிடம் ஒப்படைக்கும் போதும் சமூதாயத்தில் மதிப்பு மிக்கவர்களாக போற்றப்படும் ஒருசில பெரியவர்களை நம்பி அவர்களது பராமரிப்பில் பிள்ளைகள் விடுபடும் போதும் சிறுவர்கள் பாலியல் இம்சைக்கு உட்படுகின்றனர் அனேகமான சந்தர்ப்பங்களில் சிறுவர்கள் தனித்து செயற்படுவதனாலேயே சம்பவங்கள் நிகழ்கின்றன. ஆகை யால் தற்பாதுகாப்பு முறைகளை வீட்டில் பெற்றாரின் மூலமாகவும், பாடசாலைகளில் உளநிலை சீராக்கல் ஆலோசகர்களை நியமித்து ஆலோசனைகளை வழங்குவதன் மூலமாகவும் இளம் சிறார்களுக்கு தற்பாது காப்பிற்கான முறைகளைக் கடைப்பிடிப்பதற்குரிய பண்பை உண்டுபண்ணலாம்.

பாலியல் இம்சைகளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதற்குப் பொறுப்பானவர்கள் பெற்றோர்களே. இவர்கள் பிள்ளைகளுடன் நெருக்கமான உறவையும், பிள்ளைகள் எதையும் எடுத்துச் சொல்லக்கூடிய வகையில் அன்பா கவும், பெற்றாருடன் பயவுணர்வு அற்ற நிலையில் பிள்ளைகள் பழகும் வகையில் பெற்றார் நடந்துகொள்ள வேண்டும். பிள்ளைகளுக்குப் பெற்றார் மீது நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் மனவுறுதியை உண்டுபண்ணு வதன் மூலமாக பிள்ளைகள் தங்களது முன்னேற்றத்திற்கு பாத்திரமானவர்கள் தங்களது பெற்றார்கள் என்றும், பெற்றாரின் வழிநடத்தலை தவறாது பின்பற்ற வேண்டும் என்ற எண்ணக்கருத்தை அடிமனதில் பதியச்செய்துவிட வேண்டும். பெற்றோரை இழந்த பிள்ளைகள் பாதுகாவலரினால், அல்லது பிள்ளையின் எதிர்கால முன்னேற் றத்திற்காக ஒத்துழைப்பவர்கள் மீது பிள்ளை நம்பிக்கையினை ஏற்படுத்தக் கூடிய வகையில் நடந்துகொள்ள வேண்டும்.

பிள்ளைகளின் பருவ விருத்திகளை அறிந்து செயற்படுவதன் மூலமும் உளரீதியான தாக்கங்களிலிருந்து பிள் ளைகளைப் பாதுகாத்து, பாதைதவறிச் செல்லாது நன்நெறிப்படுத்தலாம். சிறுவர்களின் ஆறுவயது தொடக்கம் பதினொரு வயது வரையிலுள்ள பருவம் பிள்ளைப் பருவமென்றும், பதினொரு வயது தொடக்கம் பதினெட்டு வயதுவரை விடலைப்பருவமென்றும் உளவியலாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது. பிள்ளைகள் பிறப்புத் தொடக்கம் படிப்படியாக தன்னைச்சூழ உள்ளவர்களை தனது பெற்றார் தனது குடும்பம், உறவினர், அயலவர்கள் என இனம்கண்டு கொள்வதுடன், தான் தனித்துவமானவன் என்ற உணர்வைப் படிப்படியாகப் பெற்றுக் கொள்ளுகின்றனர். தன் வல்லமைகள், பலவீனங்கள், குடும்பத்தில் தான் வகிக்கும் பங்கு, தனக்குச் சொந்தமான பண்பாடு, ஆகியவற்றை இனங்கண்டு கொள்வதுடன், தான் ஆண் அல்லது பெண் என்ற வகையில் பாலியல் ரீதியாக தனித்துவம் பெறுகின்றனர். இந்நிலை பிள்ளைப் பருவத்திலிருந்து விடலைப் பருவத்திற்கு விடுபடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது தனித்துவப் பிறவியாகச் செயற்படுகின்றனர். இந்நிலையில் நான் யார்? எதை நம்புகின்றேன்? எதை நம்புவதில்லை? எதைச் செய்யப் போகின்றேன்? எது சரி? எது பிழை? என்ற எண்ணங்கள் யதேச்சையாக உருவாகி தான் வாழும் சமூகத்திலும் கலாசாரப் பின்னணியிலும் தன் பங்கு என்ன என்பதை ஓரளவு அறிந்து கொள்வதற்கு முனைகின்றார்கள். அத்துடன் உடம்பில் மாற்றங்கள் ஏற்படுவதினால் நான் பெரிய நபர் என்ற எண்ணங்கள் உருவாகி பெரியவர்களாகச் செயற்படுவதற்கு எண்ணங்களால் உந்தப்படுகின்றார்கள் ஆகையினால் பெற்றார்கள் பிள்ளைகளின் உள நிலை மாற்றத்தை அறிந்து செயற்பட வேண்டியவர்களாகின்றனர்.

பெற்றார் பாடுபட்டு உழைப்பது தமது பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றத்திற்காகவே. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதால் மட்டும் கடமைகள் முடிவடைவதில்லை. பிள்ளைகள் வாழுகின்ற சூழல் எந்த வகையில் பாதுகாப்பு வழங்கக் கூடியதாக அமைந்துள்ளது என்ற உணர்வும் இருக்க வேண்டும். இளமையின் ஆற்றலுக்கு ஆரோக்கியமான வடிகால் மட்டுமல்ல வழிகாட்டலும் தேவை. விளையாட்டு, இசை, ஆரோக்கியமான பொழுது போக்குகள் மட்டுமன்றி, அப்பருவத்தில் அவர்களுக்கு ஏற்படும் பல்வேறு சந்தேகங்களை நிவர்த்தி செய்வது பெற்றாரின் கடமையாகும். ஆகவே ஒரு பிள்ளை தனது பழக்க வழக்கங்கள் அனைத்தையும் கற்றறியும் பள்ளிக்கூடம் குடும்பமேயாகும். தனது சமூகத்தில் பிற அங்கத்தினருடன் தான் எவ்வாறான உறவைக் கொண்டிருக்கவேண்டும், எவ்வாறு தொடர்பு பட வேண்டும் என்பதையும் குடும்பம் நிர்ணயிக்கின்றது. ஆகவே பிரச்சினையினதும், நடத்தைகேட்டினதும் மூலவேராக அமைந்திருக்கும் வீட்டுச் சூழலே சமுதாயத்திற்கு பலவகையான மனிதர்களை உருவாக்குவதற்கு துணை போகின்றது. ஒவ்வொரு குடும்பச் சூழலும் பிரச்சனைகளற்ற நல்ல வழியில் பிள்ளைகளை நல்வழிப்படுத்துவதன் மூலம் துஷ்பிரயோகச் செயல்களில் ஈடுபடுபவர்களை சமூகத்தில் குறைத்துக் கொள்வதற்கு வழிபிறக்கும்.

பெற்றார்களின் கண்காணிப்பிலிருந்து பிள்ளைகள் விடுபடும் போது, ஆறு வயது தொடக்கம் பதினெட்டு வயதுவரை . கூடிய நேரத்தைப் பாடசாலையிலேயே செலவிடுகின்றனர். பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் குடும்பத்துக்கு அடுத்தபடியாக அமைவது பள்ளிக்கூடமே. ஆசிரியர்கள் மீது பிள்ளைகள் வைத்திருக்கும் நம்பிக்கையும். அன்பும் எதிர்காலத்தில் ஆசிரியர்களின் வழிகாட்டல்களைப் பின்பற்றி நற்பிரஜையாக வளர்வதற்கு உதவுகின்றது. ஆகையினால் மதா, பிதா, குரு ஆகிய மூவரும் சமுதாயத்தில் தெய்வமாக மதிக்கப்படும் இவர்கள் மூவருமே சமுதாயத்தில் எதிர்கால சந்ததியினரின் நடத்தைகளுக்கு ஆணிவேராக நின்று செயற்பட வேண்டியவர்களாக கருதப்படுகின்றனர்.

அரசும் இலங்கைச் சிறார்களின் நலன்களைக் கருதிற் கொண்டு பல்வேறு வகைகளில் உருவெடுத்து வருகின்ற துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையை நிறுவி அதன் கிளைகளாக மாகாண கண்காணிப்புக் குழு, மாவட்டக் கண்காணிப்புக் குழு உட்பட பிரதேசக் குழுக்களையும் செயற்படச் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுவும் சிறப்பம்சம். இவ்வாறான குழுக்களின் மூலம் விழிப்புணர்வை சமுதாயத்தில் ஏற்படுத்தும் போது புனர்வாழ்வு பெறும் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகின்றது. இவ்வாறான விடயத்தில் குடும்பச் சூழலில் புனர்வாழ்வு அளிப்பது பொருத்தமானதாக இருந்தாலும் ஒருசில சிறுவர்களுக்கு குடும்பச் சூழல் பொருத்தமற்றதாக இருப்பதால் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு உரிய புனர்வாழ்வு நிலையங்கள், கலாசாரம், மொழி, சமயம் ஆகியவற்றுக்கமைவாக பிள்ளைகள் பராமரிக்கப்பட வேண்டி இருப்பதனால் மாவட்டங்கள் தோறும் புனர்வாழ்வு நிலையங்கள் அமைப்பதற்கு அரசு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

சிறுவர்கள் தங்களது பிரச்சனைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக சிறுவர் பாராளுமன்றம் 2001.09.18ம் திகதி பண்டாரநாயக்கா சர்வதேச மாகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றமையும், அதனைத் தொடர்ந்து பின்னூட்டல் நிகழ்வாக 2002ம் ஆண்டு சித்திரை மாதம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க மாவட்டங்களிலிருந்து 20 சிறுவர்களைத் தெரிவு செய்து கலந்துரையாடல் நிகழ்த்தியது சிறப்பம்சமாகும். இவ்வாறாக நமது நாட்டிலும் சிறுவர்கள் கொள்கை உருவாக்கலில் உரைக்கருத்துக்களைக் கூறவும் பங்குபற்றவும் சந்தர்ப்பங்கள் வழங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டுள்ளது. நாட்டில் பிள்ளைகளின் நலனில் அரசாங்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதுடன் துஷ்பிரயோகங்களிலிருந்து பிள்ளைகளை பாதுகாப்பதற்குரிய செயலமைவாகவும் அமைகின்றது.

சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கான செயற்றிட்டங்கள், சட்டங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். இவ்வாறான துஸ்பிரயோகத்திற்கு ஆளாக்கும் நபர்கள் சட்டத்தின் பிடியில் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பித்துக் கொள்கின்றார்கள். சிறுவர்கள் எந்தவகையிலான பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தப் பட்டாலும் அதற்குரிய துரித நடவடிக்கை மூலம் தண்டனை வழங்கப்பட வேண்டும். குற்றவியல் செயற்பாட்டு ஒழுக்கம் 125 வருடங்கள் பழமைவாய்ந்தது. புதிய ஒழுங்கமைப்புகளுக்கு ஏற்ப அதில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டியுள்ளது. நவீன சமுதாயத்திற்கு ஏற்ப சட்ட முறைகளை மாற்றி அமைப்பதுவும் குற்றச் செயல்களை நாட்டில் இல்லாதொழிக்கும் வகையில் சட்டங்கள் கடுமையாக்கப்படும் அதே வேளை அவை துரிதமாக நடைமுறைப்படுத்தப் படுவதும் இன்றியமையாததாகும். சட்டத் தாமதங்கள், சட்டத்தில் ஓட்டைகள் காரணமாக குற்றவாளிகள் பலர் இலகுவாகத் தப்பித்துக் கொள்கின்றனர். மொத்தத்தில் சட்டத்தாமதங்களை நீக்கி அவை அமுல்படுத்தப்பட்டு தண்டனைகள் காலதாமதமின்றி வழங்கப்படுவதன் மூலம் சமுதாயத்தில் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் தொடர்பான பய உணர்வை சமுதாயத்துக்குக் கொண்டு வரச் செய்யலாம்.

பாலியல் துறையில் இளம் வயதினருக்கு நிச்சயம் கல்வி தேவைப்படுகின்றது. பாலியல் கல்வி என்பது ஆண், பெண் என்னும் இருபாலாரின் தன்மைகள், அவர்களின் சமூகப் பங்கு மனித உறவுகள், தன்னுள் எழும் உணர்வுகள் என்ன என்ன? அவை ஏன் வருகின்றது? இன்றைய சமூகத்திற்கு அவற்றை முறைப்படுத்துவது எப்படி? இவை போன்ற பல்வேறு விடயங்கள் இதனுள் இதனுள் விவாதிக்கப்படுகின்றன. அத்துடன் உடல் பற்றியும் எதிர்ப்பாலாரின் சமூகச் செயற்பாடு பற்றியும் கற்றுத் தரப்படுகின்றது. உலகம் முழுவதும் இக் கல்வி எப்படி அளிக்கப்படுகின்றது என்பதை ஆராய்ந்து இந் நிலைகளுக்கேற்ப ஒரு பாடத்திட்டத்தினை உருவாக்கி அரசு நடைமுறைப்படுத்துவதன் மூலம் பாலியல் இம்சைகளைக் குறைத்துக்கொள்ள உதவியாக இருக்கும்.

எமது வாழ்க்கைப் பாதையில் யுத்தச் சூழல் ஏற்படுவதற்கு முன்னைய காலப்பகுதி மிகவும் பசுமை நிறைந்த இன்பகரமான நாட்கள். இவ்வாறான அகதி வாழ்க்கைக்கும், இராணுவ கட்டுப்பாடுகள் சூழப்பட்ட வாழ்க்கை முறைக்கும் பலவித வேறுபாடுகளை வாழ்க்கை முறைகளில் ஏற்படுத்தியுள்ளது. பிள்ளைகள் பலவித துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாக்கப் படுவதற்கு யுத்தச் சூழல் இல்லாத சமாதான நிலை நிலவுவதனால் இது பிள்ளைகளை துஸ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளக்கூடிய சூழலாகும். ஆகையினால் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு சமாதானச் சூழலை ஏற்படுத்துவதற்கு முன்னின்று ஒத்துழைத்து கலாசாரச் சீரழிவுகளி லிருந்து எமது சிறார்களைப் பாதுகாத்து எதிர் காலத்தில் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு எமது நாட்டிற்காக முன்னின்று பாடுபடுவோமாக.

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்மக்கழிவு முகாமைத்துவமும், மக்கள் பங்களிப்பும்

கலாநிதி. தெ. திருச்செல்வம்,
சிரேஸ்ட விரிவுரையாளர்,
விவசாய பீடம்,
கிழக்குப்பல்கலைக்கழகம்

## 1. சூழலும் அதன் தொகுதிகளும்

பல கோடி ஆண்டுகளைக் கடந்து பாரிய பரிணாமங்களின் பின்னர் மனித குலத்தின் மேம்பாட்டுக்காக கிடைக்கப்பெற்றதுதான் நாம் வாழும் இந்தச் சூழலும், அதன் தொகுதிகளுமாகும். இவ்வாறு இயற் கையானது மனிதனின் பொருத்தப்பாட்டிற்காகப் படைத்துக்கொடுத்த பாரிய இந்தச் சூழல் தொகுதிகள் தற்போது படிப் படியாக தனது இயல்பான நிலையை இழந்து கொண்டிருப்பது நம்மில் பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மனிதனின் நாளாந்த நடவடிக்கைகளால் வளி மண்டலம், நீர் மண்டலம், புவி மண்டலம் ஏன் உயிர்க்கோளமே படிப்படியாகப் பாதிக்கப்பட்டு வருவதுதான் இங்கு குறிப்பிடக்கூடிய முக்கியமான விடயமாகும்.

இவ்வாறு உயிர் அங்கிகளின் தோற்றம், வளர்ச்சி, பரிணாமம், பெருக்கம் போன்றவற்றிற்கும் நாளாந்த செயற்பாடு, சூழல் மாற்றங்களுக்காய் அவை தன்னகத்தே கொண்டுள்ள பிரதிபலிப்புக்கள் என்பவைக ளுக்காகவே இத்தனை கோடி ஆண்டுகளாய் இந்தச் சூழலும் அதன் தொகுதிகளும் பெரும் பங்காற்றி வருவது நாம் அறிந்திருக்க வேண்டியதொன்றாகும். இயற்கையின் தெரிவானது எந்தவொரு மேதையாலோ அன்றி நவீன விஞ்ஞான யுக்தியின் நிமித்தமாகவோ குறைகாண முடியாத மாபெரும் படைப்பாக விளங்குகிறது. இவ்வாறு மிக நுணுக்கமாகக் கட்டியெழுப்பப்பட்ட இத் தொகுதிகளில் இயற்கையாகவோ அன்றி மனித நடவடிக் கைகளாலோ ஏற்படும் பாதிப்புக்கள், மாற்றங்கள் என்பன இங்குள்ள உயிர்க்கோளத்திற் காணப்படும் தனியன் களை நேரடியான அல்லது மறைமுகமான பாதிப்புக்களுக்கு ஏதுவாக அமைந்துவிடக்கூடும். இவ்வாறான பாதிப்புக்களில் இயற்கையாகத் தோன்று பவற்றைவிட மனித நடவடிக்கைகளினால் ஏற்படும் பாதிப்புக்களே ஆதிக்கம் கூடியதாகவும், அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்பவையாகவும் காணப்படுகின்றன.

ஆகவே மனித நடவடிக்கைகளால் இச்சூழல் தொகுதிகளுக்கு ஏற்படும் தாக்கங்கள், பாதிப்புக்கள், சேதங்கள் என்பன பல சந்தர்ப்பங்களில் மீளப் பெறவோ அன்றி இலகுவாகக் கட்டியெழுப்பவோ முடியாதவை என்பதை நாம் அறிய வேண்டும். இவ்வாறான மனிதனின் ஆதிக்கத்தால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களில் கழிவுகளும் அவற்றினால் ஏற்படும் தாக்கங்களும் பாரிய அளவில் பங்கு வகிக்கின்றன என்பது மறுக்க முடியாத ஒரு உண்மையாகும். எனவே இந்தக் கட்டுரையில் நாம் மேற்கொண்டு பார்க்க இருப்பது இவ்வாறான கழிவுகளில் திண்மக்கழிவுகளின் தாக்கங்கள், அவற்றின் சரியான முகாமைப் படுத்தல்கள், இதனால் ஏற்படும் சூழல் பாதுகாப்பு என்பனவாகும்.

## 2. திண்மக் கழிவுகளின் வகைகள் :

பொதுவாக அனைத்து திண்மக் கழிவுகளையும் இரு பாரிய வகைகளுக்குள் அடக்கிவிட முடியும்.

a) உயிர் அங்கிகளால் சிதைவடையக்கூடியது
b) உயிர் அங்கிகளால் சிதைவடைய முடியாதது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போன்று உயிர் அங்கிகளால் சிதைவடையக்கூடிய கழிவுகளை மேலும் மூன்று பிரிவுகளில் உள்ளடக்க முடியும்.

(i) இலகுவாக/விரைவாக சிதைவடையக்கூடியது
(ii) மத்திமமாக சிதைவடையக்கூடியது
(iii) மந்தமாக சிதைவடையக்கூடியது

ஆனால் எவ்வாறான அளவில் சிதைவடையக்கூடியதாக இருந்தாலும் அவை சூழலுக்கு ஏற்ப டுத்தும் தாக்கங்கள் குறைந்து விடுவதில்லை.

## 3. திண்மக் கழிவுகளின் தாக்கங்கள்

எந்தவொரு சேதனமும் அதன் சிதைவுக்காக இயற்கைத் தொகுதிகளிலிருந்து சிலவற்றைப் பெற்றே சிதைவடைகின்றன. உதாரணமாக ஒரு சிறிய மரக் கட்டையை எடுத்துக் கொண்டால் முதலில் அது பூமியில் அல்லது நீர்நிலையில் தனக்காக ஓரிடத்தைப் பிடித்துக் கொள்கின்றது. இதன் பின்னர் இது சிறிது சிறிதாக சிதைவடையும்போது அதற்காக வளி மண்டலத்திலிருந்து ஒட்சிசனையும் சிறிதளவு நீரையும் பெற்றுக் கொள் கின்றது. இந்த நிலைமையில் இயற்கையின் வளமும் தொகுதிகளும் அநா வசியமாகப் பங்கிட்டபபடுவதோடு பெறுமதிமிக்க ஒட்சிசனும் உள்வாங்கப்படுகின்றது. இவையெல்லாவற்றையும்விட ஒரு சேதனம் தேங்கும் போதும், சிதைவடையும்போதும், வளிமண்டலத்தில் வெளியிடப்படும் வாயுக்களாலும், துர்நாற்றம் என்பவற் றாலும் வளியானது பாதிப்படைகிறது. இதே போன்று அச் சேதனம் சிதைவடையும்போது வெளியேறும் திர வமானது நிலத்தையும், ஈற்றில் நீரையும் மாசுபடுத்த ஏதுவாக அமைகின்றது. ஆகவே இவ்வாறு ஒரு சிறு சேதனப் பொருளின் சிதைவிலே இவ்வாறான சம்பவங்கள் நடந்தேறும்போது உலகளாவிய ரீதியில் நாளாந்தம் தேங்கும் கழிவுகளின் அளவையும், அவை சிதைவடைய எடுத்துக் கொள்ளும் ஒட்சிசனின் அளவையும் இறுதியாக நிலம், நீர், வளி என்பன பாதிப்புறும் பரிமாணத்தையும் நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

ஆனால் நிலத்திலே தேங்கும் திண்மக் கழிவுகளிலும் பார்க்க நீர் நிலைகளிலே சேரும் திண்மக் கழிவுகளின் தாக்கம் பாரதூரமானது. காரணம் யாதெனில் நீரிலே ஒரு குறிப்பிட்ட சேதனம் சிதைவடைய எடுத்துக்கொள்ளும் ஒட்சிசனை ஈடுசெய்வதற்காக நீர்நிலைகளிலே காணப்படும் பொறிமுறைகள் போது மானதாக இருப்பதில்லை. இதனால் அந்த இடத்திலே தோன்றும் சடுதியான ஒட்சிசன் குறைவு அல் லது பற்றாக்குறை அங்கு காணப்படும் உயிரினங்களை வேறு இடத்திற்கு இடம்பெயரச் செய்யவோ அன்றி இவ்வாறு இடம்பெயர முடியாத அங்கிகள் இறந்துவிடவோ வாய்ப்பேற்படுகின்றது. இவைதவிர இவ்வாறான சேதனங்களின் சிதைவின் பின்னர் குறிப்பிட்ட அந்த இடத்தில் படியும் அல்லது தேங்கி நிற்கும் சேதனத் துகள்கள், அடையல்கள் போன்றவற்றால் குறிப்பிட்ட அந்நீர்நிலையின் படுக்கையின் இயல்பான தன்மைகள் அனைத்தும் மாற்றப்பட ஈற்றில் அந்த இடம் நீர் அங்கிகள் வாழவோ அன்றி முட்டையிட்டு இனம்பெருக்கவோ உகந்த இடமாக இல்லாது போய்விடும் அபாயத்திற்குள்ளாகிறது. இதைவிட இவ்வாறு நீர்நிலையில் சேதனம் சிதைவடையும்போது இறுதியில் ஏற்படும் காற்றின்றிய நிலைமையிலான உக்கல் நிலையின்போது அதிகளவிலான துர்நாற்றம் வீசுவதை நாம் வெகுவாக உணரமுடியும். இவை தவிர பல சேதனக் கழிவுகளால் ஆரம்பத்தில் தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் பாதிப்பேற்படுவதோடு மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய நுண்ணுயிர்கள், பூச்சிகள், உயிரினங்கள் போன்றவற்றின் அபரிமிதமான பெருக்கத்திற்கும் அவற்றினால் காவப்படும் நோய்களின் பரவலுக்கும் இவ்வகையான திண்மக் கழிவுகள் காரணமாக அமைகின்றன.

## 4. திண்மக் கழிவு முகாமைத்துவம்

உலகளாவிய ரீதியில் திண்மக் கழிவுகள், அவற்றினால் ஏற்படும் பாதிப்புகள் அவற்றைப் பரிகரித்தல் அல்லது முகாமைப்படுத்தல் போன்றவற்றுக்காக அதிகளவில் பணம், மனித சக்திகள் செலவிடப்பட்டுவ ருவது நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்ததே. இருந்தபோதும் பொருளாதார அபிவிருத்தி, தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவற்றின் அடிப்படையில் இவ்வாறான திண்மக் கழிவு முகாமைத்துவம் நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்ப டுகின்றன.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றில் இவ்வாறான திண்மக் கழிவு முகாமைத்துவம் பாரிய சவாலாகவும் பெருமளவில் பணம், மனிதவலு போன்றவற்றை உள்வாங்கும் ஒரு நடவடிக்கையாகவும் காணப்படுகின்றது. ஆனால் ஒப்பீட்டளவில் அபிவிருத்தியடைந்த நாடொன்றின் சராசரி தனிமனித கழிவு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றின திண்மக் கழிவு உற்பத்தி குறைவாகக் காணப்பட்டபோதும் அவற்றின் சரியான முகாமைத்துவம் பின்தங்கிய நிலையில் காணப்படுவது கண்கூடான தொன்று. இதற்கான காரணங்களாகப் பலவற்றை இங்கு முன்வைக்க முடியும்.

i) மக்கள் மத்தியில் சூழல் பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் போதிய அறிவின்மை.
ii) சூழலினால் அவர்களுக்கு ஏற்படும் நன்மைகள் பற்றிய தெளிவின்மை
iii) கழிவுகளால் சூழலுக்கேற்படும் தாக்கங்கள் பற்றிய தெளிவின்மை.
iv) கழிவுகளைக் குறைப்பதற்கான வழிமுறைகள் மக்களைச் சென்றடையாமை
v) குறிப்பிட்ட பிராந்தியத்தில் உள்ள உள்ளூர் அதிகார சபைகளின் பொருளாதார நிலையும், கழிவு முகாமைத்துவத்திலுள்ள அக்கறையும்
vi) கழிவகற்றலில் உள்ளூர் அதிகார சபைகளுக்கு மக்கள் வழங்கும் ஒத்துழைப்பு
vii) உள்ளூர் அதிகார சபைகளின் வாகன இடவசதி மற்றும் தொழில்நுட்பப் பற்றாக்குறை.

இவை போன்ற காரணங்களினால்தான் தற்போது மட்டக்களப்பிலும் இவ்வாறான திண்மக் கழிவுகளின் தேக்கமும், அவற்றினால் சூழலுக்கும், பொது மக்களுக்கும் ஏற்படும் பாதிப்புக்களும் உணரப்பட்டு வருகின்றன.

## 5. தீர்வுகளும், பாதுகாப்பும்

திண்மக் கழிவு முகாமைத்துவம் சிறப்பாக இருப்பின் சூழல் பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்படும் என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். ஆகவே முடியுமானவரை எம்மால் உருவாக்கப்படும் இவ்வ கையான கழிவுகளைக் குறைப்பதற்கோ அல்லது உருவாகிய கழிவுகளைத் திறம்படப் பரிகரிக்கவோ அல்லது முகாமைப்படுத்தவோ நாம் அனைவரும் முன்வர வேண்டிய கட்டாயம் நமக்கு நன்கு புரிந்திருக்கின்றது. இதனால் ஏற்படும் நன்மை, தீமைகள், பாரதூரமான பின்விளைவுகள் இவைபற்றி ஓரளவு தெரிந்திருந்தும் மக்கள் ஏன் இப்படியான செயலை மீண்டும் மீண்டும் மேற்கொள்கின்றனர் என்பது மற்றொரு பக்கம் கேள்விக்குறியாக உள்ளது. எது எவ்வாறாயினும் எதிர்கால சந்ததியினரைக் கருத்திற் கொண்டு, அவர்களுக்கான பொருத்தமான, அவர்கள் எம்மைப் போன்று வாழக்கூடிய சூழல் ஒன்றை நாம் விட்டுவைக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தை வைத்து மக்கள் செயற்பட வேண்டிய கட்டாயம் இங்கு உணரப்பட்டிருக்கின்றது. ஆகவே திண்மக்கழிவுகளின் திறமையான முகாமைத்துவம், பரிகாரம், அவற்றினால் சூழலுக்கேற்படும் பாதிப்புக்களிலிருந்து எவ்வாறு விலகிக் கொள்ளலாம் என ஒருகணம் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவே. ஆதலால் பின்வரும் நடைமுறைகள் சாத்தியமாகும் பட்சத்தில் திண்மக்கழவு தொடர்பான பிரச்சனைகளுக்கு ஓரளவுக்கேனும் தீர்வு காணப்படக கூடியதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அ) மக்கள் மத்தியில் தொடர்ச்சியான விழிப்புணர்வை அதிகரிக்கும் நடவடிக்கைகள்
ஆ) நாளாந்தம் உருவாகும் கழிவுகளை எவ்வாறு குறைக்கமுடியும் என்பது தொடர்பான சிந்தனையும் நடவடிக்கைகளும்.
இ) முடிந்தவரை ஒரு பொருளை மீண்டும் மீண்டும் பாவிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) சூழலுக்குத் தீங்குவிளைக்கும் சிதைவடையாத கழிவுகளான பொலித்தீன் போன்றவற்றின் பாவனையை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தலும், அவற்றுக்கான மாற்றுப்பொருட்களின் பாவனையை அதிகரித்தலும்.

உ) உருவாகும் கழிவுகளை முடியுமானவரை ஒவ்வொருவரும் தத்தமது இடங்களில் பரிகரிக்க ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்தல். (கூட்டெரு தயாரித்தல் போன்றவை)

ஊ) மேலதிகமான கழிவுகளை தரம்பிரித்து கழிவகற்றும் அதிகாரசபைகள் இலகுவாகப் பெறும் வண்ணம் கையளித்தல்.

எ) மீள் சுழற்சிக்குப் பொருத்தமான கழிவுகளைச் சேகரித்து அவற்றை அந்தந்த தொழிற்சாலை களுக்கு அனுப்பிப் பணமீட்டுதல்.

ஏ) உள்ளூர் அதிகார சபைகளின் சிரத்தையான பணியும் பொருத்தமான இடத்தில், பொருத்தமான வழிகளில் கழிவுகளின் பரிகாரமும்.

ஐ) கழிவுப் பொருட்களிலிருந்து பெறப்படும் பொருட்களின் பயன்கள் பற்றிய அறிவையும் விழிப்பு -ணர்வையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல். (உதாரணம் - கூட்டெரு பாவனை)

ஒ) பொது இடங்களில் மக்களின் வசதிக்காக கழிவுகள் சேகரிக்கும் தொட்டிகளைப் பாதுகாப்பான முறையில் நிறுவுதலும், சீரான கழிவகற்றும் நடவடிக்கைகளும்.

இவ்வாறு திண்மக்கழிவு முகாமைத்துவத்தில் நாம் ஒவ்வொருவரும் பங்காளிகள் என்ற சிந்தனை மக்கள் மத்தியில் கட்டாயம் வந்தே தீரவேண்டும். இப்படியான சிந்தனை உருவாக்கத்தின் பின்னர் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் இலகுவாகக் கையாளப்படுவதோடு முகாமைத்துவமும் சிறப்பாக இருக்க வாய்ப்பு ஏற்படும்.

இறுதியாக, நாம் வாழ்கின்ற சூழல் நமது செல்வம். அது மாசுபடும் போது நாமும் பாதிக்கப்படுகின்றோம் என்ற சிந்தனை வளர்வதோடு, நாம் இதுவரை வாழ்ந்த, எம்மை வாழ வைத்த இந்த இயற்கைச் செல்வங்கள் சிறப்பாக நிலைபெற்று எமது குழந்தைச்செல்வங்களுக்கும் அப்படியே கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் எம்மத்தியில் உருவாகவேண்டும். இல்லாதவிடத்து எல்லாம் இருந்தும் ஏதோ ஒன்று குறைகின்றதே என்கின்ற நினைப்போடு எமது சந்ததிகள் வாழ்வதோடு அவர்கள் மாறுபட்ட சூழலுக்காகத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுவார்கள் என்பதோடு அவ்வாறு மாறிக்கொள்ளும் நமது சந்ததிகள் மானுடத்தின் சாயலிலிருந்தும் சிறிது சிதாக விலகிக்கொள்ள நேரிடலாம் என்பதுதான் நிஜம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமுமொரு மரம் நடலாமே

வரந்தருமொரு மரநடுவென நமதரசொரு முரசறைய
    வளந்தருமென வளந்தருமர விதையொருபயன் தருமென
கருமுகிலிடை மழைவருமெனக் கனமரவிதை புவிதூவ
    கிடுகிடுவென மரம்வளர்ந்தொரு நிழல்தருமொரு வனமாக
தெருவழிசெலும் அருபெருமுயிர் கதிரொளிதவிர் முனைவாக
    தலைசுமையடி மரநிழல்தொட நடைமெலிதுயர் தானோட
அருபெருமா நடைவழிதொறும் உயிர்தருவளி நிறைவாக
    அதுவொருமழை தருதருமென வறிஞருமறி பொதுவாக

தெருதொறும்பல கனிதருமர பயனுறுவுயிர் பசியாற
    தரைவிழுநிழல் தரையடியுறை தருமெனநீர் நிறைவாக
அருமருந்தென வழிபடவொரு முறையெனத்தினஞ் சடங்காக
    அரசொடுவேம் பத்தியால்என கடகுருந்தை துணையாக
பெருநிதிதரு மரமிதுவென பெருமிதங்கொள வைத்தாள
    பெருந்தெருவது தடைவருமெனத் தறிபடுமது விறகாக
அருமந்ததரு அழிபட்டதொரு எமதரசுமொரு துணைபோக
    ஏடதுவரை போலொருசுரை ஆனதோதெம துணவாக

வீதிநடுவினில் மின்னைத்தருமது தூணைத்தொடுமொரு கிளையாலே
    வேரொடுமரமது தானழிபடுமின் சாரமென்கிற பேராலே
பாதிதொடுவயர் பேசத்துயர்தரும் பேசித்தொலையெனும் பேராலே
    பாதைவளர்தரு தேவையிலையெனில் பாலைவனமெனப் பேர்தானே
போதிமரமொரு வீதிமறிபடத் தீங்குதரவெனக் கிடந்தாலே
    பாதிகிளையொடு மீதிமரந்தறி யாருமுன்வரச் செல்வாரோ?
ந்ாதியிலையொரு ஆதிநடுதரு நாளுமழியிது அறியீரோ?
    நாளையெனவொரு நாளைவிடுவுடன் நாமுமொருமர நடலாமே!

ரி. சிவலிங்கம்,
தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
பிராந்திய உள்ளூராட்சி உதவி
ஆணையாளர் அலுவலகம்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் உரிமைகளைப் பேணுதல்

**திருமதி. நிர்மலா ஜெயராஜா**
**சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,**
**மட்டக்களப்பு.**

உலக மக்கள் தொகையின் அரைவாசிப் பகுதியினராகப் பெண்கள் உள்ளனர். சமுதாயத்தின் ஓர் அங்கமாக, சமூகத்தின் சகல துறைகளிலும் பயன்மிக்க பணிகளை வழங்குபவர்களாகவும் மனுக்குல மறு உற்பத்தி முதல் பொருளாதார உற்பத்திவரை பங்களிப்புச் செய்து, இவ்வுலகைத் தாங்குகிறபவர்களாகவும் இருப்பவர்கள் இப்பெண்கள். வீடே உலகம் என்ற கட்டமைப்பிலிருந்து விடுபட்டு விண்வெளி வரை சென்று சாதனை படைப்பவர்களாக, இவர்களது ஆற்றல்கள் வெளிப்படுத்தப்பட்டாலும் சமுதாயத்தில் இரண்டாந்தர முக்கியத்து வமுள்ளவர்களாகவே கருதப்படுகிறார்கள். வீட்டுக்குள்ளும், வெளியிலும் பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவிப்பவர்களாகவும், பாலியல் நுகர் பொருளாகவும், ஊதியமற்ற சேவகிகளாகவம் நோக்கப்படுகின்றார்கள்.

## பெண் உரிமை என்றால் எள்ள?

பெண்களின் உரிமைகளைப் பற்றி ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். உரிமை என்பது மனிதனுக்கு உரித்தானதாக இருப்பதால் மனித உரிமை என்பது ஒரு பிரஜை சமுதாயத்தில் தனக்குரிய ஆளுமையை முழுமையாக அனுபவித்து வாழ்வதற்குத் தேவையான முன் நிபந்தனைகளின் கூட்டமாகும். எனவே பெண் உரிமை என்பது மனித உரிமைகளேயன்றி வேறெதுவுமல்ல. மனித உரிமைகள் எவரிடமிருந்தும் கொடையாகவோ, அல்லது பரம்பரைச் சொத்தாகவோ பெறப்பட்டவையல்ல. அவை ஒவ்வொரு மனித ஜீவ னுக்கும் அதனது பிறப்பிலிருந்து உரித்துடையவையாகும். இந்த உரிமைகளைப் பறிக்க எந்த அரசாங்கத்துக்கோ, நிறுவனத்துக்கோ உரிமை கிடையாது.

நாம் பெண்கள் ஆயினும் மனிதர்கள் என்பதால், ஆண்கள் அனுபவிக்கும் எல்லா உரிமகளையும் நாமும் அனுபவிக்க வேண்டும் என்பதே இன்றைய கோஷமாகும்.

## உரிமைகளின் வகைகள் –

**01. அடிப்படை உரிமைகள :-** உயிர் வாழ்வு, சுதந்திரமும் பாதுகாப்பும், அந்தரங்கம், சித்திரவதை, மனிதாபிமானமற்ற நடத்துகையில் இருந்து விடுவிப்பு, சிந்தனை, மனச்சாட்சி, மதம் என்பவற்றுக்கான சுதந்திரம் பேச்சுச்சுதந்திரம், கருத்து வெளியிடும் சுதந்திரம்.

**02. பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் :-**
தொழில் செய்யும் உரிமையும்,விரும்பிய வேலையைத் தெரிந்தெடுக்கும் உரிமையும், நியாயமான ஊதியத்துக்கான உரிமை, தொழிற் சங்கங்களை அமைக்கவும், அவற்றில் சேருவதற்குமான உரிமை, சமூகப் பாதுகாப்புக்கான உரிமைகள், சுகாதாரத்துக்கான உரிமை, கல்விக்கான உரிமை, உணவு, உடை மற்றும் குடியிருப்புக்கான உரிமை, ஓய்வு, பொழுது போக்குக்கான உரிமை என்பவற்றை மனித உரிமைகள் சட்டம் அங்கீகரிக்கின்றது.

## உண்மை நிலை என்ன ?

ஆனால் உண்மையில் சமூகத்தில் இந்த உரிமைகள் பேணப்படுகின்றதா? என்பது தற்போது விழிப்புற்ற பெண்களால் ஆய்வுக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

வரலாற்று ஏடுகளைப் புரட்டிக் பார்ப்போமேயானால், பெண்கள் அடிப்படை உரிமையற்றவர்களாக, ஒடுக்கப்பட்டிருந்தமை நாம் அறிந்த உண்மைகள். மனைவியை இழந்தவனுக்கு மணமேடையும், கணவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தவுடனே துணைவி பிணமேடையில் எரிக்கப்பட்டமையும், பெண் சிசுவென அறிந்தவுடனேயே கருவறையே அதற்கு கல்லறையான சம்பவங்களும் சாதாரண நடைமுறைகளாகக் கொள்ளப்பட்டிருந்தமையும் அனைவரும் அறிந்ததாகும்.

பெண்களாக இருக்கும் காரணத்தாலேயே இன்று உலகில் பல்லாயிரக்கணக்கானோர் சித்திரவதை , பட்டினி, உடல் உள ரீதியான அங்கவீனம், கொலை என்பவற்றுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவற்றுக்கு தெளிவான பதிவுகள் இருந்தும் அவை மனித உரிமைகளாக வகைப்படுத்தப்படுவதோ புரிந்து கொள்ளப்படுவதோ இல்லை.

ஒரு பெண்ணின் உடல், மனது கண்ணியத்தோடு வாழ்வதற்கான மனித உரிமைகள் மீது தொடுக்கப்படும் வன்முறைத்தாக்குதல் பாலியல் வல்லுறவு (சுயிந) ஆகும். ஆக்கிரமிப்பு உணர்வு, வன்முறை, மிரட்டல் போன்ற உணர்வுகளின் வெளிப்பாடான இச்செயல், ஒரு பெண்ணை சிறுமைப்படுத்துவதுடன் உயிரிழப்புக்கும் உள்ளாக்குகின்றது. ஆனால் குற்றம் இழைத்தவன் ஆண் என்பதால் சமூக அந்தோஸ்த்தோடு வாழவும், பாதிக்கப்பட்ட பெண் சமூகத்தில் குற்றவாளியாவும் காட்சிப்படுத்தப்படுகிறாள்.

மேலும் திருமணம் குடும்பம் என்ற அடிப்படை உரிமைகளை சீதனம் என்ற காரணத்தினால் அவ்வுரிமைகளை அனுபவிக்க முடியாமல் வாழும் பெண்களைப் பட்டியலிட முடியாது.

குழந்தைகளை உருவாக்குபவர்களுக்கு, அவை தேவையா இல்லையா? என்பதைத் தீர்மானிப்பதற்கும், தேர்வு செய்வதற்கும் உரிமையற்ற நிலை, பொருளாதார ரீதியான சுரண்டல்கள், இலங்கையில் ஆடைத் தொழிற்சாலை, பெருந்தோட்டத் துறைகளில் பெரும்பங்கு வகிப்பவர்களான இவர்களுக்கு பாரபட்சமான வேதனங்கள், உணவு, ஓய்வு போன்றவற்றை அனுபவிப்பதில் பாரபட்டசம், அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் வீட்டுப் பணிகளாலும் இரட்டைச் சுமைக்குள்ளாதல், உடல்நலப் பாதிப்பு, வீட்டுக்குள் வன்முறைகள், பலாத்காரங்கள், வெளிக்களப் பயணங்களில் தொந்தரவு, ஊடகத்துறையால் இழிநிலைப்படுத்தல், யுத்தத்தாலும் வறுமையாலும் பாதிப்புக்குள்ளாவதும் பெண்களே. அடிப்படை வசதிகளான போக்குவரத்தின்மை, நிரந்தர வீடின்மை, பட்டினி, கல்வி வாய்ப்பினை அனுபவிக்க முடியாமை, போசாக்கின்மை போன்ற வாய்ப்புக்களை இழந்தவர்களாகவும் உள்ளனர். மரபுசாராத் தொழிற்துறைகளில் ஈடுபடுவதிலும் சமூகரீதியான தடைகள் பெண் செய்யும் எந்தக்காரியங்களிலும் தனது தேவை, ஆர்வம் என்பவற்றை கருத்திற் கொள்ளாது கணவனின், தந்தையின், சகோதரனின் விருப்பங்களிற்கேற்பவே அவள் முடிவுகளை எடுத்தல், மத அனுட்டானங்களில் கலந்து கொள்ள, சொத்துக்களை அனுபவிக்கும் சுதந்திரமின்மை போன்றன பெண்களின் இன்றய நிலைப்பாடுகளாகும்.

தமது உரிமையைப் பெற்றுக் கொள்ளுவதற்காக துணிந்து நிற்கும் பெண்களுக்கு நடப்பதென்ன ? மறுமணம் செய்ய விரும்பும் விதவை, விவாகரத்துக் கோருபவள், திருமணத்தின் பின்னும் தனது தனித்துவ அடையாளத்தை இழக்க விரும்பாதவள், தனக்கெனச் சில ஈடுபாடுகள், பொழுதுபோக்குகள் என்பவற்றை உருவாக்கிக் கொள்பவள், கணவனுக்கு எதிராக முறைப்பாடு செய்பவள். இவர்கள் இன்றும் எமது சமூகத்தால் அங்கீகரிக்கப் படாதவர்கள்.

**உரிமைக் குரல்களும் நலன் பேணுவதற்கான வாய்ப்புக்களும் –**

இத்தகைய சமூக அநீதிகளே, பெண்களுக்கான உரிமைக் குரல்கள் உலக அரங்குகளில் ஒலிப்பதற்குக் காரணமாயின. விழிப்புணர்ச்சியுற்ற மகளிர் அமைப்புக்கள், பெண்ணியல் வாதிகள் பெண்களின் உரிமையைப் பேணுவதற்காக எடுத்த போராட்டங்களும் மாநாடுகளுமே இன்று பெண்களின் கல்விக்கும், ஆற்றல்களின் வெளிப்பாட்டுக்கும் அடிப்படையாக அமைந்ததுடன் அவர்கள் இன்று அனுபவிக்கும் பட்டங்கள், பதவிகளுக்கும் காரணமாயிருப்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

பெண் உரிமை பேணலுக்கான அரசு சார்ந்த நடவடிக்கைகள் –

பெண்களின் இத்தகைய தொடர்ந்த போராட்டங்களின் காரணமாக அவர்களின் உரிமை பேணுவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நாடுகளின் பெண்களுக்கு எதிராகப் பேதங்காட்டுதலின் அனைத்து வடிவங்களையும் ஒழித்தல் சார் இணக்க உடன்படிக்கை **(CEDAW)** 1981ல் அமுல்படுத்தப்பட்டது. அத்துடன் பெண்கள் மீதான வன்முறைக்கெதிரான பிரகடனம் (The Declaration of Elimination of violence against women ) மகளிருக்கு ஒரு தினம் பிரகடனப்படுத்தப்பட்டமை. என்பன பெண்களின் உரிமைகளைப் பேணுவதற்காக முன்னெடுக்கப்பட்ட முயற்ச்சிகளாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் பெண்கள் உரிமை பேணுவதில் முன்னிலையில் உள்ளது. ஊநுனுயுறு உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு 1992, 93ல் இலங்கை மகளிர் பட்டயம் வரையப்பட்டது. இதில் பெண்களுக்கு எதிரான வன்செயல்கள் தொடர்பாக எழும் விஷயங்கள் இலங்கைக்கு பொருத்தமான வகையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## பட்டயத்திலுள்ள மகளிர் உரிமைகளின் வகைகள்

01) அரசியலில் குடியியல் உரிமைகள்.
02) குடும்பக் கட்டடைப்புக்குள் உரிமைகள்.
03) கல்வி பயிற்சி பெறும் உரிமைகள்
04) பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் அவற்றின் நன்மைகளையும் பெறும் உரிமைகள்.
05) சுகாதார சேம நலம் மற்றும் போசாக்கு வசதிகளைப் பெறும் உரிமைகள்.
06) சமூகப் பாரபட்சங்களிலிருந்து பாதுகாக்கப்படும் உரிமைகள்.
07) பால்நிலை வன்முறைகளிலிருந்து பாதுகாக்கப்படும் உரிமைகள்.

## இலஙகையல சடடததனால வழஙகபபட்டுளள பெணணுரமைககான ஏறபாடுகள சல:-

உறுப்புரிமை 12(1):- எல்லா ஆட்களும் சட்டத்தின் முன் சமம் என்பதோடு சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள் எனக் கூறுகின்றது.
உறுப்புரை 12(2):- எந்தப் பிரஜையும் அவரது இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம் பிறப்பு இடம் போன்ற அடிப்படையில் வித்தியாசம் காணப்படுதல் ஆகாது எனக் கூறுகின்றது. உறுப்புரை 12(3):- ஆண்களும் பெண்களும் சம உரிமை உள்ளவர்கள் என்பதனையும் சட்டத்தின் முன் சமமான பாதுகாப்புக்குரியவர்கள் என்றும் கூறுகின்றது.

தொழிற்சாலைக் கட்டளைச் சட்டமானது பெண் வேலையாட்களின் வேலை நேரங்கள் ஓய்வு, மிகை நேர வேலை என்பன தொடர்பான பல்வேறு ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

பிரசவ கால நலன்கள் கட்டளைச்சட்டத்தினால் பெண்களின் பிரசவ கால நலன்களுக்கான உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஊழியத்தையும் ஊதியத்தையும் ஒழுங்குபடுத்தல் திருத்தச் சட்டத்தின் கீழ் கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் ஏதேனும் ஒரு நாளில் மாலை ஆறு மணிக்கும், காலை ஆறு மணிக்குமிடையில் வேலைக்கமர்த்தப்படக் கூடாது.

**சட்ட சீர்திருத்தம் :-**

இலங்கையைப் பொறுத்தவரை 1995இல் குற்றவியல் சட்டத்தில் குறிப்பிட்ட அளவு மாற்றம் கொண்டு வரப்பட்டது. பாலியற் தொந்தரவு குற்றமாகக் காணப்பட்டது. பாலியற் வல்லுறவுக்கான நியதிச்சட்ட வயதெல்லை 16 ஆக உயர்த்தப்பட்டது. திருமண வயதெல்லை 12லிருந்து 18ஆகக் கூட்டப்பட்டது.
பாலியற் தொந்தரவுக்கான தண்டனை குற்றப்பணத்துடனோ அல்லாமலோ 5 ஆண்டு வரையான சிறைவாசமாக முடியும். இத்துடன் நட்டவீட்டை வழங்குமாறும் விதிக்கமுடியும்.
வேலைத் தளத்தில் தொந்தரவுக்கு உட்படுத்தப்பட்டு அது காரணமாக தனது வேலையை விட்டு விலகிய ஒருவர் தொழில் நியாய சபை ஒன்றுக்கு தனது நிலைமையை அமைப்பின் வழியான முடிவுறுத்தல் என்ற முறைப்பாட்டின் கீழ் விண்ணப்பிக்கலாம். வெற்றி பெறுமிடத்து நட்டவீடு அல்லது வேலையைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டமானது இந்த உரிமைகளை அங்கீகரித்தாலும் நடைமுறையில் பல மறுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அதேவேளை வழங்கப்பட வேண்டிய உரிமைகள் பல இன்னும் வழங்கப்படாமலுள்ளன.
எனவே சட்டங்களை வலுப்படுத்துதலும் மேம்படுத்துதலும் சட்டரீதியாக செய்யப்பட வேண்டியவையாகும்.

**சட்டங்களில் காணப்படும் பலவீனங்கள் :-**

- ❖ குடும்பப் பிரச்சனை காரணமாக பெண்கள் முறைப்பாடு செய்யும் போது அதில் அக்கறை காட்டப்ப்டுவதில்லை.
- ❖ சாட்சிகள் மிரட்டப்படுதல், அச்சுறுத்தப்படுதல்
- ❖ ஆயுதம் தாங்கிய தரப்பினரால் புரியப்படும் பலாத்காரங்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாமை.
- ❖ பாலியல் வல்லுறவுக்கான சாட்சியங்கள் கேட்பது.
- ❖ பெண்ணிடம் ஆண்களே பல கேள்விகளைக் கேட்டல்.
- ❖ வழக்குகள் இழுத்தடிக்கப்படுதல் போன்றன.

**சமூக அமைப்புக்களால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்**

- ❖ பெண்களுக்குச் சகல மட்டங்களிலும் தன்னம்பிக்கை ஊட்டும் பயிற்சிகளை நடத்துதல்.
- ❖ ஆண், பெண் என்ற பாகுபாடு காட்டாது குடும்பத்தில் குழந்தை வளர்ப்பு முறையில் மாற்றங்களை ஏற்படுத்துதல்.
- ❖ முன்பள்ளிகளிலும் பாடசாலைக் கல்வித்திட்டத்திலும் ஆண்,பெண் பாகுபாட்டை ஒழித்தல் சமத்துவத்தை வளர்த்தலுக்கான ஏற்பாடுகள் செய்தல்.
- ❖ மகளிர் அமைப்புக்களை வலுப்படுத்தலும், ஆதரவு வழங்கலும்.
- ❖ நீதிமன்றங்கள், சட்டத்தரணிகளுடன் பெண்கள் அமைப்புக்கள் கலந்துரையாடல்கள் நடத்துதல்
- ❖ பெண்களுக்குச் சட்டம் சம்பந்தமான விழிப்புணர்வை ஊட்டல்.
- ❖ பாதிக்கப்பட்ட பெண்களுக்கான காப்பகங்கள் அமைத்தல்.
- ❖ சுயதொழில் வாய்ப்புத் திட்டங்கள் உருவாக்குதல்.
- ❖ பெண்களின் வெளியுலக நடமாட்டத்துக்குரிய சாதகமான மனோநிலையை சமூகத்தில் வளர்த்தல்.
- ❖ சீதனம் கொடுப்பதும் வாங்குவதும் பெற்றோரின் வசதி அடிப்படையில் அன்பூக்கச் செயல்களாக உருவாக்கும் பயிற்சித் திட்டங்கள், பிரசாரங்கள் செய்தல்.
- ❖ ஊடகத்துறை, சட்டத்துறை என்பவற்றில் பெண்களுக்கு போதிய பயிற்சியையும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.
- ❖ பிரதானமாகப் பெண்கள் அரசியலில் பங்கு கொள்வதனாலும் உள்ளூராட்சி மன்றங்களில், பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படுவதாலும் பெண்களின் பிரச்சனைகளை பெண் நிலைப்பாட்டில் இருந்து தீர்க்கப்படவும் தீர்மானங்கள் எடுக்கப்படவும், சட்டங்கள் இயற்றப்படவும் வழிவகுக்கும்.
- ❖ பால்நிலைப் பிரச்சனைகளையிட்டு கருத்துப் பரிமாறல்கள் சமூக அமைப்புக்களில் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். இதனால் ஆணும்,பெண்ணும் சேர்ந்து சமூகத்தைக் கட்டியெழுப்புதல், ஒருவருக்கு சுமத்தப்பட்ட சமூகப் பொறுப்புக்கள், மற்றப்பாலாரினால் பகிர்ந்து கொள்ளக்கூடிய சூழ்நிலை அமையும். இதனால் சமத்துவம் மிக்க நவீன சமுதாயம் உருவாக முடியும்.

**பெண்களின் துணிச்சலும், மன உறுதியும்.**

பெண்கள் துணிவுடனும், தைரியத்துடனும், சவால்களைச் சந்திக்க வேண்டும். மற்றவர்கள் என்ன சொல்வார்கள் என்று அஞ்சாமல், பரந்த மனப்பான்மையுடனும் மன உறுதியுடனும் செயற்படும் போது பல புதிய மாற்றங்களை உருவாக்கலாம். துரத்தும் நாயை எதிர்த்து நின்றால் துரத்தல் நின்று விடும். எனவே பெண்களாகிய நாம் எமது உரிமையைப் புரிந்து கொண்டு தொழிற் தேர்ச்சி பெறுதலும், கல்வியில் உயர்தலும், பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளுவதும் ஏனைய பெண்களின் பிரச்சினைகளுடன் இணைந்து உதவிக்குரல் கொடுப்பதும், பாரபட்சமற்ற நாகரிக சமூகத்தை மலரச் செய்யும் வழிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையில் மட்டு மாநகரசபை

**ஐ.ஜீ இராசநாதன்,**
மட்/ மாநகர சபை முன்னாள்
நிர்வாக உத்தியோகத்தரும்
தற்போதைய திட்ட உத்தியோகத்தரும்.

ஈழநாடு என்று அழகுடன் கூறப்படும் எமது இலங்கையில் மத்திய அரசு, மாகாண அரசுகள், உள்ளூராட்சி என மூன்று வித நிர்வாக அமைப்பு முறைகள் உள.

உள்ளூராட்சி நிர்வாக அமைப்புகள் பிரதேசங்களின் அபிவிருத்திகளின் அடிப்படைகளிலேயே தரப்படுத்தப்படுகின்றன. இருந்தும், மக்களயிடம் நிர்வாகத்தை எடுத்துச் செல்வோம் என்ற மறைந்த முன்னாள் ஜனாதிபதி மாண்புமிகு ஆர்.பிறேமதாசா அவர்களின் எண்ணக்கருவின் அடிப்படையில் ஓர் பிரதேசத்திற்கு ஒரு உள்ளூராட்சி மன்றம் என்ற முறைமை 1988ஆம் ஆண்டில் செயல்வடிவம் பெற்றது. இதன் அடிப்படையில் கிராமங்கள் அடங்கப்பெற்றப் பிரதேசங்கள் அனைத்தும் பிரதேச சபைகள் என்றும் அபிவிருத்தி பெற்றிருந்த பிரதேசங்கள் அனைத்தும் அவைகளின் அபிவிருத்திகளின் தன்மைக்கேற்ப நகர சபைகள் என்றும் மாநகர சபைகள் என்றும் வடிவம் பெற்றன.

உள்ளூராட்சி நிர்வாக அமைப்பு முறை மக்கள் நேரடியாக, அம்மன்றங்களின் நிர்வாக நடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்கு வழிவகுக்கின்றது. உதாரணமாக சனசமூகச்சங்கங்கள், சமூக அமைப்புகள், ஆலோசனைக் குழுக்கள், வரியிறுப்பாளர்கள் சங்கங்கள் என்பவைகள் உள்ளூராட்சி நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்கும் அமைப்புக்களாகவும் செயற்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றங்களின் பொதுவான கடமைகள் எள்ள? இதற்காள விடை இதோ தரப்படுகின்றது.

'இவைகள் பொதுமக்கள் சுகாதாரம், பயன்பாட்டுச் சேவைகள், பகிரங்க பொதுவிதிகள், தொடர்பிலான சகல கருமங்களையும் ஒழுங்குபடுத்தி கட்டுப்பாடுகளை விதித்து நிர்வாகத்தினை மேற்கொள்கின்றன. அத்துடன் மக்களின் சௌகர்யத்தையும், வசதியையும், சேமநலனையும் வாழ் வசதிகளையும் மேம்படுத்துகின்றன' என இரத்தினச் சுருக்கமாகக் கூறலாம்.

நாம் வாழும் சூழலில் காணப்பட வேண்டிய அடிப்படைத் தேவைகள் யாவை? முதலாவது சுகாதார வசதிகள், அடுத்து வீதி அபிவிருத்திகள் மற்றும் அவைகளின் கட்டுப்பாடுகள், திட்டமிடப்பட்ட வகையில் கட்டடக் கோடுகள், வீதி ரேகைகளை மீறாது சீராகக் கட்டட அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளுதல், அபிவிருத்தியின் நோக்கில் பிரதேசங்களை வர்த்தக, கைத்தொழில், குடியிருப்பு வலயங்களாக இனங்காணுதல் - வடிகால் அமைப்புகள் - நீர் சேவை வழங்கல், பயன்பாட்டுச் சேவைகளாகிய பொதுச் சந்தைகள், வீதி வெளிச்சங்கள் என்பனவற்றை ஏற்படுத்துதல், நலன்புரிச் சேவைகளாகிய நூலகங்கள் , முன்பள்ளிகள்,சனசமூக நிலையங்கள்,பூங்காக்கள் என்பனவற்றை நிறுவுதல், வறிய பாடசாலைச் சிறார்களுக்கு இலவச நூல்கள் என்பனவற்றை வழங்குதல், புலமை பரிசில்கள் வழங்குதல் போன்ற சேவைகளேயாகும். வீதிகள் பாழடைந்து பிரதேசங்கள் குப்பை கூழங்களால் நிரம்பிக் காட்சி தருமாயின் அப்பிரதேசங்களின் சுற்றாடல் முற்றிலுமாக மாசுபடுகின்றன என்றே கூற வேண்டும்.

எனவே மத்திய அரசினாலோ அன்றேல் மாகாண அரசினாலோ மக்களுக்கு வழங்கப்படக்கூடிய மேற்படி அடிப்படைத் தேவைகளை அன்றாடம் செய்வது கடினம் எனக் கருதப்பட்ட காரணத்தினால் மட்டுமல்ல மக்கள் தத்தம் தேவைகளை தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஒத்தாசையுடன் தங்குதடையின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்ளலாம் என்ற அடிப்படையிலும் பாரிய இப்பொறுப்புக்கள் யாவும் மக்கள் பிரதிநிதிகளினால் நிர்வகிக்கப்படும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இவ்வாறான பொறுப்புக்களைக் கொண்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் வரிசையில் எமது மட்டு மாநகர சபையும் ஒன்றாகும். மாநகர சபை என்ற அந்தஸ்துடன் மட்டு மாநகர மக்களுக்கு தனது வளங்களை சிக்கனமாகவும் சீராகவும் பயன்படுத்தி அளப்பரிய சேவைகளை வழங்கி வரும் இம்மாநகர சபை அதன் கடந்த காலங்களில் எவ்வாறான கட்டமைப்புகளைக் கொண்டிருந்ததென்றும் பார்ப்போம்.

1884 – 1992ம் ஆண்டுகள் வரை உள்ளூர் சபையாக ( Local Board ) ச் செயற்பட்டது.

1933 -1967 06.30 வரை – நகர சபையாகச் செயற்பட்டது.
01.07.1967 - இன்று வரை மாநகர சபையாகச் செயற்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வராகப் பதவி வகித்த பெருமை எமது முன்னாள் இந்துக்கலாச்சார அமைச்சர் திரு.செல்லையா இராசதுரை அவர்களையே சாரும். இவருக்குப் பின்னர் வணக்கத்துக்குரிய கே.தியா கராஜா, இ.அம்பலவாணர், செழியன் ஜே.பேரின்பநாயகம் ஆகியோர் முதல்வர் பதவிகளை வகித்தனர். இருப்பினும் ஓர் முதல்வரின் பதவிக்காலம் 4 ஆண்டுகள் என வரையறுக்கப்பட்டிருந்தும் வணக்கத்திற்குரிய செழியன் ஜே. பேரின்பநாயகம் அவர்கள் மட்டும் 01.04.1994 தொடக்கம் 31.03.1999 வரை 5 ஆண்டு காலம் முதல்வர் பதவியை வகித்தார். இவரது பதவிக்காலம் மத்திய அமைச்சரினால் ஓராண்டு நீடிக்கப்பட்டமையே இதற்குரிய காரணமாக அமைந்தது. இம்மாநகர சபையானது மாநகர சபை அந்தஸ்தைப் பெற்று 33 ஆண்டுகள் பூர்த்தி பெறந்றிருப்பினும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் இச்சபை 01.07.1997 தொடக்கம் 31.12.1984,01.04.1994 தொடக்கம் 31.03.1999 என்ற காலப்பகுதி வரையுமே நிர்வகிக்கப்பட்டது. ஏனைய இடைப்பட்ட காலப்பகுதிக்குள் இம்மாநகர சபை விசேட ஆணையாளர்களாலும், மாநகர ஆணையாளர்களாலும், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களாலும் நிர்வகிக்கப்பட்டது. தற்போது இம்மாநகர சபையின் நிர்வாக முன்னெடுப்புகள் யாவும் தற்போதைய மாநகர ஆணையாளர் திரு.சரவணமுத்து நவநீதன் அவர்களால் மேற்கொள்ளப்படு கின்றன. வடக்கு கிழக்கு மாகாணத்தின் கட்டுப்பாட்டுக்குள் செயற்பட்டு வரும் இம்மாநகர சபையானது அதன் நிர்வாகச் செயற்திறன் காரணமாக வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள மாநகர சபைகள் மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டியில் 1ம் இடத்தைப் பெற்று இதற்கான வெற்றிக்கேடயத்தையும் தட்டிக்கொண்டது.

மட்டக்களப்பு மாநகர சபையில் காணப்படும் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் அதிகாரம் வடக்கு கிழக்கு மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் மாநகர ஆணையாளருக்கு வழங்கப்பட்டதை அடுத்து அவர் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் பெரும் புரட்சியொன்றையே ஏற்படுத தியுள்ளார். ஓர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுபவர் ஒருவர் வேறுபல தகைமைகளைக் கொண்டிருப்பா ராயின் ஆட்சேர்ப்பில் அவருக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இதன் காரணமாக மட்டக்களப்பு மாநகர சபை வேலைத்தளத்தில் கடமையாற்றக் கூடிய திறமைசாலிகளான மோட்டார் வாகனத் திருத்தங்களை மேற் கொள்ளக்கூடிய பொறிநுட்பவியலாளர்கள் ,ஓட்டுநர்கள், குழாடியொட்டுநர்கள், வர்ணம் தீட்டுபவர்கள், கட்டடமமைப்போர்கள், தச்சர்கள், கொல்லர் கள் போள்றோரை அதிக அளவில் உருவாக்கியுள்ளார். இதன் நிமித்தம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதிக பணத்தை விரயமாக்கி அபிவிருத்தி சேவைகளை மேற்கொள்ள வேண்டிய கடப்பாட்டிலிருந்து இம் மாநகர சபையை விடுவித்துள்ளார். துரிதமாக வாகனத்திருத்தங்கள் மேற் கொள்ளப்படுகின்றன. கட்டடமைப்பு, வீதியமைப்பு போன்ற வேலைகள் யாவும் துரிதமாகவும், செப்பமாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. தொழிலாளர் தரத்திலுள்ள ஒருவரைக் கொண்டு தேர்ச்சி பெற்ற தொழிலாளர் தரத்தினரை உருவாக்கியுள்ளார். இன்றும் அபிவிருத்தி வேலைகள் அனைத்தும் பக்குவமாக மட்டுமாநகர் வாழ் மக்களின் வசதி மற்றும் நலன் கருதி மேற்கொண்டு லரும் பெருமை மட்டக்களப்பு மாநகர ஆணை ளயாளர் திரு.ச.நவநீதன் அவர்களுக்கே உரித்தாகும். அன்பாக ஊழியருடன் ஊழியர் ஒருவராக நின்று சேவைபுரியும் அவர் குற்றமிழைத்த ஊழியரை முறையாகத் தண்டிக்கவும் தவறியதில்லை என்றே கூறவேண்டும். இவரது சேவைக்காலத்தில் மட்டக்களப்பு மாநகரசபை மக்களுக்கு 2002ம், 2003ம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட முக்கியமான சேவைகளை இங்கு நான் குறிப்பிட்டேயாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01 . நடமாடும் நூலகச் சேவை பெறுமதி - 3,800,000/-

02. குடிநீர் தட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தண்ணீர் வழங்குவதற்காக யுனிசெப் நிறுவனத்திடமிருந்து பெற்ற நீர்கொள்கலன்கள் தாங்கிய வானங்கள் -02 - 7,500,000/-

03. அபிவிருத்தி வேலைகளுக்குத் தேவையான கட்டடப் பொருட்களை தூர இடத்திலிருந்து ஏற்றியிறக்குவதற்காக பத்துச் சக்கர வாகனம் - 3,500,000/-

04. வடிகாலமைப்பு வேலைகள் 2002 - 4,840,000/-

05. புதிய நூலகக் கட்டடத் தொகுதி - 6,000,000/-

06. திருச் செந்தூர் கிராம மக்களுக்கு குடிநீர் வழங்குவதங்காக அமைக்கப்பட்ட தண்ணீர்ச் சேவைத்திட்டம் - 2,000,000/-

07. மலகூட வசதி இல்லாதவர்களுக்கு மலகூட வசதிகள் அமைத்துக் கொடுத்தல் - 1,200,000/-

அது மட்டுமல்லாது குடிநீர் வசதிகளின்றி துன்புறும் புதூர், வலையிறவு, சேத்துக்குடா, வீச்சுக்கல்முனை, திமிலைதீவு போன்ற கிராமமக்களுக்கு இவரது காலந்தொட்டு குடிநீர் வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்காக இச்சபை வருடாந்தம் ரூபா 2,500,000/- வரை செலவழித்து வருகின்றது.

ஆணையாளரின் அயராத முயற்சியினால் கனடாவில் வாழும் மட்டு நகரைச் சேர்ந்தவர்களும் தங்கள் மண்ணை நேசிப்பவர்களுமாகிய எம் பிறப்புகள் பலர் ஒன்று சேர்ந்து எமது பொது நூலகத்திற்கு கணணி வசதிகளை ஏற்படுத்தித் தர முன்வந்துள்ளனர். இதற்கு முன்னோடியாக ரூபா 200,000 பெறுமதியான நூல்களை பொதுநூலகத்திற்கு கொள்வனவு செய்வதற்காக காசோலையும் அனுப்பியுள்ளார்கள். (NECORD) நிறுவனத்தின் மூலம் கழிவு அகற்றும் வாகனம் ஒன்றும் எமக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. வருடாந்தம் பன்முகப் படுத்தப்பட்ட வரவு,செலவுத் திட்ட நிதியம், குறித்தொதுக்கப்பட்ட மாகாண விசேட நன்கொடை, பிரமாண அடிப்படையிலான மூலதன வேலை நன்கொடை, சபை நிதியம் என்பவைகள் மூலம் வருடாந்தம் ரூபா 2,500,000/- க்கு மேற்பட்ட வீதி அபிவிருத்தி வேலைகள், வடிகால் திருத்தம், சந்தை புனரமைப்பு போன்ற வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகைய அபிவிருத்திப் பணிகள் யாவும் முறையாக மேற்கொள்ளப்படுவதற்கு மட்டு மாநகர சபையில் கடமையாற்றும் அனைத்து தரத்திலுமுள்ள ஊழியர்களது ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு சீராக வழங்கப்படுவதே அடுத்த சிறப்பு அம்சமாகும்.

கருவறை தொட்டு கல்லறை வரை மட்டக்களப்பு மாநகர சபை தனது வரியிறுப்பாளர்களுக்கு மகத்தான பணிகளை ஆற்றி வருவதற்கு மாகாண மட்டத்திலுள்ள உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சிக்குப் பொறுப்பான செயலாளர் ஆகியோரின் ஒத்துழைப்பும் அவ்வப்போது தேவைக்கேற்ப கிடைத்து வருகின்றன என்று கூறின் மிகையாகாது எனக் கூறி எனது கருத்துக்களை இத்துடன் நிறைவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி நிலைபெறட்டும்!

- அன்பழகன் குரூஸ் -

என்னினிய தேசமிது மட்டுநகர்
எண்திசையும் வீரம்விளை பூமியிது
தென்னைபலா தேமாவும் வாழையுடன்
தெவிட்டாத தீந்தமிழின் ஊற்றுமிது

காடுவயல் பாடுநதி சேனைகளும்
காதினிக்கும் கலைநயமும் கவியமுதும்
வீடுதொறும் விழுமியங்கள் வீற்றிருக்க
வெற்றிநடை போடுதெங்கள் ஊராட்சி

வன்முறைப் பேய்வந்து ஆட்டுவித்து
வதைபட்டு நலிந்தமட்டு மாநகரை
தன்முகமாய்த் தாலாட்டி வளர்த்ததெங்கள்
தரமான ஊராட்சிச் சேவையடா!

சுற்றாடல் கறைபடிந்து நலிவுறவே
சுறுசுறுப்பாய் இயங்கியதெம் ஊராட்சி
தற்பாது காப்பென்ற செயற்பாட்டால்
தக்கதொரு பணிபுரிந்து மீட்டதடா!

கொலைவெறியும் கொள்ளைகளும் நிலைகுலைவும்
குதித்தெழுந்து கொடுமைசெய்த காலமதில்
நிலைகொண்டு உளமாறப் பாடுபட்டே
நிம்மதியைத் தந்ததெங்கள் ஊராட்சி

கிழக்கலைகள் பாராட்ட வளருகின்ற
கிளைகொண்ட மரமெங்கள் ஊராட்சி
உழைக்குமதன் கரங்கள் வலுவோங்குதற்கு
உளமாற வாழ்த்துகின்றேன் வாழியவே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கத்திறனுள்ள நூலகச் செயற்பாட்டிற்கு உசாத்துணை சேவையின் ( Reference Service) பங்களிப்பு : வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சபைகளின் நூலகங்கள் ஒரு நோக்கு.

திருமதி. தவமணிதேவி அருள்நந்தி
B.A(Hons) MLIS (Bangalore)
பதில் நூலகர்
கிழக்குப்பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

ஆரம்ப காலத்தில் நூலக சேவைகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு மூடிய அணுகுமுறையாகவே (Closed access) காணப்பட்டன. பின் ஏற்பட்ட கடாதாசி கண்டுபிடிப்பு, அச்சியந்திர பாவனை, கைத் தொழில் புரட்சியானது நூலகங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தத் தவறவில்லை. முக்கியமாக அளப்பரிய தகவல் வெளியீடுகள் (Information explosion) வெளியீடுகளின் உருவங்கள் ( From book to non-book materials ) பல்வேறு மொழியிலான வெளியீடுகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றன. தகவல் வளங்கள், தகவல் வழங்கும் நிலையங்கள், தகவல் சேவைகள் என்பன இருபதாம் நூற்றாண்டின் தோற்றமாக காணப்பட்டாலும் நூலகங்களில் அல்லது தகவல் நிலையங்களில் பெறப்படும் அல்லது அளிக்கப்படும் சேவைகளுள் உசாத்துணைச் சேவை மூலம் (Reference Service) அன்று தொட்டு இன்றுவரை காணப்படுகின்றது. இச்சேவை எவ்வாறு நூலகங்கள் செயற்பாட்டிற்கு உதவுகிறது எனக்கூறி வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சபைகளினது நூலகங்கள் இவ் உசாத்துணை மூலம் எத்தகைய செயற்பாட்டை வழங்க முடியும் என்பதை நோக்கலே இக்கட்டுரையின் நோக்கம்.

## நூலகங்களில் காணப்படும் பல்வேறுபட்ட சேவைகள்

பொதுவாக நூலகங்கள் சேவையை மையமாகக் கொண்டவை. இவ் நூலகங்கள் எவ்வித இலாப நோக்கமற்ற தொழில்சார் ஸ்தாபனங்களாகும். இவ்நூலகங்களில் ஆவணங்கள் (Documents) வாசகர் (Readers) உத்தியோகத்தர் (Staff) என்பன அதிகரிக்கப்பட்டமையால் இவை தத்தம் தேவை, நோக்கம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை.

- பொது நூலகங்கள் (Public Libraries)
- தேசிய நூலகங்கள், (National Libraries)
- கொழும்பு -7
- கல்வி நூலகங்கள் (School, College Libraries)
- சிறப்பு நூலகங்கள் (Special Libraries)
- தென்னை ஆராச்சி நூலகம்
- வைத்தியசாலை நூலகம்
- சிறைக்கூட நூலகம்

மேற்கூறப்பட்ட நூலகங்கள் சிறியவையாகவோ பெரியவையாகவோ காணப்பட்டாலும் இவற்றில் கீழ்வரும் சேவைகளை அல்லது பகுதிகளை அடயாளம் காணலாம்.


- உசாத்துணை சேவை ( Reference service)
- தொழிநுட்ப சேவை ( Technical Service)
- பருவஇதழ் பகுதி (Periodical Section)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நூல்கள் கட்டும்/திருத்தும் பகுதி (Bindery Section)

இவை ஒவ்வொன்றும் பல்வேறு சிறிய பிரிவுகளாகப் பிரிக்கப்படுவதைப் பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.




நூலகத் தகவல் சேவை – (Information Service )

மற்கூறப்பட்ட சேவைகளின் பிரிவில் உசாத்துணை சேவை, வாசகர் சேவையில் உள்ளடக்கப்படுவதைக் காணலாம்.

## உசாத்துணை சேவை ( Reference Service)

வாசகர் சேவையில் ஒன்றான இச்சேவை நூலகங்கலிருந்து பிரிக்கமுடியாத ஒன்றாகும். தனியாக இயங்க முடியாத ஏனைய பகுதிகளின் சேவைகளைவிட மக்களுடன்/வாசகருடன் நேரடியாக தொடர்புபட்ட சேவையாகும். இதன் ஆரம்பம் மிகவும் காலத்தால் முற்பட்ட ஒன்றாகவுள்ளது. நூலகம் மூடிய அணுகுமுறையாகக் காணப்பட்ட காலத்திலும் சில குறிப்பிட்ட ஆவணங்களை சில குறிப்பிட்ட வாசகருக்கு குறிப்பிட்ட இடத்தில் வாசிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. இந்நிலமைகள் மாறி தகவலைத் தேடிப் பெற்றுக்கொடுத்து வாசகருக்கு உதவி செய்யும் சேவையானது 1870ன் நடுப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவில் தோற்றம் பெற்றமையை அவதானிக்க முடிகிறது. இன்று நூலுருவில் மட்டுமல்லாது ஏனைய வடிவங்களிலும் கணனி தகவலிலும் இணையத்தளம் மூலமும் தகவலைப் பெற்று இச்சேவை முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இச்சேவைக்கென நூலகர் நியமிக்கப்பட்டு சேவை அளிக்கப்படகிறது. ஏந்த நூலகத்திலும் தகவலைப் பெற்று/ சேகரித்து ஒழுங்குபடுத்தி பாதுகாத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகருக்கு விடல் பொதுவான சேவையெனினும் இவ் உசாத்துணை சேவையில் முக்கியமானது இத் தகவலை சரியான வாசகருக்கு சரியான நேரத்தில் தேவையான வடிவத்தில் கொடுக்கப்பட்டு (The right information to the right reader in a right time in right format) வருகிறது.

**உசாத்துணை சேவை:தகவல் சேவை**

இவ்விரு சேவைகளும் தனித்தனியாக காணப்பட்டாலும் இவை ஒன்றிலிருந்து ஒன்று அதிகம் சேவை யளவில் வேறுபடமுடியாதவை. உதாரணமாக ஒரு வாசகர் ஒரு தகவலை உசாத்துணை சேவைப் பகுதியினின்று பெற்றுக்கொண்டால் அவர் தகவல் பெற்றுக்கொண்ட திருப்தியில் செல்வார். ஆனால் அத்தகவல் உசாத்துணை சேவையினின்று பெற்றுக்கொண்டால் அது உசாத்துணை சேவையின் செயற்பாடாக உள்ளது. ஆகவே இங்கு தகவல் சேவையின் உள்வாங்கிய பகுதியாக உசாத்துணை சேவை உள்ளது.

**டாக்டர் எஸ்.ஆர் ரங்கநாதனும் உசாத்ததுணை சேவையும்**

டாக்டர் இரங்கநாதன் இந்தியாவின் நூலக தந்தை. அவரது ஐந்து நூலக விதிகள்

1. நூல்கள் பாவனைக்கே (BooK are for Use)
2. ஓவ்வொரு வாசகரும் ஒரு நூலுடையவர் (Every reader his or her book)
3. ஓவ்வொரு நூலும் ஒரு வாசகருடையது (Every its reader )
4. வாசகர் நேரத்தினை பேண் (save the time of Reader)
5. நூலகம் வளரும் ஸ்தாபனம் (Library is a growing organization )

எக்காலத்திற்கும் எந்த நூலக தகவல் விஞ்ஞானத்திற்கும் பொருத்தமானது. அவர்வெளியிட்ட உசாத் துணை சேவை (Reference Service) எனும் நூலில் வாசகருக்கும் நூலக ஆவணங்களுக்கும் ஒரு தொடர்பினை ஏற்படுத்துவதே இவ் உசாத்துணை சேவையின் நோக்கம் எனக் கூறியுள்ளார். நூல்கள் பாவனைககே எனறால சேகாககபபடும நூல ஒழுஙகு முறைபபடி நூலகததுல வைககபபடும. வாசகருககு வேண்டிய நேரத்தில் கொடுக்கும் போதே அந் நூல் பாவனைக்குள்ளாகும். அத்தகவலும் உரிய நேரத்தில் கொடுக்கும் போதே வாசகர் நேரம் பேணப்படும். நூலகம் இன்று நூலக தகவல் விஞ்ஞான நிறுவனமாக மாறியுள்ளமைக்கு அவரது ஐந்தாம் விதி மிகவும் பொருத்தமுடையதை மறுப்பதற்கில்லை.

**ஆக்கச் செயற்பாட்டில் உசாத்துணை சேவையின் பங்கு**

எமக்கு ஏற்படும் சாதாரண உணவுப்பசி உடல் உள்ளும் தோறும் ஏற்படுகின்றது. ஆனால் அறிவுப் பசியானது ஒரு முறை வந்தால் அதே பசி அதே தேவையை யொட்டி மீண்டும் ஏற்படுவது மிகவும் அரிது. ஆராய்ச்சித் தேவையையொட்டி உசாத்துணை சேவை நாடுபவரை தகவல் இல்லாது அனுப்புவது ஒரு நூலகத் துறைக்கு சிறப்பானதன்று. தம்மிடத்தில் அக்குறிப்பிட்ட தகவல் இல்லாவிட்டால் அதை எங்கே பெறலாம்:? எப்படி பெறலாம்? எவரிடம் பெறலாம்? போன்ற விபரங்களையாவது கொடுப்பது (வழிநடத்தல் - Referral ) நூலகத்தின் சிறப்பான சேவையாகும். அல்லது வாசகரின் நலன் கருதி தமது நிர்வாகக் கட்டமைப்புக்குட்பட்ட அளவில் குறிப்பிட்ட தகவலை வேறு ஒரு தகவல் நிலையத்தி லிருந்து இரவல் பெற்றுக் (Inter Library Loan Service ) கொடுத்தல் வாசகரை மீண்டும் நூலகத்திற்கு நாடிவரச் செய்யும் உத்தியாகும். ஏனெனில் ஒரு குறிப்பிட்ட தகவல் சில முடிவுகளை எடுக்க, ஆராய்ச்சிகளை மேற்கொள்ள எனப் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படும். தகவல் நாட்டின் பாரிய சொத்து.

**உசாத்துணைக் கருவிகள்**

சொல்லகராதியை மட்டும் தேடி வரும் வாசகர் நோக்கம், தேவை அறிந்து அவரை பொதுவான அல் லது பாடம் சம்பந்தமான கலைக்களஞ்சியங்களை அணுக வழியமைக்கலாம். இங்கு சில கருவிகளை உதாரணமாகக் காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| உசாத்துணைக் கருவிகள் Encyclopaedia | அணுகப்பட்டதன் காரணம் | கிடைத்த தகவல் |
|---|---|---|
| | ஒருவிடயத்தின் பொதுவிடயங்கள் அனைத்தும் பெறல் | இடம், மக்கள் |
| Dictionary | மொழி சம்பந்தமான கேள்வி | சரியான எழுத்துக்கள், உச்சரிப்பு, பாவனை |
| Geography Ref. Maps, Atlas | நாடுகளின் விபரங்கள், இயற்கை விபரங்கள் | இருப்பிடங்கள், விபரங்கள். |
| Bibliographies | நூல்கள், பருவ இதழ்கள் வெளியீடுகள் | நூல் விபரங்களின் தகவல்கள் |

**உசாத்துணை சேவை அணுகுமுறை**

பொதுவாக இருவிதமான முறையில் வாசகரிடமிருந்து கேள்விகள் ஏற்படும்

I. தெரிந்த விடயத்தில் தகவல் கேட்டல் அவ்விடயம் சம்பந்தமான ஆசிரியர் தலைப்பு, தலைப்பு என்பவற்றை அறிய விரும்பல்

II. குறிப்பிட்ட விடயம் பற்றி எதுவும் தெரியாத நிலையில் கேட்டல்

பல நூலககங்களில் சிறப்பாக பாடசாலை பொதுநூலகங்களில் இத்தகைய தகவல் அறிய முற்படுதல் உண்டு.

ஆகவே இவற்றை எதிர் கொள்ளும் உசாத்துணை சேவையினர் தம் வாசகருக்குத் தகவலை அளித்தல் சிறப்புடையதும் ஆக்கபூர்வமானதாகும்.

**உசாத்துணை சேவையின் இரு பெரும் பிரிவுகள்**

உசாத்துணை சேவையின் பரிணாமம், இலகுவாக்கும் தன்மை கருதியும் திட்டமிட்ட நல்ல சேவையை அளிக்குமுகமாக இரு (2) பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

I. உடனடியான உசாத்துணை சேவை ( Ready Reference Service)
யார்? (who – தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் ) என்ன? (what) ஏன்? (why) எப்பொது? (when) போன்ற மிக சுருக்கமான கேள்விகளுக்கு விடையளிக்கப்படும். இத்தகைய கேள்விகளில் 60% ஆனவை பொது நூலகங்களிலும் 30% ஆனவை ஏனைய நூலகங்களிலுமே கேட்கப்படு கின்றன.

II. நீண்டகால உசாத்துணை சேவை (Long Rang Reference Service) சிறிது கால அவகாசம் எடுத்து தகவல் கொடுத்தல் முறை. அதாவது ஒரு கிழமை அல்லது அதற்கு கூடிய காலம் (வேறு தகவல் நூலகங்களில் இரவல் பெற்று) எடுக்கப்படலாம். இவற்றுடன் வேண்டிய உரு வத்திலும் கேட்கவும்படலாம்.

இத்தகைய சேவையைபொட்டி அணுகும் நூலகங்களில் இவ் உசாத்துணை சேவை திட்டமிட்ட ஒழுங் கில் இருப்பதன் மூலமே அதன் நோக்கம் நிறைவேற்றப்படும். வாசகர் தேவையும் பூர்த்தி செய்யப்படல் சாத்தியமானதாகும். சில நூலகங்களில் இத்தகைய உசாத்துணை சேவைகள் 50% ஆனவை இரவல் கொடுத்து வாங்கும் பகுதியில் (Circulation Desk) நிறைவேற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதியோருக்கான சேவை (Adult Service)**

1980 களிலிருந்து இம் முதியோருக்கான சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உசாத்துணை சேவையைப் பெறுவதில் இவர்களும் இன்று முக்கிய இடம் பெறுகின்றனர். இவர்களுக்குத் தேவையான தகவல்கள் விரைவாகவும் ஒழுங்காகவும் கொடுத்தல் அவசியம். இவற்றுடன் அவர்கள் மூலம் நன்கொடைகள், ஆலோசனைகள், அனுபவங்கள் அறிவினைப் பெற்றுக்கொள்ளுதலுக்கு உசாத்துணை சேவை திட்டமிடப் பட்டதாக இருத்தல் அவசியம். ஏனெனில் எந்த வாசகரும் எந்தவொரு நிலையிலும் முக்கியமான இடத்தைப் பெறுவதை மறுப்பதற்கில்லை

**உசாத்துணை நூலகரின் கடமை**

எமது நாட்டில் தகவல் நிறுவனங்கள், பல்கலைக்கழக, சிறப்பு நூலகங்களில் உசாத்துணை சேவை, தகவல் சேவைகளைக் கவனிப்பதற்கு உதவி நூலகர் அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியுடையவர்களைக் காணலாம். ஆனால் பாடசாலை பொது நூலகங்களில் இவற்றுக்கான பொறுப்புக்கள் உசாத்துணை நூலகருக்குக் கொடுக்கப்பட்டாலும் அதற்கான ஆளணிப்பலம் இருக்கின்றதா என்பது நோக்கவேண்டிய விடயமொன்றாகும். எனினும் அப்பகுதியின் முக்கியம் கருதி சில கடமைகளும் அவர் தன்மைகளும் குறிப்பிடல் அவசியம்.

- பொது நூலகம் பொதுமக்கள் கல்வி நிறுவனமாக கருதப்படுவதால் அவர் மக்களினது/வாசகரது தேவையை உணர்ந்து செயற்படல்.
- சேவையுணர்வு உடையவராயிருத்தல்
- தகவல்கள் நாளாந்தம் பெருகி வருவதால் அவர் தன்னை தவகல் வளமுடையவராக (Updating) மாற்றிக்கொள்ளல் அவசியம்.
- பயனுள்ள தகவல்களைப் பிரித்தெடுத்து கொடுத்தலும் ஏனையவற்றைத் தவிர்த்தலும் அவசிய மானதாகும்.
- பொருத்தமான எந்தத் தகவல்களையும் வாசகருக்கு அறிவித்தல் (விளம்பரம், துண்டுப்பிரசுரம், கலந்துரையாடல், நண்பர்கள்/வாசகர் ஊடாக அறிவித்தல்).
- கணனிப் பாவனை இருக்குமெனில் அதன் மூலம் முக்கிய தகவல்களை அறிவித்தல்.

**உசாத்துணை சேவையினைப் பாதிக்கும் சில காரனிகள்**

நூலகர் கடமையுணர்வுடையவராக இருந்தாலும் சில காரணிகளால் உசாத்துணை சேவை முழுமையான சிறப்பை பெறமுடியாதுள்ளதையும் மறுப்பதற்கில்லை. உத்தியோகத்தர் பற்றாக்குறை, நிதிப்பற்றாக்குறை, நிர்வாகச்சிக்கல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**வடக்குக் கிழக்கு உள்ளூராட்சி சபைகளின் நூலகங்கள்**

இன்றைய போர்க்கால சூழ்நிலையிலும் இயற்கை அழிவினாலும் தாக்கப்பட்ட இவ் நூலகங்கள் தங்களால் இயன்ற சேவைகளை ஆற்றுகின்றன. இங்குள்ள பொதுநூலகங்கள், நூற்தொகை, வாசகர் தொகை (அண்ணளவு) என்பன பின்வரும் அட்டவணையிலுள்ளன.

| மாவட்டம் | பொது நூலகங்கள் | நூற்தொகை (அண்ணளவு) | வாசகர் அண்ணளவு |
|---|---|---|---|
| திருகோணமலை | 30 | 1,01,764 | 20,000 |
| மட்டக்களப்பு | 25 | 1.11,218 | 40,000 |
| யாழ்ப்பாணம் | 55 | 2,22,446 | 50,000 |
| கிளிநொச்சி | 8 | 8,820 | 5,000 |
| மன்னார் | 16 | 23,920 | 5,000 |
| வவுனியா | 11 | 34,401 | 10,000 |
| அம்பாறை | 28 | 1,50,000 | 30,000 |
| முல்லைத்தீவு | 10 | 1.66,682 | 30,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் நூலகங்களில் மேற்கூறிய காரணிகள் இவ் உசாத்துணைச் சேவையை முழுமையாக செய்யமுடியாதவாறும் ஆக்கலாம். மேலும் இவ் நூலகங்களில் வரும் அதிகமான உசாத்துணைக் கேள்விகளுக்கு நூலகரே தகவல் கொடுப்பவராக இருக்கலாம். இதற்கு ஆளணிப்பற்றாக்குறை முக்கிய காரணமாகலாம் எனினும் இருக்கும் வளங்களை, உசாத்துணை தகவல்களை உரியமுறையில் வாசகருக்கு கொடுக்கின்றோமா என்று எம்முன் ஒரு வினாவை எழுப்பினால் என்ன விடை கிடைக்கும்? சிந்திக்கவேண்டிய விடயம்.

பொது நூலகங்கள் பொதுமக்களின் பல்கலைக்கழகம், மாணவர் குழாத்தின் தகவல் மையங்கள். ஆகவே இருக்கும் வளத்தை முதலில் சீர்படுத்தி வழங்கமுற்படவேண்டும். தம்மிடமில்லாத தகவல்களை எங்கே பெறலாம் என ஆலோசனை ( Referral Service) வழங்கலாம். இன் நிலையில்தான் வாசகர் மீண்டும் அந்நூலகத்தை நாடுவர். மேலும்

- நூலகத்திற்கு புதிதாகச் சேர்க்கப்பட்ட ஆவணத்தகவல்களை அறிவித்தல்
- பாடநெறி, உத்தியோக வாய்ப்புக்கள் வர்த்தகமானி பிரசுரங்களை உடனுக்குடன் விளம்பரப் பலகை மூலம், வேறுவாய்ப்பான ஊடகங்கள் மூலம் அறிவித்தல்
- சுகாதார விடயங்கள், தொற்று நோய் ஒழிப்பு விடயங்களை/அறிந்தவற்றை அறிவித்தல்.
- தம்மிடமில்லாத தகவல்களை வேறு இடத்தில் பெற்றுக் கொடுத்தல்.
- பத்திரிகை, பருவஇதழ்களின் முக்கிய செய்திகளை உடனுக்குடன் வாசகர்களை அடையாளம் கண்டு அறிவித்தல்.
- புதிய தகவல் ஆவணங்கள், ஆவண உருவமில்லாவற்றைப் பெறமுயலல்.

இவற்றை வாசகர் அடையவேண்டுமாயின் உசாத்துணை சேவை ஆக்கபூர்வமாக திட்டமிடல் அவசியம். நிறுவனத்தின் நோக்கம், வாசகர் யார், ஆவணங்கள் எவை கொள்வனவு செய்யப்பட வேண்டும். என்பதில் நூலக நிர்வாகம் தீர்க்கமான முடிவை கொண்டிருத்தல் அவசியம்.

**முடிவுரை**

எத்தகைய திட்டம், நோக்கம். வளங்கள் இருந்தாலும் உத்தியோகத்தர் சிறப்பாக நூலகர் அல்லது உசாத்துணை நூலகர் சேவை மனப்பான்மையுடன் இயங்கல் மிகவும் அவசியமானதாகும். அன்றைய நூலக முறையிலான மூடிய அணுகுமுறையை மீண்டும் நூலகத்திற்கு கொண்டு வருவதில் நூலகர் எதிராளியாகச் செயற்படல் வேண்டும். அறிவுப்பரம்பலைச் (Dissemination of knowledge) செய்வதில் முன் நிற்க வேண்டும். மிகவும் விலைமதிக்கமுடியாத தகவலின் பெறுமதியை உணர்ந்து அதைப் பெற்று பயன் பெறுபவர்க்கு வழங்கல் வேண்டும். இன்றைய தகவலைப் பெறும் மாணவர் சமுதாயத்தின் கல்வி, நூலகர் வழங்கும் தகவல் மூலம் வளரவேண்டும். அவர்கள் நற்பிரசைகளாகி நாட்டு சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சிக்கு உந்துதலாக ஆக்கபூர்வமான செயற்திட்டங்களுக்கு வித்திடுபவராக வளரவேண்டும். இது தகவல் வழங்கும் நூலக, தகவல் விஞ்ஞான நிறுவனங்கள் சேவை மனப் பான்மையுடன் தம்மை அர்ப்பணித்தல் மூலமே சாத்தியமாகும்.

**References**

1. P.S Kawatra editor , The Library and information studies handbook: An introductory Reference, New Delhi: Crest publishing House, 1994 P .374
2. Handbook of Reference of Information Services (some new Dimension) New Delhi: Crest Publishing House, 1997, P.351.
3. Krishan Kumar, Reference Service, reprint New Delhi : Vikas publishing House, 1989, P.431.
4. S.R.Ranganthan, Reference Service , reprint Bangalore: Saratha Ranganathan Endowment, 1999, P .432.
5. T Bell Whitlatch, editor, Library users and Reference Services, Newyork : The Haworth Press, Inc. © 1995, P. 304.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# முல்லை

கவிநயன்

இரவுக்கு எதிராய் 'வெளிச்சம்' போட்டிருந்தது நிலவு. இரவின் கறுப்பை நிலவு சலவை செய்திருந்தது. யன்னலூடே தெறித்த நிலா வெளிச்சத்தில் கையைத் தூக்கி, வலித்துக்கொண்டிருந்த காயத்தைப் பார்த்தான் புனிதன். காற்றில்லாத அறை. புழுக்கத்தில் புனிதன் உடலெங்கும் மொட்டு மொட்டாய் வியர்வைத் துளிகள்.
தீக் காயத்தில் வியர்வைத்துளிகள் பட்டதில் 'எரிச்சல்' மேலும் அதிகரிக்க,

'பூ....பூ...' என ஊதியதில் சற்று எரிச்சல் குறைந்ததில், அந்த பிஞ்சு விழிகளில் கொஞ்சம் நிம்மதி தெரிந்தது. மணிக்கட்டுக்குக் கீழே இருபத்தைந்து சத நாணயமளவிலிருந்த அந்தச் சூடுபட்ட காயத்தில் எச்சிலைத் தொட்டுத் தொட்டு வைத்து சற்று நேரத்தில் தூங்கிப் போனான் புனிதன்.

விழிகளின் ஓரங்களில் அரும்பியிருந்த கண்ணீர்த் துளிகள் கன்னக் குழிகளில் விழுந்து நிலவொளியில் கோணல் மாணலான கோடுகளாய்த் தெரிந்தன. அவன் விதியைப் படம் பிடித்தது போல.

பத்தே வயதான புனிதன், சாதாரண குழந்தைகளை விட சற்று குள்ளமாயிருப்பான். முன்னம் பற்கள் இரண்டும் முன்னால் துருத்திக் கொண்டிருந்தாலும், அது எப்போதும் சிரித்துக் கொண்டேயிருப்பது போன்றதொரு தன்மையைத் தந்திருந்தது.

ஒவ்வொரு இரவுகளும் புனிதனின் கண்ணீரால் நனைந்தே கரைந்து விடும். இரவின் கறுப்பைக் கரைக்க அந்தப் பிஞ்சு விழிகளின் கண்ணீர் தினம் தினம் ஊற்றாகிக் கொண்டிருந்தன.

தலைமாட்டிலிருந்து மணிக்கூட்டின் 'அலாரம்' அலறியதில் கண்விழித்தான் புனிதன். அதிகாலை நான்கு முப்பது என்பது தெரிந்து கொள்ளக்கூடிய பக்குவம் இல்லாதிருந்தாலும் உடன் எழவேண்டிய தேவை அவனுக்கிருந்தது.

நேற்று வீடு முழுவதையும் தேய்த்துத்..... தேய்த்துக் கழுவியதிலும்இ சரியாகக் கழுவவில்லை என்பதற்காக, 'ஐயா' சிகரட்டால் சூடு வைத்ததிலும், நொந்து போன உடல் எழும்புவதற்கு மறுத்தாலும், கண்களைக் கசக்கியபடி எழுந்து, ஓரங்கள் கிழிந்துபோன பாயைச் சுற்றி அலுமாரி ஓரமாக வைத்து விட்டுக் குசினிக்குள் நுழைந்தான்.

புனிதனின் நாட்களில் கூடிய நேரத்தை அந்தச் சமையலறையே விழுங்கி விடும்.

'ஐயாவும்' அவர் குழந்தைகள் இருவரும் கட்டிப்பிடித்தபடி தூங்கிக் கொண்டிருந்தனர்.
புனிதனின் மனது அம்மாவின் மடி தாவியது.
'அம்மா' வின் நினைவுகள் விழிகளை நனைத்தன.
'நான் அம்மாவை பார்க்கவே மாட்டேனா' விடைகாண முடியாத இந்த வினா அடிக்கடி அந்தப் பிஞ்சு மனதை வாட்டும்.

'இஞ்ச பாரு . நீ அடிக்கடி இஞ்ச வந்து போனால் உன்ட மகன் உன்னோட வரத்தான் விரும்புவான். மாசம் முடிய நானே காசக் கொண்டு வந்து உன்ட வீட்ட தருவன்.'
அம்மாவுடன் இவ் வீட்டிற்கு வந்த முதல் நாள் வீட்டுச் சொந்தக்காரர் அம்மாவுக்குச் சொன்னது அறிவுரையா? ஆணையா ? என அறியாத வயது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஐயா, சின்னப் பிள்ளை......'
கூலி வேலைக்கு குழந்தையை அனுப்பும் கொடுமையை அறிந்தும், வேறு வழி தெரியாத நிலையில், பரிதவித்தது அத் தாய் மனது.

'நீ ஒண்டும், யோசிக்க வேண்டாம் என்ட பிள்ளை மாதிரி உன்ட மகனும் இந்த வீட்டில சந்தோசமாயிருப்பான்' - அம்மா தைரியப்படுத்தப்பட்டாள்.

'இஞ்ச பெரிசா ஒரு வேலையுமில்லை. நாங்க வேலைக்குப் போனா அம்மாவுடன் சும்மா துணைக்கு வீட்டில் இருந்தாப் போதும்'
ஐயாவின் வார்த்தைகளால் அம்மா, உச்சி குளிர்ந்து போயிருக்க வேண்டும்.
அவள் விழிகளில் ஒரு அற்ப திருப்தி.
'ஐயா, அம்மாட சொல் கேட்டு நடக்கணும் மகன்'
அம்மா பிரிந்த போது 'ஓ' வென அழுதான்.
பத்து வயது வரை அம்மாவின் அணைப்பில் வளர்ந்த புனிதனுக்கு, அம்மாவின் பிரிவு ஆயிரம் சம்மட்டிகளாய் அறைந்தது.
சுருண்டு படுத்தவனை 'இருட்டு' அரக்கனாய், கூரிய நகங் கொண்டு பிராண்டியது.
இரவுகள் 'பூச்சாண்டியாய்ப்' பயமுறுத்தின.
இரவுகளுக்காய்ப் பயந்து பயந்து... கண்ணீர் வற்றும்வரை அழுது அழுது
கண்கள் கூட குழி விழுந்து போயிருந்தன.
வீட்டிலுள்ளவர்கள் இரவு சாப்பிட்டு விட்டுப் போட்டிருந்த பாத்திரங்கள், சமையற் பாத்திரங்களைக் கழுவி ஒவ்வொன்றாக அடுக்கி வைத்துக்கொண்டிருந்த போது, வீட்டு 'அம்மா' குசினிக்குள் நுழைந்திருந்தாள்.
'டேய் சனியன் இந்தக் கிளாசை ஏன் உடைச்சனீ'
அக் குரலில் தொனித்த ஆத்திரமும், படபடப்பும் புனிதனைக் கலவரப்படுத்தின. விளைவைப் பற்றிச் சிந்திக்கு முன்பே..
'படீர்..'
கழுவி வைத்திருந்த அலுமினியச்சட்டி, புனிதனின் முன்னந் தலையில் பட்டுத் தெறித்தது.
'அம்மா....'
வாயைப் பொத்திக் கொண்டதில் அவன் அலறல் வாய்க்குள்ளேயே அடங்கிப் போனது. இல்லாவிட்டால், சத்தம் போட்டு அழுவதற்காகவே அடுத்த தண்டனை காத்திருக்கும்.
உண்மையைச் சொல்லவும் முடியாது.
'சனியன், உடைத்ததுமில்லாமல், என் பிள்ளை மீதா பழியைப் போடுகிறாய்' - என வீட்டுக்கார அம்மா மீண்டுமொரு அவதாரமெடுக்கலாம்.
'இனிமேல் இப்படி உடச்சயென்டால் நல்ல சூடுதான் வைப்பன்' -
அந்த முறைப்பு 'கிள்ளியதை' விடக் காரமாயிருந்தது.
வலித்த கன்னத்தை மெலிந்து போன விரல்களால் தடவி விட்டான்.

தன் நண்பன் சின்னவனுடன் விளையாடும் போது ஒருநாள் சின்னவன் கிள்ளியதில் அவன் கன்னத்தில் ரத்தம் வர,
சின்னவன் வீட்டின் முன்னால் அம்மா போட்ட சத்தத்தில் ஊரே கூடியிருந்தது.
சின்னவன், புனிதனின் நெருக்கமான நண்பன் தினமும் இருவரும்தான் பாடசாலை போவார்கள், விளையா டுவார்கள... ஒரு நாள்கூடப் பார்க்காமல் இருந்ததில்லை.

சின்னவன் குடும்பமும் அகதிகளாக வந்தவர்கள்தான். இருவரது முகாம்களுக்கும் தூர இடைவெளி இருந்தா லும், தூரம் அவர்களைப் பிரித்ததில்லை.
சின்னவன் தனது அப்பா என்றால் பயந்து சாவான்.
நாவல் பழம் அல்லது ஈச்சம் பழம் ஆயக் கூப்பிட்டா அவன் அப்பாவுக்குப் பயந்து வரவே மாட்டான்.
'டேய் புனிதன் நானும் உன்கூட வாரேன்டா....'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதனுக்கு வியப்பாய் இருந்தது. எப்போதும் அடிக்கும் அவன் அப்பா என்னவானார்?
'ஏன்டா, எங்கூட ஈச்சம்பழம் ஆய வந்தா, உன் அப்பா அடிக்க மாட்டாரா'?

'அப்பா செத்துப் போய்த்தார்'- அப்பாவியாய்ச் சொன்னான் சின்னவன்.
மரணத்தைப் பற்றிய அர்த்தமெதுவும் தெரியாத நிலையில்'.
ஒரு தடை விலகிய சந்தோச உணர்வுகள் மட்டும் அந்த விழிகளில் தெரிந்தன.

புனிதனுக்கு, தனது நண்பனின் மகிழ்ச்சி பிடித்திருந்தது.
'நமது அப்பா எப்போது செத்துப் போவார்?'
பிஞ்சு மனது கணக்கு போட்டது.

தினசரி அம்மாவை அடிப்பதும், உதைப்பதும் அம்மா ஓ.....வென்று அழுதழுது ..கை கால்களில் சிறு சிறு காயங்களுடன் துடிப்பதும். அப்பாவின் மரணத்தை வரவேற்பதற்குக் காரணிகளாய் இருந்தன.

பல தடவைகள் அம்மாவின் அழுகை பொறுக்கமாட்டாமல் இடைநடுவே புகுந்து, அடி பட்டு, மிதி பட்டு அழுததற்கெல்லாம் பரிகாரமாய்.....
'அப்பாவும் கெதியா செத்துப் போனால் நல்லதெனப் பட்டது புனிதனுக்கு'

தெரு விளக்குகளற்ற அந்த வீதியில், இரவு ஒன்பது மணிக்குப் பின் நாய்கள் குலைக்கும் போதெல்லாம்.
'நாசமாப் போறவன், முழுமப்புல வாரான் போல!!.'
அம்மாவின் மடிக்குள் சுருண்டு கிடக்கும் புனிதனின் காதுகளில் பல தடவைகள் இந்த வார்த்தைகள் விழும்.
'சனியன் புடிச்சவன், பஞ்சமாபாதகன், கொலைகாரன், குடிகாரன்.... இப்படி வார்த்தைகள் அடிக்கடி மாறினாலும், புலம்பல் தினமும் இருக்கும்

நட்சத்திரங்களின் கண் சிமிட்டலில் மயங்கி மரங்களும் செடி கொடிகளும் காற்றோடு கவி பேசும் ஒலியும்.., இரசனையேயில்லாத நாய்களின் குலைப்பும் மட்டும் மிஞ்சிப் போன அந்த இரவுகளில், புனிதனின் அப்பா மட்டும் குடிபோதையில் தள்ளாடித் தள்ளாடி வருவதும்.
நாய்கள் குரைத்தும், ஊளையிட்டும் அவரைத் தொடர்வதும் ஊரே அறிந்த விடயம்.

'ஒரு நாளைக்கு ஆமிக்காரன் சுட்டுத்தான் இந்த நாசமறுவான் தொலைவான்'
தன் கணவன் மீதான வசை பாடலிலும், அவன் உயிர் மீதான பற்றும் ஒட்டியே இருந்தது.
இரவு முழுவதும் அங்கங்கே 'சென்றிக்கு' நிற்பவர்கள் கண்ணில் படாமல் தன் கணவன் வரவேண்டுமே என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடாகவே அவளின் வசைபாடல் இருந்திருக்க வேண்டும்.
அடிக்கடி தெருப்படலையை நோக்கும் அவள் விழிகள் அதை உறுதி செய்யும். அந்த விழிகளின் பரிதவிப்புடன், அடிக்கடி, தன்னைச் சுற்றிக் கிடக்கும் மூன்று குழந்தைகளின் தலைகளைக் கோதியும், உடல்களைத் தடவி விட்டும், மனதை மட்டும் தன் கணவன் வரும் வீதிகளில் பயணிக்க விட்டு விட்டு, இற்றுப் போன ஓலைத் தட்டியில் சாய்ந்து கிடக்கும் அவளுக்கு,
'தன் கணவனது உயிர் மிகவும் தேவைப்பட்டதாயிருந்தது'
அரை வயிறோ கால் வயிறோ, பிள்ளைகளைப் பிச்சை எடுக்க விடாமல் ஏதோ தினமும் தருபவனாயிற்றே, அவள் விழிகள் அவனுக்காக தினமும் தவமிருந்தன.

'அம்மா மீன், இறைச்சி எல்லாம் ஏம்மா ஆக்கவே மாட்டேங்கிறே'
பிள்ளைகள் அடிக்கடி கேட்கும் போதெல்லாம் தாய் மனது தவித்துப் போகும். அவளும் ஆக்கிப் போட்டவள் தான்.
மூன்று வேளை சோறும், மீன், முட்டை, இறைச்சி என்று!
எல்லாம் ஏன் மாறிப் போனது?
எல்லாவற்றையும் மாற்றிப் போட்ட அந்த நாள் அவள் நெஞ்சுக் குளிக்குள்ளே பத்திரமாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொடியனுகளுக்கும் ஆமிக்கும் சண்டையாம்'
இவை அடிக்கடி கேட்கும் வார்த்தைகள் தான்
துவக்குச் சத்தமும், செல் சத்தமும் குழந்தைகளுக்கும் பழகிப் போயிருந்தன. ஆனாலும் அன்று ஊரே அல்லோல கல்லோலப் பட்டது.
ஆகாயத்திலிருந்து 'பொம்பர்' குண்டு மழை பொழிந்ததில்,
புனிதனின் அண்ணனும், அக்காவும் உடல் சிதறி மாண்டு போனதும்..
நட்ட நடு இரவில் சொந்தங்களையும் சொத்துக்களையும் இழந்து ஆறு கடந்து வந்து கனகர் கிராமத்திலே 'அகதி' யாகக் குடியேறியதும்
அக் குடும்பத்தின் திசையினையே மாற்றிப் போட்டிருந்தது.

போகத்திற்கு நூற்றறுபது , அறுபத்தஞ்சு மூடைகள் அடிக்கும் வயல்,
ஆடு, மாடுகளெல்லாம் கைவிட்டுப் போனதெல்லாம் கூட மனதை விட்டு மறைந்து விட்டிருந்தன.
'பெரிய மனிசியாகி' ஆறு மாதமேயான மூத்தமகள் கலைச்செல்வியின் இழப்பு மட்டும், ஒவ்வொரு நாடி நரம்புகளிலும் ஊறிக் கிடந்தது.
'இந்தக் காப்பும், மாலையும் அப்பா வாங்கி வந்தது'
தாய் அவற்றைப் போட்டுவிட, மகளின் முக மலர்ச்சியைக் கண்டு பூரித்துப் போனவன்இ துண்டு துண்டாகி, சதைக் கூழமாகிக் கிடந்த தன் செல்ல மகளின் முடிவு கண்டு இதயம் சிதறிப் போனான். அழுது அழுதும் பட்டினி கிடந்தும், துயரத்தைத் துரத்த முடியாமல் போனதில் சினேகித்துக் கொண்டது மது. துன்பங்களைச் சுவாசித்து, துயரங்களைப் புசித்துக் கழிந்து போன நான்கு வருடங்களில் அக் குடும்பத்தில் மனித நாகரீகங்கள் கூட அழிந்து போயிருந்தன.

'அகதி' வாழ்வில் அன்றாடம் வயிறு பற்றிய தேவையே பெரிதாயிருந்ததில் கணவன் பற்றிய உயர்வும் தாழ்ந்து போய்இ குடும்பமெனும் கூடும் கலைந்து போயிருந்தது.
'டக்' -
உச்சந் தலையில் இடியாய் இறங்கியது வீட்டுக்காரியின் வலுத்துப் போன முட்டி.

'சட்டி பானையைக் கழுவாம என்னடா மோட்டப் பாத்திற்று இருக்கிறாய்'
'ம் .....ம்.....'
ஓசை வராமல் வாய்க்குள் அழுதான்.
அழுவதற்கும் ஒரு குட்டு விழுமே என்ற அச்சம்.
பாத்திரங்களுடன் வீட்டு நினைவுகளையும் கழுவினான்.

வீட்டு வேலைகள் முடிந்து, கைகளோடு, மனதும் சிவந்து ஓய்ந்தபோது சூரியனும் ஓய்வுக்காகத் தன் கதிர்க் கரங்களைக் கட்டிக்கொண்டிருந்தது.
தன்னைப் போன்றே நாளெல்லாம் உழைத்து உழைத்துச் சிவந்து, ஓய்வுக்குச் செல்லும் சூரிய நண்பனைப் பார்க்க விடாமல் மறைத்து நிற்கும் அந்த வீட்டின் பெரிய மதில்கள் புனிதனுக்குப் பூதமாகத் தெரிந்தன.
ஏழு அடிகளுக்கு மேல் உயரமான கறுப்புக் கேற்றுக்களின் சிறு இடைவெளியால் சில தடவை வீதிகளைப் பார்த்திருக்கிறான். எனினும் அதற்காகச் செவிகள் திருகப்படுவதையும், கைகளிலோ, கன்னங்களிலோ கிள்ளப்படுவதையும், மண்டை வெடிக்கக் குட்டுவதையும் நினைத்துக் கேற்றின் இடைவெளிகளை மறந்தே போனான்.
'அம்மா.. அம்மா...'
மனதுக்குள் ஜெபித்துக் கொள்வான்.
அம்மா என்னைக் கூட்டிச் செல்ல வரவே மாட்டியா?
இதயம் நொருங்கி, விழி வழியாக இரத்தம் கொட்டி அந்தப் பிஞ்சு விழிகள் அருவியாகும் இரவுகளே தொடர்ந்தன.
பகலில் உடலை வருத்தும் வேலைகள், அடிகள், குட்டுக்கள், அடிக்கடி கிடைக்கும் சிகரட் சூடுகளின் வேதனைகள் கூட மறந்து போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இரவுகள்...? புனிதனுக்குப் பகலில் கூட, இரவின் நினைவுகள் கோரப் பற்களும், பத்துக் கால்களும், இருபது கைகளும், ஐந்து தலைகளும் கொண்ட ராட்சசனாக மிரட்டும்.
அம்மாவின் மடிக்குள் முகம் புதைக்க மனசு தவிக்கும்.
'அப்பா நீ செத்துப் போகாமல் இருந்திருக்கலாமே'
புனிதனுக்கு இப்போது தோன்றியது.
அப்பா இரவில் தானே குடித்து விட்டு வருவார் ஆனால் பகலில் அவரை எதற்காகச் சுட்டுப் போட்டார்கள்? கொழும்பில் குண்டு வெடிச்ச அண்டு அப்பாவும் சூடுபட்டுச் செத்ததாம். அப்பாவையும் புலியெண்டுதான் சுட்டதாம். அப்பாட கையில குண்டும் இருந்ததாம். புனிதனுக்கு எதுவும் புரியவில்லை.அப்பாட கையில சாராயப் போத்தல விட்டு வேறு எதையும் கண்டதா ஞாபகமுமில்ல.
'அப்பா செத்துப் போனதால் தானே அம்மா என்னை வேலைக்கு விட்டவ'.
இப்போது அப்பாவின் மரணத்திற்காகத் தினமும் கவலைப்பட்டான் புனிதன். அழகான புத்தகப் பைகளும், புதிது புதிதாய் ஆடைகளும், டையுமாய் ஐயாவின் பிள்ளைகள் பாடசாலை செல்வதைப் பார்த்து புனிதனின் மனமும் பள்ளிக்கூடத்திற்குத் தாவும்.
நாலாம் வகுப்பில் தன்னுடன் படித்த சின்னவன், தவம், மலர், குட்டி இவர்களுடன் மீண்டும் விளையாடக் கிடைக்காதா என மனசு படபடக்கும்.
அகதிப் பள்ளியில் ஆசிரியாகள் பாடமெடுக்காத நேரங்களே அதிகமென்பதால் விளையாடுவது பிள்ளைகளுக்கு முக்கிய வேலையாய்ப் போனது.
'ஊருக்குப் போனதும் நல்ல பள்ளிக்குப் போகலாம்'
அம்மா அடிக்கடி சொல்வாள். அக்கா செல்வியும், அண்ணாவும் பெரிய புத்தகப் பைகளுடன் ஊரில் பள்ளிக்குப் போகும் போது ஐந்து வயது புனிதனும் தானும் வருவதாய் அழுவான்.
அக்கா எப்போதும் 'முதலாம் ஆளாம்'
அம்மா பெருமையாகச் சொல்வாள்.. அண்ணனும் தானாம்!
'அம்மா நானும் முதலாமாளாய் வருவேன்
ஐந்து வயதில் மழலையாய்ச் சொல்வான்.
இடம் பெயர்வும் அகதி வாழ்க்கையும் சூறாவளிக் காற்றாய் பாடசாலைக் கல்வியைத் கலைத்துப் போட்டன. அப்பாவின் மரணம்.புனிதனுடைய பாடசாலை வாழ்விற்கு மரண சாசனமே எழுதி விட்டிருந்தது.

ஆறடி மதில், கரிய,பெரிய கேற்றுகள்.......
கூட்டுக்குள் சிறைப்பட்டுப் போன சிட்டுக்குருவியாய், மனசுக்கும், உடலுக்கும் சங்கிலி பூட்டிய அடிமையாய்.. ..
சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடியாமல்......
அம்மா, தம்பிகள், சின்னவன் எவரையும் பார்க்க முடியாமல் புனிதனுக்குப் பல தடவைகளில் மூச்சு முட்டுவது போல இருக்கும் காற்றில்லாத கண்ணாடிப் பெட்டியில் அடைக்கப்பட்டதைப் போல!
கடற்கரையையொட்டி அகதி முகாம்கள் அமைந்திருந்ததால் கடலில் நீராடிப் புத்தம் புதிதாய்ப் பளிச்சென உதிக்கும் சூரிய உதயத்தை அலுப்பின்றித் தினமும் பார்த்து ரசிப்பான் புனிதன்.

காலையில் தலைசீவிச் செல்லும் குளிர்ந்த காற்றும், மாலையில் சீவிய தலையைக் கலைத்துப் போட்டுவிட்டுச் செல்லும் முரட்டுக் காற்றும் அகதிகள் வாழ்க்கையில் வெப்பத்தைத் தணிக்கும் கடவுளின் காற்றாடிகளாயிருந்தன.

உடலோடு மனதையும் வருடிச் செல்லும் காற்றை எதிர்த்து ஓடிப் பிடித்து விளையாடுவதில் சிறுவர்களுக்கு ஒரே கொண்டாட்டம். அந்தக் கடற்கரை மணலில் மீண்டும் எப்போது ஓடுவதென்ற ஏக்கம் புனிதனின் மனதை வாட்டும்.

முகத்தைச் சுடும் சூரிய வெப்பமும், மூலை வேம்பில் தினமும் காத்துக் கிடக்கும் அந்த நொண்டிக் காகமும், அடிக்கடி மதில் தாண்டி வரும் அந்தக் கள்ளப் பூனையுமே புனிதனின் வெளி உலகங்களாகி விட்டன.
பாவம் அந்த நொண்டிக் காகம்.
ஒரு நாள் காயப்பட்டு, வீட்டு நாய்க்கு இரையாகப் போகவிருந்த காகத்தைக் காப்பாற்றி அந்த மதிலுக்கு அப்பால் வீசியிருந்தான். இப்போதெல்லாம் தினமும் மதிய வேளையில் புனிதன் வீசியெறியும் சோற்றுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருக்கைகட்காக வரத் தொடங்கியிருந்தது. நடக்கும் போது அந்தக் காகம் நொண்டிய போதும் அழகாய்ப் பறக்கத் தொடங்கியிருந்தது.

'கா கா கா'
அம்மா சோற்றுக் கவழத்தைக் கையில் வைத்தபடி, சனி விரதத்திற்காகக் காகத்தை அழைக்கும் போது நெற்றி நீறையப் பொட்டிட்டு, அடர்ந்த கூந்தலுக்குள் ஈரம் போகத் துணியையும் சுற்றிக் கட்டி பளிச் சென்றிருப்பாள்.
புனிதனும் 'கா கா ' எனச் சோற்றுப் பருக்கைகளை வீசிக் காகங்கள் பறந்து பறந்து அந்தரத்தில் கவ்விக் கொள்ளும் அழகை கைகொட்டி ரசித்திருக்கிறான்.

இன்று அவனே அக் காகமாய்ப் போன விந்தை.

ஐயா, பிள்ளைகள் எல்லாம் திரும்பியிருந்தார்கள்.
கேற்றடியில் காரின் ஒலி கேட்டு ஓடிச் சென்று பாரமான கேற்றுக்களைச் சிரமத்துடன் திறந்து விட்டான்.
'தாமதமாகி விட்டதென்று' ஐயாவின் பிள்ளைகள் ஆங்கிலத்தில் திட்டினார்கள்.
கோபம் வரும்போதெல்லாம் வரும் வார்த்தைகள் என்பதால் ஏதோ வசை பாடப்படுவதைப் புனிதனால் விளங்கிக் கொள்ள முடிந்தது. அவர்கள் கடற்கரைக்குச் சென்று வந்திருக்க வேண்டும். கைகளில் சிப்பிகளும், கால்களில் ஒட்டிக் கிடந்த வெண்மணல் துளிகளும் சாட்சிகளாயிருந்தன.
சனி ஞாயிறு என்றால் எல்லோரும் காரில் வெளியே செல்வார்கள். ஐயாவின் அம்மா மட்டும் வீட்டில் இருப்பாள்.

திறந்த கதவுகளை மீண்டும் சாத்தும் போது அவன் விழிகள் வீதியில் சுற்றிப் பயணித்தன. உற்சாகமாக நண்பர்களுடன் செல்லும் சிறுவர்கள், பெற்றோருடன் கைகளைப் பிடித்தபடி செல்லும் பிள்ளைகள்

அனைவரும் சந்தோசமாகச் சிரிப்பை அணிந்தவர்களாகக் காட்சி தந்தனர்.

புனிதனின் விழிகளில் ஏக்கம்,

'நான் ஏன் இவர்களைப் போல இல்லை?'

பிஞ்சு மனது எண்ணெய்ச் சட்டியினுள் விழுந்த இதயமாயிருந்தது.
'சனியனே'

வீட்டுக்காரியின் அலறலில் அவசர அவசரமாகக் கேற்றைப் பூட்டியதில் சின்னி விரல் நசுங்கி வலித்தது.

மூடிய கதவுகளுடன், அடைபட்டுப் போனது அந்தப் பத்து வயதுக் குழந்தையின் எதிர்பார்ப்புக்களும்.
நொந்து போன விழிகளில் அந்த வினா மட்டும் மிஞ்சிக் கிடந்தது.

'அம்மா.. நீ வருவாயா?'

▲▲▲▲▲



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய திறன்களை வளர்க்கும் முன்பள்ளிக் கல்வி

**திருமதி. ஆர். ஸ்ரீனிவாசன்,**
முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்,
மட்டக்களப்பு கல்வி வலயம்.

ஏற்கனவே இருந்த எமது முறைசார் கல்வித் திட்டமானது சிறந்த வாழ்க்கையைக் கொண்டு நடாத்தக்கூடிய அறிவு, திறன், மனப்பாங்குகளை எமது மாணவர்களிடையே வளர்க்கத் தவறி விட்டது. எனவே 21ம் நூற்றாண்டிற்கான சவால்களை எதிர்நோக்கக் கூடிய மாணவர் சமுதாயமொன்றை உருவாக்கும் நோக்கத்துடன் 1997ம் ஆண்டு புதிய கல்விச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதில் முக்கியமான மாற்றங்கள் ஆரம்பக் கல்வியில் ஏற்படுத்தப்பட்டன.

ஆரம்பக் கல்வியில் கொண்டு வரப்பட்ட புதிய மாற்றங்களுக்கு உடனடியாகத் தம்மை மாற்றியமைக்கக் கூடியவர்களாக ஆரம்பக் கல்வியில் சேர்ந்த மாணவர்கள் இருக்கவில்லை.

எமது நாட்டில் எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியவாறான மாணவர்களை உருவாக்க அடித் தளத்தில் அதாவது அத்திவாரத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் உரிய மாணவர்களால் ஜீரணிக்க முடியாத நிலை ஏற்பட எமது கல்விச் சிந்தனையாளர்களின் கவனம் முன்பள்ளிக் கல்வியின்பால் திரும்பியது.

இது தொடர்பாக முன்பள்ளிகளுக்கான பாடவிதானம் தொடர்பாக மகளிர் விவகார அமைச்சு பல நடவ டிக்கைகளை மேற்கொண்டது. இங்கு தயாரிக்கப்பட்ட பாடவிதானத்தில் பிள்ளைகளின் திறன்களை வளர்க்கும் செயற்பாடுகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

தொடர்பாடல் திறன், மொழித்திறன், ஆக்க, அழகியல் திறன்கள், அவதானிப்புத்திறன், கணிதம் தொடர்பான திறன்கள், மனஎழுச்சி வளர்ச்சி தொடர்பான திறன்கள், சமூகவிழுமியங்கள் தொடர்பான திறன்கள் ஆகியவற்றை வளர்க்கக்கூடியவாறான செயற்பாடுகள் இங்கு திட்டமிடப்பட்டுள்ளன.

தொடர்பாடல், மொழித்திறன்கள் எனும் போது பிள்ளைகளுக்கு கேட்டல், பேச்சு, முன்வாசிப்பு, முன்னெழுத்துத் திறன்கள் வளர்க்கப்படுகின்றன. பிள்ளைகள் வாய் மொழிமூலம் சொல்வதற்கும், கேட்பதற்கும், கேட்டுப் பதில் கூறவும் செயற்பாடுகள் மூலம் பயிற்சியைப் பெறுகின்றார்கள். இங்கு பிள்ளைகளுக்கு சுதந்திரமாகக் கலந்துரையாடச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. வரைதல் மூலம் தமது கருத்துக்களை வெயியிடலும், சைகைகள் பயன்படுத்தவும், சைகைகள் மூலம் தமது கருத்துக்களை வெளியிடவும் முடிகின்றது. வரைதல் மூலமாகவோ, சைகை மூலமாகவோ போலச் செய்வதன் மூலமாகவோ தமது கருத்துக்களை வெளியிடும் திறன்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள். எழுத்துக்களை இனங்காணும் திறனைப் பெற்றுக் கொள்கின்றார்கள். படங்களைப் பார்த்து வாசிக்கும் திறனையும் எழுதுவதற்கான முன்பயிற்சி மூலம் எழுதும் திறனையும் பெற்றுக் கொள் கின்றார்கள்.

அடுத்து கணிதம் தொடர்பான எண்ணக்கரு விருத்தியை எடுத்துக் கொண்டால் இங்கு மாதிரி வகைப்படுத்தல், இனம் பிரித்தல், பெரிது, சிறிது, நீளமானது கட்டையானது கூட குறைய, கேத்திர கணித வடிவங்கள், இலக்கங்கள் ஆகியவை தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் இவற்றுக்கான திறன்களை விருத்தி செய்து கொள்கின்றார்கள். நீரில் விளையாடுவதன் மூலம் அளத்தல் தொடர்பான ஆரம்ப அறிவைப் பெற்றுக் கொள் கின்றார்கள். மணலில் விளையாடுவதன் மூலமும், களிமண்ணைப் பிசைவதன் மூலம் தசைநார்ப் பயிற்சியைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து சூழல் தொடர்பாக நோக்குவோமாயின் பிள்ளைகள் அவதானிப்பு புத்திதனை முக்கியமாக விருத்தி செய்து கொள்கின்றார்கள். தேடியறிய, செய்தறிய, கண்டுபிடிக்க, எதிர்வுகூற செயற்பாடுகள் மூலம் சந்தர்ப்பம் கிடைப்பதனால் இவை தொடர்பான திறன்கள் வளர்க்கப்படுகின்றன. காதால் கேட்டல், மணத்தல், சுவைத்தல், உணர்தல், தொடுதல் மூலம் தமது சுற்றாடலில் உள்ள பொருட்களின் இயல்புகளை அறிந்து கொள்கின்றார்கள். அவர்களது சூழலிலுள்ள நிகழ்வுகளை என்ன? எப்படி? எது? போன்ற வினாக்களை எழுப்புவதன் மூலம் விளங்கிக் கொள்ளும் திறனைப் பெறுகின்றார்கள்.

ஆக்கச் செயல்கள் மூலம் அழகியல் ரசனை வளர்க்கப்படுகின்றது. காண்பவற்றை வரையவும், வர்ணம் தீட்டுவதன்மூலம் வர்ணம் பற்றிய ரசனையையும் பெறுகின்றார்கள். வர்ணக் கடதாசிகளைக் கிழிக்கவும், ஒட்டவும், கத்தரிக்கோலால் வெட்டவும், மணிகள் பூக்களைக் கோர்க்கவும் பழகுகின்றார்கள். அவற்றைக் காட்சிப்படுத்தி அவதானிப்பதன் மூலம் அழகியல் ரசனையையும் வளர்க்க ஏதுவாகின்றது.

பாடல்களைக் கேட்பதிலும் பாடிப்பரீட்சயமாவதிலும் இலகுவான இசைக் கருவிளை இசைப்பதிலும் இவர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகின்றது. இதன் மூலம் மகிழ்ச்சியையும், அழகியல் ரசனையையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

அடுத்து சமூக மனவெழுர்ச்சி தொடர்பான செயற்பாடுளில் பிள்ளைகள் ஈடுபடுத்தப்படுவதன் மூலம் சமூகத்துடன் பொறுப்புகளை ஏற்கும் சந்தர்ப்பங்களையும், வீட்டில் முக்கிய பங்கை ஏற்பது தொடர்பான சந்தர்ப்பங்களையும் சம வயது நண்பர்களுடன் குழுக்களாக வேலை செய்யும் சந்தர்ப்பங்களையும் பண்பாட்டு நிகழ்வுகளில் பங்கேற்கும் சந்தர்ப்பங்களையும் சவால்களை ஏற்று செயற்படும் சந்தர்ப்பங்களையும் அறிந்து கொள்கின்றார்கள். இதன் மூலம் சமூக மனவெழுச்சி தொடர்பான திறன்கள் விருத்தி செய்யப்படுகின்றன.

சமயம், பாரம்பரியம், விழுமியங்கள் தொடர்பாகவும், அறநெறி ஒழுக்கநெறி தொடர்பாகவும் சில திறன்கள் மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் ஊடாக வளர்க்கப்படுகின்றன.

அடுத்து பாடவிதானத்தில் காணப்படும் உடலபிரிவிருத்தி செயற்பாடுகள் ஊடாக பேரியக்க விருத்தி தொடர்பாக திறன்களை விருத்தி செய்து கொள்கின்றார்கள். நண்பர்கள் சேர்ந்து விளையாடவும், ஒரு தலைவனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடக்கவும் பழகிக் கொள்கின்றார்கள். முழுத்தசை நார்களையும் ஆக்க அசைவுக்குப் பயன்படுத்துவதன் மூலம் தசை நார்ப்பயிற்சியை பெற்றுக் கொள்கின்றார்கள். அடுத்து திட்டமிட்ட சரியான அசைவுக்கு தசைநார்களைப் பயன்படுத்தும் திறனையும் பெற்றுக் கொள்கின்றார்கள். நல்ல சுகாதார பழக்க வழக்கங்களைப் பழகிக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. கொதித்தாறிய நீரைப்பருகல், சுத்தமான, போஷாக்குள்ள உணவை உண்ணல் போன்ற நற்பழக்க வழக்கங்கள் ஊடாக எதிர்காலத்தில் நோய்களற்ற நல்வாழ்வு வாழலாம் எனும் மனப்பாங்கும் விருத்தி செய்து கொள்ளப்படுகின்றது.

இவ்வாறு இரண்டு வருடங்கள் முன்பள்ளிக் கல்வியைப் பெறுகின்ற குழந்தைகள் அறிவு, திறன், ஆற்றல்கள், மனப்பாங்கு வளர்ச்சியில் தேர்ச்சி பெற்று சமநிலை ஆளுமை பெற்றவர்களாக மாறுவதால் எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுத்து சமூகத்தைப் பொருந்தி வாழும் நற்பிரஜையாக உருவாகுவார்கள் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் மரபுவழி நாடகங்கள் சிறு விமர்சன நோக்கு

சு.சிவரெத்தினம்.

பாடசாலைகளில் மரபுவழி நாடகங்கள் எனும் போது ஆடலையும் பாடலையும் அடிப்படையாகக் கொண்ட கூத்து மரபினையே கவனத்தில் கொள்கின்றோம். இன்று இவ் மரபு வழி நாடகங்களைப் பேணும் மையங்களாக பாடசாலைகளும் பிரதேச செயலகங்களும் செயற்படுகின்றன. பிரதேச செயலகங்கங்களில் கலாசார விழாவின் போட்டி நிகழ்ச்சியாகவும், பாடசாலைகளில் தமிழ்த்தினப் போட்டி, வருடாந்த பரிசளிப்பு விழா போன்றவற்றுக்கான நிகழ்ச்சியாகவுமே இவை நிகழ்த்துகை செய்யப்படுகின்றன.

மரபுவழி நாடகங்களின் செயற்பாட்டு வன்மையினையும், அதன் நிகழ்த்துகை முறைமையினையும் இரண்டு விதங்களில் நோக்க வேண்டும்.

1. சமுதாய அல்லது ஒரு கிராம கூட்டு நிகழ்த்துகையாக மரபுவழி நாடகங்கள் இருந்ததற்கும் பாடசாலைகளில் ஒரு போட்டி நிகழ்ச்சியாக இருப்பதற்கும் இடையில் உள்ள வித்தியாசம்.
2. பேராசிரியர்.சு.வித்தியானந்தன் பாணியும், அரங்கு ஒரு கற்கை நெறியாக பல்கலைக் கழகங்களில், பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட பின் அதனை கையாளுகின்ற முறை மையும்.

முதலாவதை எடுத்துக் கொண்டால் ஒரு கிராம கூட்டு நிகழ்த்துகையாக மரபுவழி நாடகங்கங்கள் அமைகின்றபோது அந்தக் கிராமத்தின் ஒரு விழாவாக இந் நாடகங்கள் நிகழ்த்தப்படுகின்ற ஒரு இயங்கு தளம் இருந்தது. அதாவது விவசாயத்தை முக்கிய தொழிலாகக் கொண்ட, விஞ்ஞான தொழில்நுட்ப தாக்கங்கள் குறைந்த, ஐரோப்பிய மயமாக்கமற்ற சமூகமாக அது இருந்தது. இந்த இயங்கு தளமே மரபுவழி நாடகங்களைப் பேணி வளர்த்தன.

இங்கு பார்வையாளர் சினிமாத்தன அரங்கின் செயல்முனைப்பற்ற பார்வையாளரிலிருந்து வேறுபட்ட வர்களாக நிகழ்த்துகையில் பங்கு கொண்டு மகிழ்ச்சியான அனுபவத்தைப் பெறுபவர்களாக காணப்பட் டனர். இதன் காரணமாக அரங்கு ஒரு பொழுது போக்குச் சாதனம், கலையின்பச் சாதனம் என்பதற்கும் மேலாக சமூக ஒருங்கிணைப்பு ஊடகமாகவும், ஒழுக்க நடைமுறைகளைப் புகட்டுகின்ற ஒரு கல்வி நிலையமாகவும் மிக வன்மாக தொழிற்பட்டது. இந்த அனைத்து அம்சங்களுமே அது ஒரு பார்க்கப்பட்ட அரங்க நிகழ்த்துகையாக இருந்த போதும் அதனை திரும்பத் திரும்பப் பார்க்க அப் பார்வையாளர்களைத் தூண்டியது.

பாடசாலைகளில் ஒரு போட்டி நிகழ்ச்சியாக மரபுவழி நாடகங்கங்களைப் பயிலும் போது மேற்கூறிய அதன் இருப்பு தொடர்பான அத்தனை இயங்குதள அம்சங்களை கவனத்தில் கொள்ளாது அதற்கு எதிர்நிலைப்பட்ட அம்சங்களைக் கொண்ட அதாவது விஞ்ஞான தொழில் நுட்ப தாக்கங்கள் வாய்ந்த, ஐரோப்பிய மயவாதத்துக்குட்பட்ட, பெரும்பாலாக அரச உத்தியோகம் பார்க்கின்ற மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்த மாணவர்களிடம் அந்தக் கலை வடிவம் மாத்திரம் அறிமுகம் செய்யப்படுகின்றது. இது அவர்களிடம் அந்தக் கலை வடிவம் தொடர்பாக மூன்று விதமான போக்குகளை ஏற்படுத்துகின்றது.

1. ஒரு நாகரீகமற்ற சமூகத்தின் அரங்க நிகழ்த்துகையாகப் பார்ப்பது. அதாவது பரிகசிப்புக்குரிய விடயமாகப் பார்ப்பது.
2. எமது முன்னோர்கள் ஆடியது அதனால் தானும் அதனைச் செய்து பார்க்க வேண்டும் என்ற விருப்பு (பழமைபேண் விருப்பு)
3. கலைப்படைப்பாகப் பார்த்து தானும் ஈடுபட வேண்டும் என்ற விருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் தொண்ணூறு வீதமானவர்கள் முதல்நிலையிலுள்ளவர்களே மிகக் குறைந்தளவினரே இரண்டாவது, மூன்றாவது வகையினராக உள்ளனர். இவர்களினால்த்தான் பாடசாலைகளில் இவ் மரபுவழி நாடகங்கள் நிகழ்த்துகை செய்யப்படுகின்றன.

பாடசாலைகளில் அரங்கியல் பிரஞ்ஞையின்றி மரபுவழி நாடகங்கள் நிகழ்த்துகை செய்யப்படுவதனால் அவற்றின் முக்கியமான சாரத்தையே கண்டு கொள்ளாத அல்லது புறக்கணித்து விடுகின்ற ஒரு நிலையினை உருவாக்குகின்றது. அரங்கின் மிக முக்கிய அம்சமான பார்வையாளர் என்ற ஒரு பிரிவு இல்லாமலே மூன்று மத்தியஸ்தர்களுக்காக அடைக்கப்பட்ட அறைகளில் இந்நாடகங்கள் நிகழ்த்துகை செய்யப்படுகின்றன. இதனால் பாடசாலைகளில் இந்நாடகங்கள் பயிலப்பட்டாலும் அந்தப்பாடசாலை மாணவர்களே பார்க்க முடியாத அற்புதப் பொருளாக இவை வைக்கப்படுகின்றன. இது மரபுவழி அரங்கை ஒரு நூதன சாலைப் பொருளாக ஆக்கிவிடுகின்றது. அதனது சமூகத் தொடர்பாடல், அது தரும் அழகில் அனுபவம், என்பன கண்டுகொள்ளப்படுவதில்லை. கண்டு கொள்ளப்பட்டாலும் அதனைப் பரவலாக்குவதும் இல்லை. இவ்வாறு பாடசாலைகளில் மரபுவழி அரங்கின் உயிர்ப்பை அறுத்து விடுகின்றனர்.

இரண்டாவது விடயத்தை நோக்குவோமெனில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் பாணி நிகழ்த்துகை முறையாக நேரச்சுருக்கம், படச்சட்டமேடைக்கு ஏற்ற ஆட்டமுறை, பெண்பாத்திரங்களுக்கு பெண் களையே ஆடவைத்தல் அண்ணாவிமார்,பிற்பாட்டுகாரர்களை மேடையின் பின்னுக்கு கொண்டு சென்றமை, உடையில் சினிமாப்பாணியினைப் புகுத்தியமை, போன்ற அம்சங்கள் குறிப்பிடப்படுகின்றன. நிகழ்த்துகை நுட்பம் என்றவகையில் இன்று இவை தொடரப்பட்டாலும் இவற்றினுடைய கலைத்துவ செழுமை பற்றி பெரிதாக கவனத்தில் கொள்வது கிடையாது. சில வாய்பாட்டு முறையிலான ஒப்புவிப்பு மட்டுமே செய்யப்படுகின்றன. சில வேளைகளில் மிக மோசமான கலைத்துவ சீர்கேடுகள் கூட இடம்பெறுகின்றன.

இவை பற்றி மட்டக்களப்பின் மரபுவாதிகள் கவலைப்படுவதுமில்லை ஆனால் அரங்கியல் அறிவுவாய்ந்த பல்கலைக்கழக மட்டத்தில் மரபுரீதியான அரங்கின் வீரியத்தை தற்கால சமூக ரசனையுடன் வெளிப்படுத்த எடுக்கப்படும் அரங்கில் புதுமைகளை இவர்கள் கண்டிக்கவும் தவறுவதில்லை. இது ஒரு துர்ப்பாக்கிய விடயமாகும்.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் வழிவந்தவர்களுக்கு பாடசாலைகளில் மரபுவழி நாடகங்களைப் பேணவேண்டும் எனும் ஒரு நோக்கு பிரதானமாக இருந்தது எனலாம். அப்போது அரங்கு ஒரு கற்கை நெறியாக வளரவில்லை ஆனால் 1980களுக்குப் அது ஒரு கல்வியல் தேவையாக மேலெ முகின்றது. அதன் பின் வந்த தற்காலத்தவர்கள் போட்டிக்காக மட்டும் நோக்குகின்றனரே தவிர அதனை ஒரு கற்கை நெறியாக, கற்பித்தல் சாதனமாக, மாணவர்களுடைய ஆளுமை விருத்தி, கற்றல் விருத்தி என்பவற்றை மேற்படுத்துகின்ற ஒரு ஊடகமாக இன்னும் நோக்கவுமில்லை, எடுத்துக்கொள்ளவுமில்லை. இதனை நாம் பாடசாலைகளில் மரபுரீதியான நாடகத் தயாரிப்பு படிமுறைப் போக்கிலிருந்து விளங்கிக் கொள்ளமுடியும்.

பாடசாலைகளில் நாடகத்தைப் பழக்க என நியமிக்கப்படுகின்ற அண்ணாவியாரும் அவருக்கு உதவி யான ஆசிரியர் குழுவும் மாணவர்களினது வயது, அவர்களது உளப்பாங்கு அவர்களுடைய விருப் புக்கள், வெறுப்புக்கள் என்பனவற்றை கவனத்தில் கொள்ளாது தங்களுக்கு விருப்பமான ஒரு கதையினை தெரிவு செய்து கொள்வர்.

இது மகாபாரதத்திலிருந்தோ அல்லது இராமாயணத்திலிருந்தோ எடுக்கப்பட்டதாக இருக்கும். இந்தக் கதைகள் பழகப்போகும் மாணவர்களுக்கு தெரியுமா தெரியாதா என்று கூட கவலைப்படுவது கிடையாது. தேரிவு செய்யப்பட்ட கதை கீசகன் வதை என்றால் அண்ணாவியார் செய்வதெல்லாம் இதுதான் நீ, திரௌபதி, நீ, வீமன், நீ, தருமன், நீ, அர்ச்சுனன், நீ, கீசகன், என்று பாத்திரங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்துக்கொடுத்து அவர்களுக்குரிய ஆடல்களையும் பாடல்களையும் இயந்திரகெதியாகச் சொல்லிக் கொடுப்பார். வீமன் யார்? துருமன் யார்? கீசகன் யார்? அவர்களுடைய குணாம்சம் என்ன என்று அப்பாத்திரங்கள் பற்றி எதுவுமே தெரியாமலும் பாடுகின்ற பாடல்களின் பொருளும் தெரியாமலும் கூத்தை ஆடி அரங்கேற்றிய மாணவர்களும் உண்டு.

அண்ணாவியாருக்கு நீண்டகால அவதானிப்பு, பயிற்சி என்பவற்றின் வாயிலாக அமைந்த ஆடல் பாடல்களை மிகக் குறுகிய காலத்துக்குள் ஒழுங்கு ரீதியான ஒரு முறையியல் இன்றிப் பழக்குவார். இந்தப் பழக்குதல் நடைமுறையில் மாணவர்கள் வெறும் பொம்மைகளாகவும் அண்ணாவியார் ஒரு ஞானியாகவும் அவதாரமெடுத்திருப்பார்.

இவ் நிகழ்த்துகைகளில் நாடகக் காண்பியங்களுக்கிடையில் ஒரு சமநிலை பேணப்படுவதும் இல்லை. சுருதி மாறாத பாடல், தாளத்துக்கு ஏற்ற லயமான ஆடல், அதனை மேல்நோக்கி நகர்த்துகின்ற சீரான பிற்பாட்டு, இசைப்பின்னணி, ஒப்பனை என்பன கலை நுணுக்கமாக சமநிலையில் பேணப்படும் போதுதான் அதன் முழுமையான அழகியல் அனுபவம் கிடைக்கிறது. ஆனால் பெரும்பாலான பாடசாலைகளில் இவை கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. அண்ணாவியாருடைய கலைத்துவ ஆளமையினைப் பொறுத்து அந்த நிகழ்த்துகையின் கலைச் சீர்மை அமைந்திருக்கும்.

சில பாடசாலைகள் சில சம்பிரதாயங்களைப் பேணுபவையாகவும் உள்ளன. உதாரணமாக சில பாடசாலைகள் ஆடைஅணிகலன்களுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவம் அதன் ஆடல் பாடல்களுக்குக் கொடுப்பது கிடையாது. அண்ணாவியார் தனது திறமையினைக் காட்டவேண்டும் என்பதற்காக மாணவர்களின் பாடலைக் கேட்க முடியாதளவுக்கு மத்தளமும் சல்லரியும் ஓங்கியொலிக்கும் இதனால் மாணவர்களின் முயற்சி அத்தனையும் வீணாகிவிடுகிறது. இவ்வாறான நிலைமை அவற்றை ஒரு கலைப்படைப்பாக நோக்கவைப்பதில்லை.

அண்ணாவியாருடையதும் ஆசிரியகுழாத்தினுடைய திறமைகளை வெளிக்காட்டும் ஓர் ஊடகமாக மரபுவழி நாடகங்கள் தொழிற்படுவதன் காரணமாக மாணவர்கள் இவர்களுடைய கருவிகளாக ஆக்கப்படுகின்றனர்.
மாணவர்களிடம் சாதகமான விளைவுகளைஏற்படுத்தக்கூடிய வகையில் அரங்கை ஒரு கற்பித்தல் ஊடகமாக பயன்படுத்துகின்ற இன்றைய சூழலில் எமது மரபுவழிப்பயன்பாடு மாணவர்களிடம் எதிர் மாறான தாக்கங்களை ஏற்படுத்தலாம். அந்தவகையில் உளவயதுக்குப்பொருத்தமில்லாத கதைத் தேர்வு காரணமாக பொருத்தப்பாடுடைய சமூகமயமாக்கலை பாதிக்கலாம்.

நாடக பாத்திரங்களிலும், நாடக தயாரிப்பிலும் மாணவர்களுக்கு எந்தவித பங்கும் இல்லாததால் அவர்களின் படைப்புலகம், கற்பனையாற்றல் என்பன தடைபவ்படுகின்றன. இவை காரணமாக மாணவர்களுடைய ஆளுமைவளர்ச்சி, நுண்மதி வளர்ச்சி, கற்றல் விருத்தி என்பன பாதிக்கப்படகின்றன.

எனவே மரபுவழிநாடகங்களை பாடசாலைகளில் பயிற்றுவிக்கும்போது நவீன விஞ்ஞான கற்பித்தல் நுட்பங்களையும் அரங்கியல் ரீதியான அறிவினையும் கொண்ட பயிற்றுவிப்பாளர்களை இந்நாடகச தயாரிப்புக்கு பொறுப்பாக நியமித்து இந் நாடகங்களை நனிகழ்த்துகை செய்வார்களேயானால் அது போட்டியில் வெல்வதோடு மட்டுமல்லாது மாணவர்களிடம் நல்ல பெறுபேறுகளை ஏற்படுத்தும் எனலாம்.

*பாரதியாரின் அனுபவத்தில் சூழல்*

1. *இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான் இனிமையுடைத்து: காற்றும் இனிது*
*தீ இனிது. நீர் இனிது. நிலம் இனிது.*
*ஞாயிறு நன்று: திங்களும் நன்று*
*வானத்துச் சுடர்க ளெல்லாம் மிக இனியன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை இனிது, மின்னல் இனிது, இடி இனிது.
கடல் இனிது, மலை இனிது, காடு நன்று.
ஆறுகள் இனியன.
உலோகமும், மரமும், செடியும், கொடியும்,
மலரும்,காயும், கனியும் இனியன.
பறவைகள் இனியன.
ஊர்வனவும் நல்லன.
விலங்குக ளெல்லாம் இனியவை.
நீர் வாழ்வனவும் நல்லன
மனிதர் மிகவும் இனியர்
ஆண் நன்று, பெண் இனிது.
குழந்தை இன்பம்
இளமை இனிது. முதுமை நன்று.
உயிர் நன்று. சாதல் இனிது.

௨. காற்று நம்மீது வீசுக.
அது நம்மை நோயின்றிக் காத்திடுக.
மலைக் காற்று நல்லது.
வான் காற்று நன்று.
ஊர்க்காற்றை மனிதர் பகைவனாக்கி விடுகின்றனர்.
..................................................................................................
..........................................................................................
அவன் வரும் வழியில் சேறு தங்கலாகாது. நாற்றம்
இருக்கலாகாது.அழுகின பண்டங்கள் போடலாகாது.
புழுதி படிந்திருக்கலாகாது. எவ்விதமான அசுத்தமும் கூடாது.
காற்று வருகின்றான்.
அவன் வரும் வழியை நன்றாகத் துடைத்து நல்ல நீர் தெளித்து வைத்திடுவோம்.
அவன் வரும் வழியிலே சோலைகளும், பூந்தோட்டங்களும் செய்து வைப்போம்.
அவன் வரும் வழியிலே கர்ப்பூரம் முதலிய நறும்
பொருள்களைக் கொளுத்தி வைப்போம்.
அவன் நல்ல மருந்தாக வருக.
அவன் நமக்கு உயிராகி வருக.
அமுதமாகி வருக.

3. தமிழ் மக்கள், எருமைகளைப்போல எப்போதும் ஈரத்திலேயே நிற்கிறார்கள்,
ஈரத்திலேயே உட்காருகிறார்கள், ஈரத்திலேயே நடக்கிறார்கள்,
ஈரத்திலேயே படுக்கிறார்கள், ஈரத்திலேயே சமையல், ஈரத்திலேயே உணவு.
உலர்ந்த தமிழன் மருந்துக்குக் கூட அகப்படமாட்டான்.
ஓயாமல் குளிர்ந்த காற்று வீசுகிறது.
தமிழ் மக்களில் பலருக்கு ஜ்வரம் உண்டாகிறது.
நாள் தோறும் சிலர் இறந்து போகிறார்கள். மிஞ்சியிருக்கும் மூடர்
விதிவசம்ஸி என்கிறார்கள்.
ஆமடா, விதிவசந்தான்.
அறிவில்லாதவர்களுக்கு இன்பமில்லைஸி என்பது ஈசனுடைய விதி.
..................................................................................................
..........................................................................................
குளிர்ந்த காற்றையா விஷமென்று நினைக்கிறாய்
அது அமிழ்தம் நீ ஈரமில்லாத வீடுகளில் நல்ல உடைகளுடன் குடியிருப்பாயானால்
காற்று நன்று.

**மகாகவி சுப்பிரமணிய பாரதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி நிறுவனங்களின் வெற்றிகரமான செயற்பாட்டிற்கு வாழ்த்துகின்றோம்

# RAJAHS BOOK CENTRE

**Books Stationeries and Printing Items, Approved Sales Agents for :National Paper Company Limited**

NO. 111, MAIN STREET,
BATTICALOA
T.P. NO. 065 - 22371
FAX - 065 - 25341

---

காத்தான்குடியில் சகலவிதமான மின்சார உபகரணங்களுக்கும்
நாடவேண்டிய ஒரே இடம்

# NASEELA HARDWARE & ELECTRICALS

Main Street, Kattankudy - 03.
Tel/Fax : 065 - 46582, 45528, 45529
e-mail : ajwath@yahoo.com

---

சகல விதமான ஆடைத் தெரிவுகளுக்கும் மற்றும் பாடசாலை உபகரணங்கள், பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருட்கள், பாதணிகள் என்பவற்றை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

# சிந்துஜா டெக்ஸ்

உரிமையாளர்
ஐ.நிர்மலகாந்தன்

கல்குடா வீதி,
வாழைச்சேனை.

---

அதியுயர் விளைச்சலைத் தருகின்ற லக் பொஹொர உர வகைகளின்
**மட்டக்களப்பு மாவட்ட ஏக விநியோக முகவர் நிலையம்**

**&**

**விஜேய் கொன்ஸ்ரக்ஷன் அன்ட் கோ**
மாவட்ட உரக் களஞ்சியம்,
பட்டிருப்பு,
களுவாஞ்சிகுடி.

தொலைபேசி : 065-50002, 065-23292 தொலை நகல்: 065-23045



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி வார நிகழ்வுகள்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

FAR WINS RICE MILL
SMT HAJIYAR ROAD
ODDAMAVADI
T.P. NO. 065 – 57397/57456

A.C.M. TRADERS
HILEVEL ROAD
MEEPA JUNCTION
PADUKKA
T.P. NO. 01 - 859502

T.M.B. ENTERPRICESS
18 FOURTH CROSS STREET
COLOMBO - 11
T.P. NO. 01 - 434244/338239

JEELANEE STORES
OLD AVISAWELLA ROAD
HANWELLA
T.P. NO. 036 - 55412

D.A.DE.SILVA & SONS
NO. 155/3 DAM STREET
COLOMBO - 12
T.P. NO. 01 - 320619/434142

S.W. TRADERS
HILEVEL ROAD
PADUKKA
T.P. NO. 01 - 859837

K.S.ENTERPRICESS
65 TH CROSS STREET
COLOMBO - 11
T.P.NO.01-529074

NABAVIYAS
NO -54 MAIN STREET
OLD AVISAWELLA ROAD
HANWELLA
T.P.NO - 036 - 54581

RAHEEM HAJIYAR TRADERS
NAGALLA
T.P.NO - 035 - 67284




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

ஏறாவூர்பற்று
செங்கலடி.

**கோப் இன்**

ஏறாவூர் வடக்கு மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் துணை நிறுவனமான

**கோப் இன்**

- குளிரூட்டிய அறைகள் – சாதாரண அறைகள்
- வாகனங்கள் பாதுகாப்பாக நிறுத்தும் வசதிகளுடன் சாரதிகள் தங்கும்வசதி.
- கீழைத்தேய, மேலைத்தேய உணவு வகைகளையும், மட்டக்களப்பிற்குரிய தனித்துவமான உணவு வகைகளையும் உண்டு மகிழலாம்.

தலைமைக் காரியாலயம்,
ஏறாவூர் வடக்கு மேற்கு பல.நோ.கூ.சங்கம்,
செங்கலடி.
தொலைபேசி இல: 065-40195

கோப் இன்,
350, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொ.பேசி இல: 065-22613

---

## காத்தான்குடியில்

### ஓர் கல்விக்கான கலையகம்

HI IAB

- மாணவர் சேவையை அதன் தலையாய சேவையாய் கொண்டு அதிமிகுந்த சிறப்பான வழிகாட்டுதலில் தலை சிறந்த விரிவுரைகளுடன் கூடிய

**Computer Classes**



- சர்வதேச மொழியாம் ஆங்கில மொழியை 3 மாதத்தில் சரளமாகப் பேசப் பயிற்றுவிக்கும் உத்தரவாதத்துடனான **Spoken English** மேலும் **A/L Classes , O/L Classe**

**இது ஓர் சிகரத்தை நோக்கிய முயற்சி**

வகுப்புக்களில்
மாணவர்களுக்கு
தனித்தனி
**Computer's**

(காத்தான்குடி நகர சபைக்கு முன்னால்)

**Internatioanl**
**Academic Bureau (Pvt) Ltd.**
P.O.Box : 11, Kattankudy, Sri Lanka.

சர்வதேசத் தரச் சான்றிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலிக நவநாகரீகத்திற்கேற்ப அழகிய அனைத்து யவுளி வகைகளையும் ஒரே இடத்தில் சிறுவர் முதல் பெரியோர் வரை பெற்றுக்கொள்ளலாம். மற்றும் தெளிவான போட்டோப் பிரதிகளையும் அடையாள அட்டைகளை லெமினேட்டிங் கவர் செய்து கொள்ளவும்

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்



# சனா எம்போரியம்

இல~41, திருமலை வீதி,
செங்கலடி.
தொலைபேசி: 065-40013, 065-40578

**Restaurant**

தரமான உணவு வகைகள், காலை, பகல், இரவு நேர உணவுகள் உடன் செய்து தரப்படும். தினமும் சுவையான புரியாணி வகைகள் கிடைக்கும். நீங்கள் குடும்ப சகிதம் உணவு உண்பதற்கு மேல்மாடியில் பிரத்தியேக வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**Bakers**

தரமான, சுவையான, சுத்தமான கேக் வகைகள், சுவீட்ஸ் வகைகள் மற்றும் பேக்கரி உணவு வகைகள், பேஸ்ட்டிஸ், றோல்ஸ், சோட்டீஸ் வகைகள் தரமாகக் கிடைக்கும். உங்களது திருமண, விசேட வைபவங்களுக்குத் தேவையான கேக் வகைகள், சோட்டீஸ் வகைகள், மென் பானங்கள், தரமான புரியாணி வகைகளுக்கான ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு உங்கள் இல்லங்களுக்குக் கொண்டு தரப்படும்.

# NEW GADABY REST INN

No. 250, 252, Main Street, Kattankudy - 01.
Tel: 065-45600

"உங்கள் சேவையே எங்கள் நோக்கம்"

# KIBS TIMBER SALE CENTRE & FURNITURE SHOP

வீட்டுப் பாவனைக்குத் தேவையான மரங்கள், ஓடுகள், தளபாடங்கள் ஆகியவற்றை நியாய விலையில் நிறைவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

நாடவேண்டிய இடம்:



## கிப்ஸ் டிம்பர் சேல் சென்றர்,



பிரதான வீதி,
காத்தான்குடி - 02.
தொலைபேசி : 065-45670

உரிமையாளர் : அல்ஹாஜ். U.M.காசீம் J.P


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி மன்றங்கள்

1. மட்டக்களப்பு மாநகரசபை
2. காத்தான்குடி நகரசபை
3. கோறளைப்பற்று வடக்கு பிரதேசசபை
4. கோறளைப்பற்று மேற்கு பிரதேசசபை
5. கோறளைப்பற்று பிரதேசசபை
6. ஏறாவூர்பற்று பிரதேசசபை
7. ஏறாவூர் நகர் பிரதேசசபை
8. மண்முனைப் பிரதேசசபை
9. மண்முனை தென்எருவில்பற்று பிரதேசசபை
10. போரதீவுப்பற்று பிரதேசசபை
11. மண்முனை தென்மேற்கு பிரதேசசபை
12. மண்முனை மேற்கு பிரதேசசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org